# செங்குந்த மித்திரன்

தை 1933

7

JL
Y592ஆm211,N28
N33.7.1
158909

# செங்குந்த மித்திரன்

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் மாத வெளியீடு

ஆசிரியர்:—ம. சண்முகசுந்தர முதலியார், எம். ஏ., எல். டி.
துணையாசிரியர்:—ஜெ. தங்கவேல், பி. ஏ.

341

தொகுதி ௭ | ஆங்கீரச ௵ தைமீ | பகுதி ௧

## உள்ளடக்கம்


| | |
|---|---|
| பத்திரிகாசிரியர் முன்னுரை: செங்குந்தர் கே[illegible] செய்திகள் .... | 1 |
| மித்திரன் வாழ்த்துப் பஞ்சகம் ... | 5 |
| கோபமும் அதனால் விளையுங் கேடுகளும் ... | 6 |
| இளைஞர் பக்கம்: பிரயாணியின் கன[illegible] ... | 13 |
| புகழேந்தி-ஒட்டக்கூத்தர் ... | 18 |
| தென்னிந்திய செங்குந்தர் நான்காவது மகாநாடு | |
| தலைவர்கள் சரித்திரம் .... | 24 |
| மகாநாடு நடக்கும் இடத்தின் மாண்பு ... | 26 |
| மகாநாட்டு ஆலோசனைக் கூட்டம் ... | 32 |
| கிளர்ச்சி .... | 36 |


1-NOV1933
MADRAS

காரியாலயம்:—2/17, பவழக்கார தெரு, சென்னை.

# தென்னிந்திய
# செங்குந்த மகாஜன சங்கத்தின்
# ஐந்தாவது பொதுக்கூட்டம்

1933-ஆம் ௵ மார்ச்சு ௴ 13௳ திங்கட்கிழமை பகல் 2-மணிக்குத் திருவாரூரில் நம்மவர் நான்காவது மகாநாடு கூடுமிடத்தில் நடைபெறும்.

கிளைச்சங்கங்களுக்கு அறிக்கை

1. அதற்குள் கிளைச்சங்கங்கள் கட்டண பாக்கிகளைச் செலுத்திவிட வேண்டும்.

2. இதுவரை தலைச்சங்கத்தோடு இணைக்கப் பெறாத சங்கங்கள் அதற்குரிய கட்டணத்தை முன்னதாகவே அனுப்பி, இணைக்கப்படுவதற்கு மனு செய்துகொள்ள வேண்டும். இவ்விதம் புது மனு செய்துகொள்ளும் சங்கங்களும் தலைச் சங்கத்துப் பொதுக் கூட்டத்துக்குத் தாங்கள் தேர்ந்தெடுத்தனுப்பும் பிரதிநிதிகளின் பெயர்களைக் கூடிய சீக்கிரம் தெரியப்படுத்தவேண்டும்.

பொதுக் கூட்டத்தின் நிகழ்ச்சிமுறை

1. கடந்த ஆண்டின் அறிக்கைப் பத்திரத்தினை அங்கீகரித்தல்.

2. மித்திரனையும், கல்வி நிதியையும், கட்டட நிதியையும் விருத்தி செய்தற்கான முறைகளை ஆராய்தல்.

கிளைச்சங்கப் பிரதிநிதிகள் இக் கூட்டத்துக்குத் தவறாது வர வேண்டிக்கொள்ளப் பெறுகின்றனர்.

தெ. இ. செ. மகாஜன சங்கம்
சென்னை 25-2-33 } ம. சண்முகசுந்தர முதலியார்,
அமைச்சர்

---

செங்குந்த மித்திரன் உங்களுக்காகத் தோன்றி உங்களுக்கா கவே உழைக்கிறான். நீங்கள் அவனுக்காக என்ன செய்யப் போகிறீர்கள் ?

வருஷ சந்தா :

உள்நாடு ரூ. 1—8—0 வெளிநாடு ரூ. 2—0—0

---


# செங்குந்த மித்திரன்

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் மாத வெளியீடு

ஆசிரியர் :—ம. சண்முகசுந்தர முதலியார், எம். ஏ., எல். டி.

துணையாசிரியர் :—ஜெ. தங்கவேல், பி. ஏ.


3H)


தொகுதி—எ] ஆங்கிரச ௵ தை ௴ [பகுதி க



OFFICE OF THE ... 1-NOV 1933 MADRAS


### கடவுள் வணக்கம்

கற்கரையும்படி கரைவிக்குங் கருத்தே
கண்மணியே மணி கலந்த கண்ணொளியே
சொற்கரை யின்றிய ஒளியினுள் ளொளியே
துரியமுங் கடந்திட்ட பெரிய செம்பொருளே
நிற்கரை நிரையறு திருவருட் கடலே
தெள்ளமுதே கனியே செழும்பாகே
சற்கரையே அது சார்ந்த செந்தேனே
தனி நடராஜ என் சற்குருமணியே. (திருவருட்பா)

---

## பத்திரிகாசிரியர் முன்னுரை

## செங்குந்தர் கோட்டச் செய்திகள்

செங்குந்த உலகத்தின் எல்லாப் பாகங்களிலும் நான்காவது மகாநாட்டின் ஆரவாரம் ஒலித்துக்கொண்டிருக்கு மெனவும் குலாபிமானிகளது உள்ளங்களிலெல்லாம் ஆவலும் உற்சாகமும் பொங்கித் ததும்பிப் பெருக்கெடுத்துக்கொண்டிருக்கு மெனவும் நம்புகிறோம். தினந்தோறும் 'செங்குந்தர் கோட்ட'த்தினின்றும் வெளியேறும் பலவித பிரசாரங்கள் அன்பர்கள் ஆவலை ஒருவாறு தணிக்குமாயினும், உண்ண உண்ண உருசி மிகுவதுபோல் தங்கள் மனத்திடையெழும் வரம்பற்ற கேள்விகட்கெல்லாம் பதிலளிக்க வரும் பிரசாரங்கள் வேறு பல புதிய கேள்விகளையும் முன்னினும் பன்மடங்கான ஆவலையும் எழுப்பிவிடும் என்பதை யாம் அறிவோம். நங்குல மகாநாடு சம்பந்தமான விஷயங்களை நங்குலத்தின் ஒரு தனிப் புதல்வனாய் ஒளிரும் 'மித்திரன்' வாயினின்றும் கேட்பதிலொரு தனி விசேஷம் உண்டெனக் கருதி அவன் வருகையை ஆர்வத்தோடு எதிர்பார்ப்போர் பலரிருப்பர் என்பதையும் யாம் அறிவோம். ஆகவே, 'மித்திரன்' தன்னாலான வரை மகாநாட்டு விஷயங்களைச் சேகரித்துக் கொண்டு வருகிறான். இந்தத் தடவை அனைவரிடமும் மகாநாட்டைப்பற்றியே அதிகமாகப் பேசுவான்,

மகாநாட்டுப் பிரசுரங்களினின்றும், வரவேற்புச் சபையார் அப்போதைக்கப்போது எழுதும் கடிதங்களினின்றும், நேரில் வந்து செல்லும் பிரதிநிதிகள் கூறும் விருத்தாந்தங்களினின்றும் ஊகிக்கக்கூடிய வரையில் நமது நான்காவது மகாநாட்டுக்கான ஏற்பாடுகள் வெகு துரிதமாகவும், மும்முரமாகவும், விமரிசையாகவுமே நடந்து வருகின்றனவெனவும், அது மிகச் சிறப்பாகவே நடந்தேறும் எனவும் தோன்றுகிறது. அநேகமாக அது முதல் மகாநாட்டைப் போலவே நிறைவேறுமென எதிர்பார்க்க இடமிருக்கிறது. ஏற்பாடுகளெல்லாம் சிக்கனமான முறையிலேயே சிறப்புற நடத்துவதற்கேற்ப நடந்து வருகின்றன. பழந்தமிழ் நூல்களிலே செழிப்புக்காகப் பாராட்டப் பெற்றதும், இயற்கை வனப்புக்கள் நிறைந்திலகுவதும், பாடல் பெற்ற க்ஷேத்திரமாக மட்டுமன்றிப் பிறக்க முத்தி தரும் அத்துணைச் சிறப்பு வாய்ந்த திவ்விய திருப்பதியாகவும் சைவ சமயத்தார் போற்றி வருவதுமான ஆரூர்ப்பதியிலே அமைந்துள்ளதனாலும், அருகே மகாமகத்துக்குப் பெயர் பெற்ற கும்பகோணம் முதலிய பிரபல ஸ்தலங்கள் இருப்பதனாலும், சமயமும் மகாமக காலத்திற் கடுத்தாற்போலவே யிருத்தலாலும் பெருவாரியான மக்கள் திரண்டு வந்து மகாநாடு சிறப்புறுவதற்கு உதவி புரிவரெனவும் தோன்றுகிறது.

மற்ற மூன்று மகாநாடுகளுக்கும் இல்லாத ஒரு தனிச்சிறப்பும் இதற்கு இருக்கிறதெனலாம். சென்ற மாதந்தான் மகாநாட்டுப் பேச்சு எழுந்தது ஆயினும், ஒரு மாதத்திற்குள்ளேயே அதற்கு வேண்டிய ஏற்பாடுகளெல்லாம் வெகு தீவிரமாக நடக்கின்றன. பேச்சும் பிரயாசையும் ஆரம்பமான ஒரு மண்டல காலத்திற்குள்ளே மகாநாடு நடக்கப் போகிறது. அதுவும் சாதாரணமாகவல்ல, நாம் முன்பு கூறி யிருந்ததுபோலவே வெகு விமரிசையாக நடக்கப்போகிறது. இத்துணைக் குறுகிய கால அளவிலே இத்துணைச் சிறப்பாகக் கூடும் மகாநாடு தனிவி[illegible]யதே யன்றோ? ஆனால், செல்வத்திற் செழித்த சீமான்களும், குலாபிமானம் மிகுந்த குரிசில்களும், சிறப்பாக நமது சபாப[illegible]வள்ளலாரும் முனைந்து நின்று வேலை செய்வதை யோசிக்கின் இது ஓராச்சரியமாகத் தோன்றாது. மகாநாட்டு நடவடிக்கைகள் இப்பெரியார்களது திறமையினையும் குலப்பற்றினையும் பின்னும் விளக்கிடுமெனப் பூரணமாக நம்புகிறோம்.

இதுவரை எழாத முக்கியமான வேண்டுகோளொன்றும் இத்தருணம் எழுந்ததுபற்றி யாம் மகிழ்வெய்துகிறோம். நான்காவது மகாநாட்டில் மாதர் மகாநாடொன்றும் நடத்துதல் வேண்டும் எனக் காஞ்சி ஸ்ரீமதி அபிராமியம்மையாரும் திருச்சி திரு. சி. இராமசாமி அவர்களும் வேண்டுகோள்கள் விடுத்திருந்ததை அன்பர்கள் அறிந்திருக்கலாம். மாதர் சீர்திருத்தத்திலே கருத்துடைய வேறு அன்பர்கள் சிலரும் இதுபற்றி நமக்குச் சில கடிதங்கள் வரைந்திருந்தனர். ஆனால் நாம் வருந்தத்தக்க விதமாக, வேண்டுகோள்கள் சிறிது காலங் கடந்து வந்தனவாதலாலும், மகாநாட்டுக்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்வதற்குப் போதிய அவகாசம் இல்லையாதலாலும் நாம் நமக்கும் வேண்டுகோள் விடுத்த அன்பர்களுக்கும் சமாதானம் சொல்லவேண்டியதாயிற்று. அடுத்த மகாநாட்டிலே மாதர் மகாநாட்டினையுங் கூட்டிக்கொள்வது மிகவும் பொருத்தமாகுமென வரவேற்புச் சபையார் காரணத்தோடு கூறியுள்ள சமாதானத்தையும் இங்கு ஞாபக மூட்டுகிறோம். அதற்குள் மாதர்களிடையும் மகாநாட்டுக் கேற்ற உணர்ச்சியும் மகாநாட்டிலோர் அவாவும் ஊன்றுவதன் காரணமாக அவர்கள் தங்கள் சீர்திருத்தத்துக்காக ஒரு தனி மகாநாடு கூட்டுவது அவசியமெனக் கண்டு அதனை விரும்பி அதற்காக முயலவும் முன்னணியில் வருவார்களாயின் அன்பர்கள் மீண்டும் சமாதானத்தோடே திருப்தியடைய வேண்டியிராதெனத் திண்ணமாகக் கூறுகிறோம். ஆனால், இப்பொழுதுள்ள நிலையில் உண்மையிலேயே நங்குல மாதர் மகாநாட்டுக்கு அவசியமுண்டா எனவும், அது இப்போதே நிறைவேறாததுபற்றி வருந்துவது அவசியந்தானா எனவும் ஆராய்வோம். இதுவரை மாதர்கள் தனியே எச்சீர்திருத்தத்தையேனும் நாடினதையும் அத்தகைய தனிச் சீர்திருத்தத்தைப்பற்றி ஏதாவது பிரச்சினை எழுந்ததையும் நாம் கண்டிலேம். நமது குலத்தைப் பொறுத்த வரையில் ஆண்களுடைய சீர்திருத்தம் வேறு, பெண்களுடைய சீர்திருத்தம் வேறு என எமக்குத் தோன்றவில்லை. ஆழ்ந்து பார்க்கின் இரண்டும் ஒன்றிலொன்று கலந்தேயிருக்கின்றன என்பது புலனாம். மேலும் இதுவரை நடந்த மகாநாடுகளில் பெண்கள் விஷயங்களிலும் நாம் பிரத்தியேகமான சிரத்தை காட்டியதையும் அவர்களும் அவற்றிற் கலந்திருந்ததையும் அவர்கள் விஷயமான தீர்மானங்கள் சிலவற்றையும் நாம் நிறைவேற்றி யிருப்பதையும் அன்பர்கள் அறிவார்கள். இந்த மகாநாட்டிலும் போதிய இடவசதிகள் ஏற்படுத்தி, பெண்களைக் கட்டண மேதுமின்றி அனுமதிக்கத் தீர்மானித்து, பெருந்தொகையாக வந்து மகாநாட்டைச் சிறப்பிக்குமாறு பெண்களுக்கு வேண்டுகோள் விடுத்து வருவதிலிருந்து பெண்கள் மகாநாட்டிற் கலந்துகொள்ள எவ்வளவு அனுகூலமிருக்கிறதென்பதும், அப்படியவர்கள் கலந்துகொள்வதில் வரவேற்புச் சபையார் எவ்வளவு ஆவல் கொண்டுள்ளார்களென்பதும் விளங்கும். இருபாலார்க்கும் பொதுவாகவே நடக்கும் சமூக மகாநாட்டில் பெண்கள் தாராளமாகக் கலந்துகொள்ளலாமென்றும், அவசியமெனக் கருதும் பிரச்சினைகளைக் குறித்துப் பேசவும் தீர்மானங்களைக் கொண்டு வரவும் முன்வரும் பெண்மணிகள் வரவேற்கப்படுகிறார்களென்றும், அதற்கேற்ற வசதிகளெல்லாம் குறைவின்றி யளிக்கப்படுமென்றும் மாதர்களுக்கும் அவர்களது தனி மகாநாட்டில் நம்பிக்கை கொண்டு அதற்காக உழைக்கவும் முன் வந்த அன்பர்களுக்கும் தெரிவித்துக்கொள்ளுகிறோம். இந்த நிலையை யுணரின் தனியே மாதர் மகாநாடொன்று இப்பொழுது நடைபெறாததற்காக நாம் வருந்த வேண்டிய அவசியமே யிராதென நம்புகிறோம்.

மகாநாட்டின் ஏற்பாட்டு மும்முரத்திலிருந்தே அன்பர்கள் அதன் முடிவை நன்கறியலாம். மகாநாட்டினாலேற்படும் முதற்பயனாகிய பெருமிதமான உற்சாகத்தையும் குலாபிமானத்தையும் அனுபவித்தோரே யறிவராகையால் அவற்றைப்பற்றி விரிக்காது அன்பர்கள் அவற்றை அனுபவ வாயிலாக உணர்ந்துகொள்ளுமாறு விடுகிறோம்.

திருமண ஆரவாரத்தில் மணமகனை மறந்துவிடலாகாதென அன்பர்களை எச்சரிக்கிறோம். இதுவரை மூன்று மகாநாடுகள் மிகச் சிறப்பான முறையிலே நடந்தேறியதற்கும் நான்காவது மகாநாடும் அதற்குப் பின் வருபவையும் நடைபெறுவதற்கும் காரணமாயுள்ளவை நமது மித்திரனும் தலைச்சங்கமுமே எனக் கூற வேண்டியதில்லை. அவற்றின் தூண்டுதலாலேயே மகாநாடுகள் நடைபெறுகின்றனவென்பதையும் அப்படி மகாநாடுகள் நடைபெறுவதும் பின்னும் அவற்றைப் பலப்படுத்துவதற்கும் அவற்றின் முன்னேற்ற முயற்சிகளுக்கு ஆதரவு தேடுவதற்குமே என்பதையும் அன்பர்கள் அறியாமலிருக்கமுடியாது. இந்த மகாநாட்டிலும் அவற்றை ஆதரிக்கவும் அவற்றின் கருத்துக்கள் நிறைவேறும் வழியில் உழைக்கவும் அன்பர்கள் தயங்கார்களென எதிர்பார்க்கிறோம். ஆண்டுதோறும் சந்தா வசூலிப்பதாலேற்படும் பலவித கஷ்டங்களை யொழிப்பதற்காகப் பல அறிஞர் கூடி ஆராய்ந்ததன் பயனாக ஆயுள் சந்தா, பரம்பரைச் சந்தா ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றதாகையால் அதனாலேற்படும் பெருநன்மைகளை யோசித்து அதனை ஆதரிக்குமாறு குலாபிமானிகளை வேண்டிக்கொள்ளுகிறோம். மித்திரன் சம்பந்தமான சந்தேகங்களை நேரிற் கேட்டுத் தீர்த்துக்கொள்ளுவதற்கும், சந்தாப் பாக்கிகளை நேரிற் செலுத்துவதற்கும், புதிய சந்தாதாரராகச் சேருவதற்கும், பரம்பரைச் சந்தாவை ஏற்றுக்கொள்ளுவதற்கும் மகாநாட்டுக் கொட்டகையிலேயே காரியாலயமமைத்து வசதிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றனவென்பதை நேயர்கட்குத் தெரிவித்துக்கொள்ளுகிறோம். சோதரவாஞ்சை, குலாபிமானம், பொதுநல நோக்கம், சமூகசேவை முதலியவற்றின் நறுமணங்கள் ஒருங்கு சேர்ந்து கமழும் இச்சமயமாவது அன்பர்களது இதயங்களிற் குலப்பணிக்கேற்ற தூய உணர்ச்சியினை எழுப்புமாக!

ஜெ. த.


விளம்பர விகிதம்

| | | ஒரு வருஷம் | ஆறு மாதம் | மூன்று மாதம் | ஒரு மாதம் |
|---|---|---|---|---|---|
| ஒரு பக்கம் | ரூ. | 100 | 50 | 26 | 10 |
| ½ ,, | ,, | 60 | 30 | 16 | 6 |
| ¼ ,, | ,, | 40 | 20 | 11 | 4 |

ஆர்டருடன் பாதிபணம் அட்வான்ஸ் அனுப்பவேண்டும்.

மானேஜர் : செங்குந்த மித்திரன் ஆபீஸ், 2/17, பவழக்காரத் தெரு, சென்னை.

# திருச்செங்குந்தர் கோட்டத்தைத் தரிசித்ததற்கு அடையாளமாகத் தாங்கள் என்ன இலாஞ்சினை நாட்டப் போகிறீர்கள்? மகாநாட்டுத் திருவிழா வைபவத்தைக் கண்டு களித்துத் திரும்பும்போது ஞாபகார்த்தமாக என்ன வாங்கிச் செல்லப் போகிறீர்கள்?

புண்ணிய க்ஷேத்திரங்களுக்குச் செல்வோர் அங்கே ஞாபகார்த்தமாகத் தமது பெயர்களை எழுதிவிட்டு வருவதும், திருவிழாக்கள் பார்க்கச் செல்வோர் ஞாபகார்த்தமாக ஏதோ சில பொருள்களை வாங்கிக்கொண்டு திரும்புவதும் வழக்கமல்லவா?

செங்குந்தர்களுக்குத் தங்கள் சமூக மகாநாட்டினும் சிறந்த திருவிழா எது? அது நடைபெறும் திவ்விய திருப்பதியினும் புண்ணியமான க்ஷேத்திரம் எது? "செங்குந்தர் கோட்ட"த்துக்குச் சென்று திரும்புவோர் அங்கே தமக்காக விரித்துவைக்கப்பட்டிருக்கும் பாம்பரைச் சந்தாதாரர் பதிவுப் புத்தகத்தில் தமது பெயரைப் பதித்துவிட்டு வருவதினும் அரிய அடையாளமுண்டா? ஞாபகார்த்தமாக வாங்கிச் செல்லுதற்குச் செங்குந்தகுலப் புகழ்ப் பொக்கிஷமாகிய 'செங்குந்தர் பிரபந்தத் திரட்'டினையும் 'மித்திரன்' பழைய பிரதிகளையுங் காட்டிலும் தகுதியான பொருள்களுண்டா?

மித்திரனுக்குச் சந்தாத் தருமம் செய்துவிட்டு, பரம்பரைச்சந்தா ரிஜிஸ்டரில் தமது கையொப்பத்தைப் பதித்துவிட்டு, கை நிறைய பிரபந்தத்திரட்டுக்களையும் மித்திரன் பழைய பிரதிகளையும் அடுக்கிக்கொண்டு ஊருக்குப் புறப்படும் குலாபிமானிகளினும் புண்ணிய சீலர்களுண்டோ?

---

## பரம்பரைப் பொக்கிஷம்!

**ஆஸ்தி யொரு புறம்!!** **தருமமொரு புறம்!!**

அன்பு சான்ற அறிஞர்களே!
குந்தர் குலத் தோன்றல்களே!
குலாபிமானிகளே!

உண்மையிலேயே உங்கள் குடும்பத்துக்கு என்றுங் குறையாத பொக்கிஷத்தைத் தேடிவைக்க நீங்கள் விரும்புகின்றீர்களா? அப்படியாயின் இன்றே நமது குலச் செல்வனும் 'செங்குந்த மித்திர'னுக்குப் பரம்பரைச் சந்தாதாரராகச் சேருங்கள். இதுபற்றி உங்களிடம் வரும் தலைச்சங்கப் பிரசாரகர்களிடம் ரூ. 30/-செலுத்திவிட்டீர்களாயின் உங்கள் குடும்பத்தார் தலைமுறை தலைமுறையாகச் 'செங்குந்தமித்திர'னை வாசித்துவரலாம். அதனால் நங்குலம் இதுவரை அடைந்துள்ள சீர்திருத்தமும் நலன்களும் தாங்கள் அறியாதவை யல்லவே? அது எத்தனை ஏழை மாணவர்க்குக் கல்விக் கண் திறக்கின்றது? எத்தனை யாயிரம் மக்களிடை அறிவுச் சுடரை எழுப்புகின்றது? அத்தகைய குலத்தீபம் என்றும் மங்காத வழியினைத் தேடுவது அவசிய மல்லவா? அதற்காகச் சொற்ப தொகையைக் கொடுப்பது பெரும் புண்ணிய மல்லவா? அத்தகைய புண்ணியத்தினைச் சம்பாதிப்பது தங்களைப் போன்ற அறிஞர்கட்கும், குலாபிமானிகட்கும், செல்வச் சீமான்கட்கும் கடமை யல்லவா?

இங்ஙனம்: தங்களது ஆதரவில் முழு நம்பிக்கை கொண்டுள்ள
ம. சண்முகசுந்தர முதலியார், ஆசிரியர்.



# செங்குந்த மித்திரன் ஏழாவதாண்டு வாழ்த்துப் பஞ்சகம்

[கண்டாச்சிபுரம் திரு. வை. ச. இராமலிங்க முதலியாரவர்கள்]

திருவளர்ந் தோங்கும் பாரதகண் டத்தின்
திலகமாஞ் சென்னைமா நகரில்
மருவுசண் முகசுந் தரமொடு சபாபதி
வள்ளல்செங் குந்தமா குலச்சீர்
பெருகுவான் வேண்டித் திருவுளத் துன்னிப்
பேதைய ரறிஞர்யா வர்க்கும்
குருவினை நிகர்க்குஞ் செங்குந்த மித்திரன்
குலவிடப் புரிந்தனர் மாதோ.

மித்திரன் இளமா மதியென வோங்கி
விரும்புமெய் யறிஞர்கள் வரையுஞ்
சித்திரம் பெறுநல் வியாசமா தியவுந்
தேவதே வன்புகழ் முதலாம்
எத்தகு நூலின் விளக்கமு மேனை
இன்மொழி களுங்கொண்டு மேலோர்
வைத்தமா நிதியை யொத்திது வரையும்
வளர்ந்தனன் மூவிரண் டாண்டே.

ஆண்டிரு மூன்று மானதா லிற்றை
யாண்டினு மவ்வளன் யாவும்
பூண்டிட பகவான் பொன்னகர் வாழ்வைப்
பூணுமா றருள்புரி தணிகை
ஆண்டவ னருளைக் காருக வெனவே
அன்பர்காள்! அனுதினந் துதித்து
வேண்டுவீர் மித்ரன் மிகப்பல காலம்
விளக்கமுற் றிருந்துவாழ்ந் திடவே.

நங்குலத் தடையும் மாசிரு ணீக்கும்
நல்லருட் டீபமா மிதனை
மங்கலில் லாமல் வளர்த்திட வேண்டும்
மற்றிதற் குளவுமுண் டதுதான்
தங்கள்தங் கள்சந் தாவெனு நெய்யைத்
தளர்விலா திடுகுவீ ராயின்
பொங்குதன் சுடர்விட் டெழுந்தொளி பரப்பிப்
பொலியும்பல் லாண்டுபல் லாண்டே.

வாழிசெங் குந்த மித்திர னதனை
வளர்க்குமா சிரியர்கள் வாழி
வாழிநல் வியாசஞ் செய்திகள் பலவும்
வழங்குவோர் நன்னயம் பெற்று
வாழிசந் தாதார் வாழிசெங் குந்த
மரபின ரனைவரும் வாழி
வாழிசூர் தடிந்த வள்ளல்நன் னருளால்
மதிகதிர் போன்றுவா ழியவே!

சுபம்! சுபம்! சுபம்!

# கோபமும் அதனால் விளையுங் கேடுகளும்

[திருவாளர் வை ச. இராமலிங்க முதலியார் அவர்கள், கண்டாச்சிபுரம்]

கோபம் என்பது உள்ளக் கொதிப்பினால் மனத்தினின்றும் பொங்கி யெழுமோர் துர்நெகிழ்ச்சி, ஒருவன் யாது காரணம் பற்றியோ, அறிவின்மையாலோ, தமக்குத் தீங்கு செய்த விடத்து உண்டாகும் சினத்தை வரம்பின்றி மிகுதியாகக் கொள்வதே கோபமெனப்படும். கோபம், சீற்றம், சினம், வெகுளி, முனிவு, செயிர்ப்பு, இவைகள் ஒரு பொருட் பன்மொழிகள். கோபமென்பது அரிஷ்டவர்க்கங்களாறினுளொன்று. மற்றவை, காமம், லோபம், மோகம், மதம், மாற்சரியம் எனப்படும். இவ்வறுவகைக் குற்றங்களில், யாதேனுமொன்று ஒருவனிடத்தி லிருந்தாலுங்கூட, அவன் கண்டிப்பாய்ப் பிறரால் இகழ்வதற் குரியவனாகிறான். சிறியோர்கள் முதல் பெரியோர் யாவரும் அவனை இகழா நிற்பார்கள். கோபம் ஏற்படுங்கால் நம்மறிவு சிதைந்து முகவொளி மழுங்கி, குதுக்ரல் பெருகி, வன்சொல் வளர, நந்தேக நிலை முற்றினு மாறுதலடைகின்றது. ஆழ்ந்த அறிவுடைத்தாலென்ன? ஆரவன்புடைத்தாலென்ன? கோபந் தியுற்றவுடனே, அவைகளெல்லாம் மாய்ந்து போகின்றன. "எல்லாம் வெகுண்டார்முன் றோன்றாக்கெடும்" என்ற ஆன்றோர் முதுமொழிப்படி கோபம் மிகும் பொழுது நன்மை தீமையொன்றுந் தோன்றாமற் கெடுகின்றவர் பலர். இவ்வுலகத்தி லக்கினியானது சரீரத்தை மட்டுந் தகிக்கக் கூடியது. கோபாக்கினியானது உள்ளத்தையும், உயிரையும், சரீரத்தையும், ஒருங்கே தகிக்கக் கூடியது. இதுவே அறிவிற் சிறந்த விவேகிகளுக்கும், செல்வர்களுக்கும், முதியோர்களுக்கும், ஏனையோரவர்க்கும் நித்திய சத்துருவாயிருந்து, அளவில்லாத நலங்கள் பலவு மழிய, தங்கணிலை தடுமாறச் செய்து பிராண சக்தியைப் பாழடையச் செய்கின்றது. ஒருவனுக்குக் கோபத்தைக் காட்டிலும் பெரிய பகை இவ்வுலகி லொன்றுமில்லை. அது எல்லா வுயிர்க்குந் தீவினை நல்கத்தக்கது; அறிவினைக் கெடுத்துக் குணம், தவம், விரதம் முதலிய யாவற்றையும் மாய்க்குந் தன்மையது. ஆனது பற்றியே,

"வெகுளியே யுயிர்க்கெலாம்
விளைக்குந் தீவினை
வெகுளியே குணம் தவம்
விரதம் மாய்க்குமால்
வெகுளியே யறிவினைச்
சிதைக்கும் வெம்மைசால்
வெகுளியிற் கொடும்பகை
வேறொன் றில்லையால்."

என்று நமது பண்டைப் பெரியோர்கள் நூல்களில் கூறி யிருக்கிறார்கள். தவிர, தீபம் போற் பிரகாசிக்கும் பேரறிவினை யுடைய தபோதனர்களிடத்திலுங்கூட, இக் கோபம் மிகுதியாகப் பிரவேசித்து, அயலார் பதைபதைத் துயிர் போகும்படியான சாபத்தைக் கொடுக்கும்படி தூண்டி, அவர்கள் ஏற்கனவே செய்திருந்த, அரிய தவங்களையும் எளிதில் ஒழிந்து போகும்படி செய்கிறது.

தேவ சபையிலே விசுவாமித்திரன் வசிட்ட முனிவரிடங் கொண்ட குரோதத்தால் சத்திய சீலனாகிய அரிச்சந்திர மகாராஜனையும், கற்பிற் சிறந்த மாது சிரோன்மணியாகிய சந்திரமதி யம்மையாரையும், படாதபாடு படுத்தி அவர்களுக்குச் செய்யத் தகாத கொடுமைகள் பலவற்றையு மிழைத்து முடிவில் தன் தவத்தை யிழந்தனன்; அவமானமு மடைந்தனன். கோபங் கொண்டதினாலல்லவா தன் அரிய தவம் போனதுமல்லாமல் அவமானமு மடைய நேர்ந்தது?

"கோபத்தாற் கௌசிகன்
தவத்தைக் கொட்டினான்
கோபத்தால் நகுடனுங்
கோல மாறினான்
கோபத்தா லிந்திரன்
குலிசம் போக்கினான்
கோபத்தா லிறந்தவர்
கோடி கோடியே."

என்று ஆன்றோர்கள் கோபத்தால் கெடுதியுற்றோர்களை இச்செய்யுளில் வெகு நன்றாக வமைத்துக் காட்டுகின்றனர்.

முன்னொரு காலத்தில் தேவர் கோமானாகிய இந்திரனுக்கு பிரமஹத்தி தோஷம் ஏற்பட்டு, அதனால் வனப்பதத்தை விட்டு நீங்க சந்திர வம்சத்திலே யுதித்த ஆயுவுக்கும் ஸ்வர்ப்பாநவிக்கும் புத்திரனாகப் பிறந்த நகுடன் (இவனே பாரதத்தில் பெயர்போன



யயாதியின் தகப்பன்) என்னுமரசன், நூறு அசுவமேத யாகஞ் செய்திருந்தமையால், அவனே அத்தேவ பட்டத்திற்குத் தகுதியானவனென்று, சதுர்முகனுந் தேவர்களுந் தீர்மானித்து அவனைத் தேவேந்திரனாக்கினார்கள். இந்திர பட்டத்துக்குப் போகிறவர்கள் முதன் முதல் சப்த ரிஷிகளால் தாங்கப் பெற்ற சிவிகை யூர்ந்து செல்வது வழக்கம். அவ்விதஞ் செல்லுகையில் நகுடன் காமாந்தகனாய் அயிராணி போகத்தி லவாவுற்று, சீக்கிரம் விரைந்து செல்லுமாறு அவ்விருடியர்களை நோக்கிக் கோபத்துடன் "ஸர்ப்ப ஏகுங்கள்! ஸர்ப்ப ஏகுங்கள்" என்று கூறினன். கடுஞ்சினத்தோடு கூறிய வார்த்தை பொறாமல் அகஸ்தியர் அவனை நோக்கி "ஸர்ப்பமாகென" (அஜகரம் என்னும் மலைப் பாம்பாகப் போகும்படி)ச் சபித்தனர். உடனே முனிவரின் சாபமேற்ற நகுடன் தனது இந்திர பதவியினின்றும் நீங்கிக் கானிடமாக வொரு பெரிய மலைப்பாம்பாயினன். என்னே கோபத்தி னியல்பு! கிடைத்த தேவேந்திர பதவியும் போய்த் தன் மானிட சரீரமும் போய்த் தாழ்ந்ததாகிய வூர்வன வினத்தைச் சார்ந்த பாம்பாகவும் போக நேர்ந்ததல்லவா?

தவிர, தேவேந்திரன் தன் குருவாகிய வியாழபகவானைத் தன் செல்வச் செருக்கினால் மதியாமலிறுமாந்திருக்க, அவர் கோபித்துச் சென்று சில காலம் மறைவாக இருந்து விட்டார். அதனால் இந்திரனது வளங்கள் யாவும் குன்றிச் செல்வம் குறையத் தலைப்பட்டது. எங்கணுங் குருவைத் தேடிப் பார்த்துக் காணாமல் திகைப்புற்றனன் தேவராஜன். குருவில்லாமலிருக்கக் கூடாதென்று திசைமுகனும் வானவர்களுங் கூறினர். அதன் பேரில் கமலாஸனன் சொல்லிய வண்ணம் துவட்டாவென்னு மசுரனின் குமாரனை விச்சுவவுருவ னென்பானைக் குருவாகக் கொண்டனனமரர் கோமான். அக்குருவானவன் வாக்கினால் தேவர்கட்காக்கங்கூறி மனத்திலும் செய்கையிலும், அசுரர்களுக்கு நன்மை யுண்டாகுமாறு மந்திரஞ் செபித்தல், ஆகுதியிடல் முதலிய யாகாதி கிருத்தியங்களை வஞ்சமாக நடத்தி வந்தனன். வாக்கினால் மனத்தால் வேறாய் மகஞ்செய் வரன் செயலை மகபதி நோக்கிச் சினந்து குருவென்றும் பாராமல் குலிசாயுதத்தால் அவன் சிரங்களை வெட்டி வீழ்த்தினன். அவன் அசுரனாயிருந்தாலும் குருவாகக் கொண்டமையால் குருவைக் கொன்ற தோஷமாகிய பிரமஹத்தி அரசனைப் பிடித்தது. குலிசாயுதமுங் குருவை வெட்டின தோஷத்தால் கருக்கு (கூர்மை) மழுங்கிவிட்டது. தன் மகனிறந்ததற்கு வருந்திய துவட்டா, இந்திரன்மேல் வஞ்சினந் தீர்த்துக்கொள்ளக் கருதி ஒரு வேள்வி செய்தனன். அதனிடமாக விருத்திரா சூரன் றோன்றினன். அவனை நோக்கித் துவட்டா, இந்திரனைக் கொன்றுவருமா றேவினன். அவ்வாறே யவ்விருத்திரன் அமரர் கோவுடன் பொருதான். இருவரும் சமர் விளைத்தனர். முடிவில் இந்திரன் வச்சிராயுதமாகிய தனது குலிசாயுதத்தை எதிரியின்மேல் விடுத்தான். முன் ஏற்கனவே அது குருவைக் கொன்ற தோஷங் காரணமாகக் கூர்மழுங்கி யிருந்தபடியால் விருத்திரனைக் கொல்ல அதனால் முடியவில்லை. பிறகு இந்திரன் இச்செய்தியை பிரம்மாவுக்குணர்த்த, பிரம்மா திருமாலிடஞ் செல்லுமா றேவ, திருமால் இந்திரனை நோக்கி, "நீ கோபம் காரணமாகக் குருவின் மேல் குலிசம் போக்கினையாதலால், அதன் கூர்மை யொளி மழுங்கிப் போய் விட்டது. அதனால் அது எதிரியை மாய்க்குந் திறல் நீங்கப்பெற்றது. ஆதலால்! நீ ததீசி முனிவரிடஞ் சென்று அவர் முதுகந் தண்டையாசித்து அதனால் நூதன குலிச நிருமாணஞ் செய்து எதிரியை வெல்லக்கடவை" என்றனர். அவ்வாறே முனிவர்பால் முதுகந் தண்டைப்பெற்று வச்சிராயுதமாக்கி, விருத்திரா சூரனை வெற்றி கொண்டனன் புரந்தரனென்பது புராண சரித்திரம்.

தெய்வப் புலமைத் திருவள்ளுவ நாயனாரவர்கள் தமது திருக்குறளில்,

"தன்னைத்தான் காக்கிற்
சினங்காக்க, காவாக்கால்
தன்னையே கொல்லுஞ் சினம்."

என்று கூறி யிருக்கிறார்கள். அதாவது கோபத்தை மீற வொட்டாமல் அடக்கிக் காக்க வேண்டியது. அப்படிக் காவாவிடின் அக்கோபம் தன்னையே கொல்லும் என்பது இதன் பொருள். இதனை விளக்க முற்காலத்தில் நடந்த தோர் சரித்திரத்தை இங்குக் கூறுவது மிக்க அவசியமுங் கடமையுமாமென்றெண்ணுகிறேன்.

பிரம்மபுத்திரனாகிய தக்கனென்பவன் மிக்க தவசிரேட்டனுயும் பலசாலியாயும் தேவர், முனிவர், அசுரர், யாவரும் நடுநடுங்கிப் பணிந்தேவல் புரியத் தனக்கு யாருமெதிரியில்லை

யென்று மகிழ்ந்து கடல்சூழ் நெடும்புவியை யாண்டுவந்தனன். தனது அரிய தவ முயற்சியால், அம்பிகையே மகளாகத் தனக்கு வந்தவதரிக்கப்பட்ட மாட்சியை யுடையவன். முழுமுதற் கடவுளாகிய சிவபெருமானைத் தனக்கு மருமகனைப் பெற்ற மாபெருந் தவத்தையுடையவன். இவ்வளவு புண்ணிய மேற்பட்டிருந்தும், அத்தக்கன் தானொருகால் கைலாயஞ் செல்லுகையில் அக்கைலாய பதியானவர் தன்னை மாமனென்று மதித்து, உபசாரணை முதலியதுஞ் செய்ய வில்லை யென்று அப்பெருமான்மீது சீற்றங்கொண்டு, அவமதித்துக் கோபத்தினால் அச்சிவ பெருமானுக்கு யாகாவிர்ப்பாகம் கொடுப்பதில்லை யென்று கூறி நிந்தனை பேசி, அச்சிவனை நீக்கியோர் யாகஞ் செய்யத் தக்கன் வீரபத்திரரால் தன் தலையிழந்தாவி துறந்தனன். அதன் வரலாறுகளை,

"தாவி சினத்தாற் றலையிழந்தான் தக்கன்மா
தேவிமக ளாயுஞ் சிவ சிவா—வாவன் மிகு
தன்னைத்தான் காக்கிற் சினங்காக்க காவாக்
தன்னையே கொல்லுஞ் சினம்" [கால்

என்று சிவ சிவ வெண்பாவி லான்றோர் அமைத்துக் கூறியிருப்பது ஈண்டுய்த்துணரற்பாலது. இக்காலத்திலும் மன்னர் மன்னர்களெல்லாம் கோபத்தினாலேயே, நாடு நகரங்கள், செல்வங்கள், அனுபவிக்கும் போகங்கள், சேனை சைனியங்கள் முதலானவைகளை இழப்பதும், தமதாருயிர் பொன்றுவதும் நாம் நேரே கண்கூடாகக் காணக் கூடியதோருண்மையான விஷயம். இவ்வுலகத்தில் மனிதர்களுக்குக் கோபமுண்டாவதற்குப் பல முகாந்திரங்க ளிருக்கின்றன. தாங்க ளெத்தனித்த காரியத்துக் கிடையூறு செய்தவர்கள் மீதும், மனைவி, புத்திரர் முதலாகிய வுயிர்ச் சார்புகளுக்குக் கெடுதி செய்தவர்கள் மீதும், தன்னை வைதவர்கள் மீதும், அடித்துத் துன்புறுத்தியவர்கள் மீதும், இன்னும் பல முகாந்திரங்களாலும் கோபம் உண்டாகிறது. இதனை,

"கோபமே பாபங்களுக் கெலாந் தாய்தந்தை
கோபமே குடிகெடுக்கும்
கோபமே யொன்றையுங் கூடிவா வொட்டாது
கோபமே துயர் கொடுக்கும்
கோபமே பொல்லாது கோபமே சீர்கேடு
கோபமே யுற வறுக்கும்
கோபமே பழி செய்யுங் கோபமே பகையாக்
கோபமே கருணை போக்கும். [கும்
கோபமே ஈனமாங் கோபமே யெவரையுங்
கூடாம லொருவ னாக்கும்.
கோபமே மறலி முன் கொண்டுபோய்த் தீயநர
கக் குழியினிற் தள்ளுமால்"

என்று சதகநூலார் கூறுகின்றனர். தவிர, இக்கோபமானது,

"சின மென்னுஞ் சேர்ந்தாரைக் கொல்லி,
யின மென்னு மேமப் புணையைச் சுடும்"

என்று திருக்குறளாசிரியர் கூறியபடி, ஒரு மூங்கிற் காட்டில், மூங்கிலானது ஒன்றோடொன்று மோதலினால், உண்டாய தீயானது அவ்வன முழுமையுமே யழித்தல் போலத் தடுக்கருங் கோபத் தீயினால் விழுங்கப்பட்டவொருவன், தானழிவது மல்லாமல் தன் பனைவி, மக்கள், சுற்றம், முதலாகிய பலருடன் அழியும்படியாகவும் பெரிய கேட்டை விளைவிக்குந் தன்மை யுடையது இக்கோபம்.

இதனை,

"மூங்கிலிற் பிறந்த முழங்கு தீ,
மூங்கில் முதலற முடிக்குமா போல
தாங்கருஞ் சினத் தீ தன்னுள்ளே பிறந்து
தன்னுறுகிளை யெலாந் தகர்க்கும்
ஆங்கதன் வெம்மை யறிந்தவர் சமையர்
லதனையுள்ளடக்கவு மடங்கா
தோங்கிய கோபத் தீயினை யொக்கு
முட்பகை யுலகில் வேறுண்டோ".

என்று ஆன்றோர்கள் செய்யுளில் கூறியிருக்கிறார்கள். இதற் கிலக்கியமாக விம் மண்ணுலகில் தன் சேனை சைனியம் பந்து மித்திராதி களத்திர வர்க்கத்துடன் மாண்டு மடிந்தவன், அரவக்கொடியோனாகிய துரியோதன மகாராஜ னென்பர். இவனுடைய சிறிய தந்தை விதுரன். விதுரன் நற்குண நற் செய்கை, ஒழுக்கம், பொறை, சாந்தம், தேவதாபக்தி முதலிய சிறந்த குணங்களால் மேம்பட்டுக் கீர்த்தி வாய்ந்தவன். இவனிடத்தில் எதிரிகளால் செயிக்க முடியாத சிவதனுசு ஒன்றிருந்தது. துரியோதனனோ மிகப் பொல்லாதவன்; கடுங் கோபி. பாண்டவர் சகாயனை பகவான் அத்தினபுரிக்குச் சுயோதனனிடந் தூதாக வந்த காலத்தில், விதுரன் பரந்தாமனுக் கோர் நல் விருந்தாற்றினன். அது காரணமாகத் துரியன் விதுரன் மீது கடுமையான சீற்றங் கொண்டு, அவனை வேசிமகனென்றுந் தாதி மகனென்று மிழித்து வசை கூறிப் பேசினன். இதனைச் செவியேற்ற விதுரன், தன்னிடம் அச்சிவதனுசிருக்



கும் பட்சத்தில் செஞ் சோற்றுக் கடனுக்காகிலும், இவனுக்குப் பரிந்து இவ் வில்லெடுத்துப் பாண்டவர்களுடன் சமர் புரிய நேருமென்று கருதினவனாய், துரியன் மீதுள்ள அறுவெறுப்பு கோபங் காரணமாகத் திடீரென்று தன்னிட மிருந்த அவ்வில்லை இரண்டாய் முறித் தெறிந்தனன். தவிர, மிக்க பராக்கிரமசாலியும் சிவனது வீரிய விருத்தியா லுற்பவித்தவனு மாகிய, அசுவத் தாமனிடம் துரியனுக்கு அவநம்பிக்கை யேற்படும்படி ஸ்ரீ கிருஷ்ணன் வான வில்லைக் காட்டித் தன் கணையாழியைக் கீழே வீழ்த்தி எடுத்துக் கொடுக்கும்படி செய்துகொண்ட காரணத்தால், 'இவர்கள் ஏதோ தங்களுக்குக்குள் ஒரு வார்த்தைப்பாடு செய்து கொள்ளுகிறார்கள். அசுவத்தாமனை நம்பக்கூடாது.' என்று ஐயங் கொண்ட துரியோதனன், பரித்தாமாவின் மேல் ஆற்றொணாக் கடுங் கோபங் கொண்டு, அது காரணமாகப் பின்னர் குருக்ஷேத்திரத்தில் பாண்டவர்களுக்குங் கௌரவர்க்குமாக நடந்த பாரத யுத்தத்தில் சிவன் சேயாயும் பலசாலியாயும் விளங்கிய பரித்தாமனுக்குச் சேனாதிபதி பட்டங் கொடுக்க மறுத்து விட்டான். இவ்விரண்டு நிகழ்ச்சியுங் கோபங் காரணமாக ஏற்பட்ட தன்றோ? இவ்விதங் குரோதத்தினால் இரண்டு பலசாலிகளாகிய விதுரன், பரித்தாமன் என்னுமிரண்டு வீரர்கள், சமயத்தில் வில்லெடுத்து யுத்தஞ் செய்யாத காரணத்தால் துரியோதனனுக்கு முடிவில் அபஜயம் ஏற்பட்டது. தானும் தன் சேனைசைனியம் பந்து வர்க்கம் மனைவி மக்களுடன் ஒருங்கே மாளவும் நேர்ந்தது. இதற்குக் காரணம் துரியனுக்கு ஏற்பட்ட கோபமன்றோ? கோபம் எத்துணைக் கொடியது பாருங்கள். ஆனால் விவகார முன்னிலையில் உலகத்தி லெவருக்கும் கோபம் வரக் கூடியது தான். அதில் உத்தமருடைய கோபமானது பிறர்க்குத் தீங்கின்றி அக்கணமே மாறிவிடும். மத்திமர்களுடைய கோபமானது சிறிது காலத்துக்குள் ஒருவருடைய முன்னிலையில் மாறுந் தன்மையுடையது. இதனைப் பொற்பிளவுக் கொப்பாகச் சொல்வார்கள். அதமர்கள் கோபமோ கற்பிளவு போல ஆயுள் பரியந்தமுமாறாது துன்பத்திற்கேதுவாகும்.

இதனை,

"கற்பிளவோ டொப்பர் கயவர்
கடுஞ்சினத்துப்
பொற் பிளவோ டொப்பாரும்
போல்வாரே—விற்பிடித்து
நீர் கிழிய வெய்த வடுப்போல மாறுமே
சீரொழுகு சான்றோர் சினம்.

என்ற செய்யுளால் நன்கு அறியலாம். இத்தன்மை போல் ஒவ்வொருவரும் தாம் கொண்ட சினத்தை உடனே மறந்து நீக்கிச் சாந்த குணத்தை யடைய முயற்சித்தல் வேண்டும். கோபங் கொண்ட வொருவன் தன்னினுந் தாழ்ந்தவரைக் கண்டனை தண்டனை செய்யச் செல்லும்போது தான் தன்னினு மேம்பட்டவரிடத்து அஞ்சி நிற்குந் தனது நிலையை, அப்போது சிந்தித்து யோசிக்க வேண்டும். அப்படிச் செய்யின் கோபம் தணிவிற்கு வந்துவிடும்.

"வலியார முற்றன்னை
நினைக்கத் தான் தன்னின்
மெலியார் மேற்
செல்லு மிடத்து"

என்ற குறள் வாக்கியம் இங்கு நோக்கத் தக்கது.

"மெலியவ ரிடத்துக் காக்கும்
வெகுளியே யறம தென்பர்"

என்று தரும நூல்களில் கூறப்பட்டிருக்கிறது. தவிர பொய்யில் புலவராகிய நாயனாரும்,

"செல்லிடத்துக் காப்பான் சினங்காப்பா
னல் லிடத்துக்
காக்கினென் காவாக்கா லென்"

என்றார். கோபஞ்செல்லிட மாகிய நம்மின் மெலியவர்கள் மேல் (ஏழைகளின் பேரில்) ஒருவன் தன் சினத்தைச் செல்லவொட்டாமல் காக்குந் தன்மையே கோபத்தைக் காத்ததாகும். நமது கோபம் பலியாத விடத்து அதனைக் காத்த லறத்தின்பாற் பட்ட தல்ல. அல்லாமலும் பெரியோர்கள் சமுகத்துச் செல்லும் நம்முடைய கோபமானது, ஒப்படியாகு மென்றால், ஒரு சிறு கோலெடுத்துக் கொண்டு ஒருவன் பெரிய மலையைத் தள்ள நினைப்பதை யொக்கும். அல்லது நம்மை யொத்தவரிடத்துச் செலுத்துங் கோபமானது, நாமெவ்வளவு கெடுதி யவர்களுக்குச் செய்விக்கிறோமோ, அவ்வளவு கெடுதியும் நமக்கு அவரால் செய்விக்கப் படுகின்றது. நம்மினுந் தாழ்ந்தவர்களிடத்து நாம் கோபத்தைச் செலுத்துவது, இம்மையில் பழியும், மறுமையில் நரகத்தையு மடைவிக்

கும். ஆனதால் நாம் ஒருவரிடத்தும் (எவரிடத்தும்) சீற்றமுறாததே நல்லது. இதுவே மேலான தென்று நூல்களில் விதித்திருக்கின்றது. இதனை,

"பெரியவர் தம்மைக் காய்ந்தால்
பிறங்கல் கல்லிய கோலொப்பான்
புரிவன புரியப்பட்டுப்
புலம்புவனொத்தார் காய்ந்தால்
எரி நரகதனில் வீழ்வன் எளியரைக்
காய்ந்தா னென்று
லொருவர் தமிடத்துஞ் சீற்ற
முறுமையே நன்று மாதோ"

என்று பிரபுலிங்க லீலையில் சிவப்பிரகாசர் கூறுகின்றனர். ஆனால் நாம் பிறர்க்கு ஒரு தீங்கு செய்யாதிருக்கவும், அவர் நம்மை அநீதியாகக் கோபித்துவைதால் நாமெவ்வாறு பொறுத்திருப்பது என்ற கேள்வியுண்டாகலாம்.

"கறுத்தின்னா செய்தவக்
கண்ணு மறுத்தின்னா
செய்யாமை
மாசற்றார் கோள்"

என்று தெய்வப் புலமையார் திருக்குறளில் கூறியபடி, கீழ்மக்களாகிய பேதையர்கள் (அறிவிலிகள்) அறிவிற் சிறந்த பெரியோர்களைப் புன் மொழிகளால் கோபித்து வைவராயின், அம்மேலோர், மீட்டும் அவ்விழிவான சொற்களைக் கொண்டு பதிலுக்குப் பதிலவர்களைத் திட்ட மாட்டார்கள். எதுபோலவெனில், இவ்வுலகத்தில் கீழ்மையான நாயொன்று ஒருவரைக் கடித்தால், அந்நாயைத் திருப்பிக் கடிக்கப் போவாரொருவரு மில்லை.

"கூர்த்து நாய் கௌவிக்
கொளக் கண்டுந் தம்வாயால்
பேர்த்து நாய் கௌவினா
ரீங்கில்லை—நீர்த்தன்றிக்
கீழ்மக்கள் கீழாய
சொல்லியக்கால் சொல்பவோ
மேன் மக்கள் தம்வாயான் மீட்டு."

தவிர, குற்றம் பொருந்திய நாவுடைய கீழோர், தகாத வார்த்தைகளைச் சொன்னால், அவர்களோடு பேசாதிருத்தலே யறிவுடையோர்களுக்குப் பெருமை. இதுவே யறிவுடையோர் செயல். இது வல்லாமல் பெரியோர்கள் தம்மை இகழ்ந்து பேசியவர்களைப் பார்த்துத் தாம் பொறுப்பது மன்றி, 'ஐயோ! எம்மை யிகழ்ந்த தீவினைப் பயனால், இவன் மறுமையில் நரகத்தை யடையப் போகிறானே என்று இரக்கமும் கொள்ளுவார்கள். என்னே! பெரியார் மாட்சி! இவ்வுண்மை,

"தம்மை யிகழ்ந்தமை தாம் பொறுப்பதன்றி மற்
றெம்மை யிகழ்ந்த வினைப்பயத்தா—லும்மை
யெரிவாய் நிரையத்து வீழ்வர்கொ லென்று
பரிவதூஉஞ் சான்றோர் கடன்".

என்ற செய்யுளில் கூறப் பட்டிருப்பதைக் கண்டு தெளிக. இவ்விதந் தங்களுக்குக் கோபத்தால் தீங்கிழைத்த கீழ் மக்களுக்குப் பெரியோர்கள், இரக்கங் காட்டுவது மல்லாமல், அவர்களுக்குத் தங்களாலான மட்டும் உதவியையும் புரிந்து எப்போதுங் காப்பாற்றுவார்கள். இது அறிவுடைப் பெருமக்களின் குணம்.

"சாந்தனையுந் தீயனவே செய்திடினும் தாமவரை
யாந்தனையுங் காப்ப ரறிவுடையோர்—மாந்தர்
குறைக்குந் தனையுங் குளிர்நிழலைத் தந்து
மறைக்குமாங் கண்டீர் மரம்".

என்றபடி, அத்தீயோர்களுக்கு நன்மை செய்யவே பெரியோர்கள் நாடுவார்கள். எதுபோலவெனின், ஒரு மரத்தின் கிளையை ஒருவன் ஒரு பால் வெட்டுந்தோறும், அம்மரத்தின் வேறொரு கிளையானது, வெட்டுகிற அம்மனிதனுக்குக் குளிர்ந்த நிழலைத் தந்துதவிக் களைப்பை யாற்றுகிறது. ஆனாலிப்படித் தங்கட்குத் தீங்கு செய்த விடத்தும், அவர்களுக்கு மீட்டு உபகாரமே செய்யும் மகான்களிவ்வுலகிலுண்டோ வெனில், உண்டு. அதைச் சொல்வோம்:

"பல்லவர்கோன் வந்துபணியக் கருணை செய்தார்
தொல்லை நெறி வாகீசர் சோமேசா!—கொல்ல
இணையெரி தோய்வன்ன வின்னா செயினும்
புணரின் வெகுளாமை நன்று".

என்று சோமேசர் முதுமொழி வெண்பா நூலிற் கூறியபடி நமது அப்பமூர்த்திகளாகிய திருநாவுக்கரசு சுவாமிகளைச் சமண சமயத்திற் புகுந்த பல்லவர்கோனென்னு மரசன், சமணர்களது துர்போதனையைக் கேட்டுப் பழிபாவங்களுக் கஞ்சாமல், நீற்றறையிலிட்டும், விடங்கலந்த பாலைக் கொடுத்துண்பித்தும், தனது பட்டத்து யானையைக் கொண்டு கொலை செய்யும்படி யேவியும், யாதொரு தீங்கு மவருக்கு நேராமை கண்டு, வியந்து, கடைசியிலவரைக் கருங்கல்லோடு சேர்த்துப் பிணித்து நடுக்கடலிற் கொண்டு போய்த் தள்ளினன். அதிலும் அவருக்கு யாதொரு கெடுதலும் சம்பவிக்காமல், வீரட்டானேசுரரது திருவருளினால் அக்கல்லே



தோணியாக மிதக்கச் சுகமாகக் கரை வந்தேறினர். பல்லவர்கோ னுண்மை யுணர்ந்து, மிகவுமச்சமெய்தி நம்பெரியாரது பாதத்தில் விழுந்து பணிந்து, "சுவாமிகாள்! தீயவஞ்சகர்களாகிய சமணர்களது துர்போதனையால் தேவரீரது பெருமை யுணராமல், அடாத காரியங்கள் பலவற்றையுஞ் செய்தனன். நாயினேன் செய்த குற்றங்களை யெல்லாம் பொறுத்து அடியேனைத் தங்களடிமையாக்கிக் கொளல் வேண்டும்" என்று மிகவும் வணங்கி விண்ணப்பித்துக் கொண்ட வளவில், சுவாமிகள் சிறிதுமவன் குற்றத்தை மனத்திற் கொள்ளாமல், அவனுக்கு விபூதி ருத்திராக்க தாரணஞ் செய்து, பஞ்சாக்கர வுபதேசமும் புரிவித்து, பழையபடி அவ்வரசனைச் சைவ சமயத்தவனாக்கினார். என்னே பெரியார்களின் இரக்கம்! கருணை!'

"உபகாரஞ் செய்ததனை யோராதே தங்க
ணபகார மாற்றச் செயினு—முபகாரந்
தாஞ்செய்வதல்லா தவத்தினாற் றீங்கூக்கல்
வான்றோய் குடிப்பிறந்தார்க் கில்".

என்ற செய்யுளுக் கிலக்கியமா யமைந்தவர்கள் நமது திருநாவுக்கரசு சுவாமிகளேயாவர். இவ்விதம் ஒருவர் கோபத்தினாற் செய்த தீமைக்கு வெகுளாது பொறுத்துக்கொண்டு, அவர்களுக்கு மறுபடியும் நாமே வுபகாரஞ் செய்வதனால் யாதேனும் பயனுண்டாவென்று உசாவுமிடத்து, மிக்க பயனுண்டு, பொன்றுந்தனையும் புகழ், என்ற பதிலே சித்திக்கும். இவ்விதஞ் செய்த பெரியார் எவரேனு முளரோவெனில், உளர். அவர் தாம் நமது அறுபான்மும்மை நாயன்மார்களிலே, விபூதி ருத்திராக்க சிவவேடமே மெய்ப்பொருளென்று கொண்டவர். இதனாலவர்க்கு மெய்பொருணாயனா ரென்று உலகம் பெயர் வழங்குவதாயிற்று.

இச்சைவப் பெரியார் சேதி நாட்டின் தலைநகராய திருக்கோவலூரிலே யாட்சி புரிந்தவர். இவரிடம் பலதரம் யுத்தம் செய்து தோற்று ஓடிப்போன முத்தநாத னென்பவன், இவரை வஞ்சகத்தால் வெல்லக் கருதிப் பசுவானது புலித்தோலைப் போர்த்துக் கொண்டு பயிரை மேய்வதுபோல், சிவனடியார் வேடம் பூண்டு, இம்மன்னரான் மனையில் பல காவல்களையுங் கடந்து, அரசனும் அரசியும் ஏகாந்தமாய்ச் சயனித்துக் கொண்டிருக்கும் அந்த புரத்தினுட் செல்ல, உடனே தேவியார் நாணி யெழுந்து நின்று, அரசனை எழுப்ப. அரசனும் வந்த பெரியாரை எழுந்து வணங்கிக் கை கட்டி வாய் பொத்தி நிற்ப, அதற்கு அவ்வஞ்சவேடம் புனைந்திருந்த கள்வன், "உங்கள் நாயனாருரைத்த வாகம நூல் இதுவரையில் வெளிவராத தொன்றை யுனக்குபதேசிக்கக் கொண்டு வந்தேன். அது ஏகாந்தமாய் நீயும் நானுந் தனித்திருந்து, நானுயர்ந்த வாசனத்திருந்து வுனக்குச் செல்ல, நீ கேட்டுச் சிந்தித்தல் வேண்டு"மென்றனன். அவ்வாறே மன்னன் தன் பத்தினியை வேறொரு விடுதிக் கனுப்பிவிட்டு, அவனை யுயர்வாகிய வோராசனத் திருத்தித் தான் கீழே நின்று, வணங்கித் தலை குனிந்து கேட்க, அப்பாதகன் புத்தக மவிழ்ப்பான் போலக் கவளிகையில் தான் மறைத்துக் கொண்டு வந்த உடைவாளை யெடுத்து மார்பில் ஓரே குத்தாக அவரைக் குத்தி விட்டான். அக்காலை நமது பெரியார் மெய்த்தவ வேடமே மெய்ப்பொருளென்று வணங்கி அக்கொடியவனைத் தொழுதார். முன்னர் முத்தநாதன் பொய் வேடந்தாங்கி உள்ளே நுழையும் பொழுதே அவன்மீதில் சந்தேகங்கொண்டு பின் தொடர்ந்து சென்ற உயிர்க்காவலாளியாகிய தத்தன், இதனைக் கண்ணுற்றதும், அக்கொடியனைத் தன் கைவாளினால் ஓரே வெட்டாக வெட்டி மாய்க்க வெத்தனித்தான். அப்போது குத்துண்டு விழப்போகுந் தறுவாயிலிருந்த நமது மெய்ப்பொருண் மூர்த்தி, "தத்தா! நம்தமர் வெட்டாதே" யென்று தடுக்க, அரசனுத்தரவுமீது அப்பாதகனுக்கோ ரிடையூறுஞ் செய்யாமல் நகருக்கு வெளியே கொண்டு போய்ச் சுகமாகவிட்டு அச்செய்தியை மீண்டு மரசனுக்கு வந்து சொல்லிய பிறகே, நமது பார்த்திபர் பரசிவப் பிரபுவின் றிருவடி நிழலை யடைந்தனர். இச்சம்பவத்தைச் சோமேசர் முதுமொழி வெண்பாவில்,

"ஒட்டலன் செய்தீமைக் கொருது நமரென்
றுரைத்தார்
சுட்டியசீர் மெய்ப்பொருளார் சோமேசா—முட்ட
ஒருத்தார்க் கொருநாளை யின்பம் பொறுத்
தார்க்குப்
பொன்றுந் தனையும் புகழ்.

என்று கூறப்பட்டிருத்தலே சான்றாயமையும். இப்பெரியார்களது திவ்ய சரித்திரத்தால், பிறர் நமக்குத் தீங்கு செய்யினும், நாம் கோபங்கொண்டு அவர்களுக்குத் தீங்கு செய்தல் கூடாதென்று செவ்வனே தெரிகின்றது. கோபத்தினாற் பாபம் வருதலால் அதை மறத்தல் வேண்டும் என்னும் பொருள்பட,

"மறத்தல் வெகுளியை யார்மாட்டுந் தீய
பிறத்தலதனால் வரும்".

என்று திருக்குறளார் கூறியிருக்கிறார்.

கோபத்தா லிருமையிலும், மனிதர்கள் பெருங்கே டடைவது நிச்சயமாகும். இது சுருதி யுக்தி யனுபவங்களால் நன்கறிந்ததோ ருண்மை. ஆனதால் கோபத்தின் வழியே செல்லுதல் குணமல்ல. கோபத்தை யடக்கிப் பொறுமையோடிருத்தலே மேலான குணம். "பொறுத்தவர் பூமி யாள்வார்" என்பது பழமொழி. பொறுத்தலே மேலான குணமென்பதை,

"உள்ளங் கவர்ந்தெழுந் தோங்கு சினங்காத்துக்
கொள்ளுங் குணமே குணமென்க—வெள்ளந்
தடுத்தலரிதோ தடங்கரைதான் பேர்த்து
விடுத்த லரிதோ? விளம்பு".

என்னும் வெண்பாவினால் ஆன்றோர்கள் நன்கு விளக்கிக் கூறி யிருக்கின்றனர். தமிழ்ப் பேரன்னையாகிய ஔவைப் பிராட்டியாரும் "ஆறுவது சினம்" என்று வெகு சுருக்கமாகவும் விளக்கமாகவுந் தமது நீதி நூலாகிய ஆத்திச்சூடியிற் கூறியிருப்பது காண்க. நித்திய சத்துருவாகிய இக்கோபமானது தணிய, இன்சொலென்கிற இனிய மருந்தை நாமுட்கொள்ளுதல் வேண்டும். அதாவது மெல்ல இனிமையாகப் பேசவேண்டும். பொறுமையை வகிக்க வேண்டும். கோபத்தை முனியவேண்டும். அதனால் நமக்கு எப்போதும் நன்மையே உண்டாகும்; கீர்த்தி மிகும். எப்பேர்ப்பட்ட கொடிய கோபமுடையவர்களையுங் கூட இன்சொலானது சாந்தமுடையவர்களாகச் செய்து விடுகின்றது. இது நோக்கித்தான் நமது பெரியோர்கள்,

"இன்சொலா லன்றி யிருநீர் வியனுலகம்
வன்சொலா லென்றும் மகிழாதே".

என்று கூறி யிருக்கிறார்கள். உலகத்தில் இனிய குயிலின் குரலை யாவரும் விரும்புகிறார்கள். கர்த்தபத்தின் குரலையோ வெறுக்கிறார்கள். இன்சொல் விளைநில மென்கிறார் பெரியோர்கள்.

"வெட்டனவை மெத்தனவை வெல்லாவாம் வேழத்திற்
பட்டுருவுங் கோல்பஞ்சிற் பாயாது—நெட்டிருப்புப்
பாரைக்கு நெக்குவிடாப் பாறை பசுமரத்தின்
வேருக்கு நெக்கு விடும்".

என்ற செய்யுளும் இங்கு நோக்கத்தக்கது. இன்சொலே கோபத்தைத் தீர்க்கும் நன் மருந்தென்பது இதனால் நன்கு விளங்குகின்றது. ஆதலால் சகோதர சகோதரிகளே! பெரியோர்களே! தர்மார்த்த காம மோட்சமென்னும் சதுர்வித புருஷார்த்தங்களை நாம் அடைய வொட்டாமல் நம்மைத் தடை செய்கின்ற நித்திய சத்துருவாகிய கொடிய கோபத்தை நீங்களறவே யொழித்து, அதற்கிலக்காகாமல் தப்பி இகபர வாழ்வடைய முயலுவீர்களாக! கோபத்தை விலக்குதலால் இம்மையிற் பெரும்புகழும், மறுமையிற் பேரின்பமாகிய முத்தியும் பெறுதல் திண்ணம். இதற்கு நம் வடிவேலிறை துணை செய்வாராக! சுபம்!

---


## நீங்கள் செங்குந்த மித்திரன் காரியாலயத்தைத் தேடிவரவில்லையாயின்

# காரியாலயம் உங்களைத் தேடிவருகிறது.

நமது நான்காவது மகாநாட்டுப் பந்தலிலே செங்குந்த மித்திரன் உங்களை வரவேற்பான். அங்கே நீங்கள் அவனோடு சாவகாசமாக அளவளாவலாம். அவனைப்பற்றிய விவரங்களனைத்தையும் தெளிவாகக் கேட்டறியலாம். அவன்பால் பரிவு கொண்டு சந்தா வழங்குவோர் வழங்கலாம்; அவனை ஆர்வத்துடன் ஆதரித்துவரும் குலாபிமானிகளது திருக்கோஷ்டியுள் ளொருவராகலாம். பரம்பரை முழுதும் அவனை ஆதரிக்கும் பெரும்பாக்கியமும் பெறலாம். அவனது பழைய மேனியையுங் காணலாம்.

அரிய சந்தர்ப்பம் வாய்த்திருக்கிறது. அதை வீணே விடாது பயன்படுத்துங்கள். இதுவரை பாக்கியைச் செலுத்த இயலாதவர்கள் இச்சமயத்திலேனும் காரியாலயத்தில் பாக்கிகளைச் செலுத்தி விட்டு வீண் செலவையும் கஷ்டத்தையும் குறைத்துக்கொள்ளுங்கள்.







# பிரயாணியின் கனவு

[E. V. சோமசுந்தரம் அவர்கள், கோவை.]

II

(புரட்டாசி மித்திரன் 221-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

[வடமேற்கு இந்தியாவில் காண்டஹார் நாட்டின் அடர்ந்த காடுகளின் வழியே வந்துகொண்டிருந்த ஒரு குதிரை வீரனுடைய குதிரையைச் சிங்கம் கொன்றுவிட, அவன் சிங்கத்தைக் கொன்றுவிட்டு நடந்து பிரயாணம் செய்தான். வழியில் ஒரு மான் குட்டியைத் தாய் மானிடம் பறித்து அதைச் சாப்பிட நெருப்பில் சுடப்போகுங்கால் அத் தாய் மான் தன்னைப் பார்த்துக் கண்ணீர் வடித்து நிற்பது கண்டு மனமிளகி அப்பிரயாணி அக்குட்டியை விடுவித்துவிட்டான். அவ்விடத்திலேயே அன்று தூங்கும்போது கனவில் அல்லாவின் தூதர் தோன்றி அவனுடைய இரக்க குணத்தை மெச்சி அதற்கு வெகுமதியாக ஆண்டவன் அவனுக்கு அந்தக் காடு இருந்த இராஜ்யத்தையே இனாமாகக் கொடுத்திருப்பதாகக் கூறி மறைந்தனர். அக்கனவைப்பற்றி நினைத்துக்கொண்டும் அது நடக்குமா எனச் சந்தேகித்துக்கொண்டும் அவன் மறுநாட்காலை பிரயாணத்தைத் துவக்கினான். இதுவே முதற்பாகத்தின் சுருக்கம்.]

அப்பிரயாணி காட்டின் நெருங்கிய இடைவெளிகளினூடே மிகவும் கஷ்டத்தோடும் அதற்கேற்ற பொறுமையோடும் தத்தித் தடுமாறி வழி நடந்தான். கடந்த இரவு அவன் துயின்ற இடத்தை விட்டுச் சிறிது தூரம் சென்றதும் மரங்கள் வெட்டப்பட்ட ஒரு இடை வெளியில் பிரவேசித்தான். அங்கு ஓரிடத்தில் எரிந்துகொண்டிருந்த நெருப்பைச் சுற்றி எட்டு மனிதர்கள் தங்கள் காலை ஆகாரத்தைச் சாப்பிட்டுக்கொண்டு உட்கார்ந்திருந்ததைக் கண்டான். அவர்கள் பகைவர்களாயின் தான் பின்னோக்கிச் சென்றாலும் தப்பமுடியாது என்று கண்டு தைரியமாக அவர்கள் அருகே சென்று அடுத்த கிராமத்திற்கு வழியெது என்று விசாரித்தான். அவர்களில் ஒரு மனிதன் எழுந்து பிரயாணியை நோக்கி, விஷமச் சிரிப்புடன், 'இங்கேயே தங்கள் பிரயாணத்தை முடித்துக்கொள்ளலாம்' என்றான்.

பிரயாணி: எப்படியும் பிரயாணத்தை முடிக்க வேண்டியது தான்—அதைப்பற்றி உன்னைக் கேட்கவில்லை. எனது வழியைக் காட்ட முடியுமானால் காட்டு; இன்றேல் உன்னுடன் வீண் வார்த்தையாட எனக்கு நேரமில்லை.

அம்மனிதன்: நல்லது! ஆனால் இக் காட்டு வழியே க்ஷேமமாய்ச் செல்லப் பிரயாணிகள் கட்டணம் செலுத்தவேண்டும்.

பிரயாணி: எனக்கு வழிகாட்டத் தேவையில்லை. கட்டணமும் கொடுக்க மாட்டேன்.

அம்மனிதன்: நான் சொல்வதைக் கவனி. நீ ஒருவனே எங்கள் எண்மருக்கும் சமமென அகம்பாவப்படாதே! புத்தியுடன் மரியாதையாகப் பேசு. நாங்கள் வழிப் போக்கரிடம் பணம் சேகரித்தும், அது தவறினால் காட்டில் கிடைப்பவைகளைத் தின்றும் ஜீவிக்கின்றோம். ஆதலால் உன் தோள் மூட்டையிலுள்ள பணமும், ஆகாரம் ஏதாவது இருக்குமானால் அதுவும் எங்களுக்குச் சொந்தம். இதற்கு மறுமொழியே கூடாது.

பிரயாணி: அப்படியாயின் நான் திருடர்களிடை யிருக்கின்றேனோ?

அவன்: ஆமாம்; அதற்கென்ன?

பிரயாணி: அதற்கென்னவா? உனக்குத் துணையாக இவ்வெழுவரல்ல, நூறுபேரிருந்

தாலும் நீ கொள்ளையடிப்பதற்கு நானாக உடன்படேன்.

அக்கள்வன் நகைத்துக்கொண்டே தன் நண்பரை நோக்கி, "இப்பிரயாணி மயிலே, மயிலே இறகு கொடு என்றால் கொடுக்கமாட்டான். கசக்கிப் பிடித்துத் தடியடி போட்டால் தான் இவன் நம்வழிக்கு வருவான்" என்று கூறிப் பிரயாணியைப் பார்த்து "திமில் போன்று உன் முதுகில் அவலக்ஷணமாய்த் தொங்கிக் கொண்டிருக்கும் உனது மூட்டையை எறிந்துவிட்டு நேராய் நில் பார்க்கலாம்"

பிரயாணி: ஒவ்வொருவனும் தன் உயிரை அதனுடைய தகுதிக்கு ஏற்றபடிதான் மதிப்பிடல் வேண்டும். நான் எனது உயிரைக் கொடுத்து என் சொத்தாகிய இம்மூட்டையைக் காத்தல் வேண்டும் என்பது ஆண்டவன் அல்லாவின் இஷ்டமாயின் உயிர் துறக்கத் தயார். எப்பொழுதும் துன்பமே அனுபவித்துத் துக்கத்தையே எதிர் பார்த்திருக்கும் ஒருவனுக்கு உயிரையிழப்பது ஒரு கடின காரியமன்று. ஆதலால் நீங்கள் இரக்கமற்ற கள்வரேயாயினும், ஒரே திடத்துடன் பிரயாணம் செய்யும் என்னைத் தடுப்பதில் ஜாக்ரதையாயிருங்கள்.

இப்படிக் கூறிவிட்டு ஒரு மரத்தையணுகித் தன் கத்தியை உருவிக்கொண்டு சாகும்வரை எதிர்த்துப் போராடும் உறுதியுடன் நின்றான்.

அத் திருடர்கள் அம்மாதிரி சமனில்லாச் சண்டைக்குத் தைரியமாக நின்ற வீரனுடைய உறுதியைக் கண்டு வியந்தனர். ஒருவன் அவ்வீரன் அறியாமலிருந்த அவனுடைய பலஹீனமான துணையற்ற நிலையைக் காட்ட வீரனுடைய வாள் பிடித்த கையானது மரத்துடன் பதிந்து போகும்படி அம்பெய்தான். அப்படி வந்து பதிந்த அம்பை வீரன் உடனே முறித்து எறிந்துவிட்டு வாளை வீசக் கையை ஓங்கினான். ஆனால் காயப்பட்ட பலஹீனத்தினால் கை மேல் நிற்காமல் கீழ் வீழ்ந்தது. உடனே அவ்வன்னெஞ்சக் கொடியர் அவனைத் தாக்கி ஆயுதங்களைப் பிடுங்கிக்கொண்டு அவன் மூட்டையைச் சோதித்தார்கள். ஆனால் அதில் ஒன்றும் மதிப்புள்ளது இல்லாததைக் கண்டு அதிலிருந்த சாமான்களைத் தரையில் விசிறி அடித்துவிட்டு, பிரயோஜனமற்ற அற்ப சாமான்களுக்காக உயிரைத் துறக்கத் துணிந்த அவன் அசட்டுத்தனத்திற்கு எள்ளனம் செய்தார்கள். வீரன், தான் சாமானுக்காகச் சண்டையிட வில்லையென்றும், கொள்ளையடிப்பதையெதிர்த்தே சண்டையிட நின்றதாகவும் கூறினான்.

முதலில் பேசின கள்வன், "இவன் பணப்பை வைத்துக்கொண்டிருக்கவில்லை. ஆகையால், இவனைக் கொண்டு நாம் ஒரு பணப்பை தேடவேண்டும். இவன் அவயவங்கள் உறமுள்ளவையாய் இருத்தலால், நன்றாய் வேலை செய்யக்கூடிய இவனுக்கு அடிமை வியாபாரிகள் நல்ல விலை கொடுப்பார்கள்" என்று கூறிப் பிரயாணியைப் பார்த்து, "உன் வலுத்த தேகத்திற்கு ஏற்ற விலை கொடுத்து வாங்குபவன் வரும்வரையும் உன் கைகாயம் மூடும் வரையும் எங்களோடு இரு. பிறகு அடுத்த கிராமத்திற்கு நீ கேட்டபடி வழி காட்டி உன்னை அனுப்பிவிடுகிறோம்" என்று பரிகாஸமாகக் கூறி முடித்தான்.

அப் பிரயாணியின் புஜத்தை அவனுடைய உருமாலால் கட்டி அவனை இரண்டு கள்வரிடையே நடக்கும்படி செய்தார்கள். ஐந்து நிமிடநேரம் அடர்ந்த காட்டின் வழியே நடந்ததும் அவர்கள் சில நாகரிக மற்ற காட்டுக் குடிசைகளுக்கு எதிரே வந்து சேர்ந்தார்கள். இந்தக் குடில்கள் பல மரங்களின் கிளைகளாலும், காட்டுச் செடிகொடிகளாலும் கட்டப்பட்டிருந்தன. மரங்கள் வெட்டப்பட்ட வெள்ளிடையில் அமைக்கப்பட்டிருந்தன. அத் திருடர் யாவரும் கல்யாணம் செய்து கொண்ட குடும்பஸ்தர் ஆதலின் ஒவ்வொருவருக்கும் ஒரு ருச்சு இருந்தது. அவ்விடத்திலேயே அவர்கள் சமைப்பதும், புகைபிடிப்பதும், உண்பதும், கூட்டங்கூடிப் பேசுவதும், உறங்குவதுமாய் இருந்தனர்.

கைதியாகப் பிடிபட்டவனுக்குத் தனியாகக் காலிக் குடிசையில்லாததால் இரண்டு கள்வர் காட்டு மூங்கில் முதலிய தாவர வர்க்கங்களைக் கொண்டு இரண்டு மணி நேரத்தில் குடிசையொன்றைக் கட்டி முடித்தார்கள். ஒவ்வொரு அடிக்கொன்றாக மூங்கிலைத் தரையில் செலுத்தி இடையிடையே சிறு குச்சிகளை வைத்துக் கட்டி அவைகளுக்கு நடுவில் உள்ள பாகத்தை அகன்ற தழைகளால் மூடிவிட்டார்கள். குடிசையை மிகவும் தாழ்ந்து அடர்ந்து வளர்ந்திருந்த மரத்தினடியில் கட்டியிருந்ததால் மரத்தின் தழைப் பரப்பே கூரைக்குப் போதுமானதாயிருந்தது. உள்ளே இருந்த புல் பூண்டைச் சுத்தம் செய்து அப்புறப்படுத்தினதும் அது வசிக்கச் சௌகரியமானதாய் விட்டது.



சிறைபிடிக்கப்பட்ட மூன்றாவது நாள் வரை அவனைத் தனியே விட்டிருந்தார்கள். அவன் நல்ல திட தேகமுள்ளவனானதால் அவனது காயம் ஆறிக்கொண்டு வந்தது. ஆனால் கை பலமற்றதாகவே இருந்தது. மூன்று நாட்கள் கழிந்த பின்னர் குடிசைகளுக்கு முன்பு இருந்த வெள்ளிடைவெளிக்கு வரச் சொன்னார்கள்.

அக் கள்வர் தலைவன் பிரயாணியைப் பார்த்து, "உன் வாழ்க்கையில் ஒரு மாறுதல், அதாவது ஜீவனம் செய்யும் வகையில் வேறு முறையொன்றை, ஏற்படுத்திக்கொள்வதைப் பற்றி உன் அபிப்பிராயம் என்ன? நாங்கள் கள்வர்கள். எங்கள் தொழிலுக்கு, சமயோசித புத்தியும், துணிந்த மனமும், கடின ஹிருதயமும் வேண்டும். நீ ஒரு நல்ல தாயின் தீர மகனெனத் தோன்றுகிறாய். உலகில் உயிர் வாழும் வகையை நன்கு அறிந்தவர்களும், சாமான்களும் ஜீவனத்திற்கு வேண்டிய அவசியங்களும் சரிவரக் கிடைக்காதபோது பணங் கொடுத்து வாங்காமல் தாராளமாக எடுத்துக் கொள்வதில் சங்கோஜம் சிறிதுமில்லாதவருமாகிய எங்கள் சுதந்திரத் தொழிலை ஏற்றுக் கொள்வது உன் மனத்திற்குப் பிடிக்கிறதா?" என்று உசாவினான்.

அப்பிரயாணி, "கள்வனாக ஒப்புக்கொள்ளாத வலுத்த மனசாக்ஷி எனக்கு இருக்கிறது. நீங்கள் என்னை நம்பாதிருத்தல் நலம். நான் உங்களைக் காட்டிக் கொடுத்துவிடுவேன்" என விடையிறுத்தான்.

"நாங்கள் அப்பயம் சிறிது மின்றி உன்னைப் பூரணமாக நம்புகிறோம். ஒரு உண்மையான வீரன் தனது வீரத்தை விட்டுவிட்டுப் பயங்கொள்ளி போலத் தனது தோழர்களைக் காட்டிக் கொடுக்கமாட்டான். நாங்கள் உன்னைப் பூரணமாக நம்புகிறோம். நீ எங்கள் தலைவனாயிரு" என்றனர் அக்கள்வர்கள்.

"நீங்கள் வீரர்களைப் பற்றிக் கொண்டிருக்கும் அபிப்பிராயம் தவறானது. நீங்கள் என்னை நம்புவது தவறாகும், மூடத்தனமாகும். ஏனெனில் உண்மையான வீரர்கள் கௌரவமானவர்களாயும் இருத்தல் அவசியம். மனித சமூகத்தின் பதர்களான திருடர்களைக் காட்டிக் கொடுத்தல் ஒரு கௌரவமான காரியமாகும். அப்படிச் செய்யாவிடில் நான் நாணயமான மனிதர்களுக்குத் தீங்கிழைத்தவனாவேன்.

"இதேபோல், சோம்பியிருந்துகொண்டே பிறர் உழைப்பில் உண்டு உடுத்தி உறங்குவோரையும், நாகரிக சமூகத்தில் ஏமாற்றி வயிறு வளர்ப்போரையும், மக்களின் அறியாமையையும், மூடத்தனத்தையும், பயத்தையும் தங்கள் சுய நலத்திற்கு உபயோகித்து, மக்களை மிரட்டி மயக்கி, வெறிகொள்ளச் செய்து மதத்தின் பேராலும், தெய்வத்தின் பேராலும், தேசத்தின் பேராலும், கக்ஷிகளின் பேராலும், மற்ற எந்தச் சாக்குகளின் பேராலும் வாழ்க்கை நடத்துவோரையும் அநுமதித்தலும், பயத்தினாலோ, தங்கள் சுய நலத்தினாலோ தெரிந்தும் தெரியாதவர்போல் இருந்து அவர்கள் வழியே அசட்டையாக விடுதலும் உலகிற்கு அபகாரம் செய்தது ஆகும். அன்றி ஒரு தொழிலிலுள்ளோர், தங்களோடு வேலை செய்பவர் பலரோ, சிலரோ, சரிவர வேலை செய்யாமலும், அல்லது ஒப்புக்குப் பாசாங்கு செய்து வீண் காலவிரயம் செய்து கொண்டும் இருந்தால், அதைச் சரிப்படுத்த, ஒழுங்குபடுத்த முயற்சி செய்யாமல், அவ்வழியே விட்டுவிட்டு, அவர்மேல் வீண் பொறாமை கொண்டு, மனத்தில் புகைந்துகொண்டு மட்டும் இருத்தலோ குற்றமாகும்; கோழைத்தனமாகும். அன்றி அத்திருட்டுக்கு அல்லது அநியாயத்திற்கு, ஒழுங்கற்ற வாழ்க்கை முறைக்கு, ஏமாற்றத்திற்கு, பலருக்கு ஹிம்சை உண்டாக்கும் அநீதிக்கு, அசத்தியத்திற்கு எதிர்த்துப் போராடாது விடுதல், மேலும் அதற்கு ஆதிக்கமும், நீண்ட ஆயுளும், ஆதரவும் கொடுத்து ஒத்துழைத்தது போல் ஆகும். அன்றி அவர் கர்மபலன் அது, புண்ணியத்தின் பயன் அது, கடவுளின் ஆக்ஞை அது, நமது தலைவிதி இங்ஙனம் பெருஞ் சுமை தூக்கல் என்று மௌடீகமான மூடநம்பிக்கையும் மூடத்திருப்தியும், பயங் கொள்ளித்தனமான போலிச் சாந்தமும் கொண்டிருத்தலும் உலக நாகரிகத்தின் பிற்போக்கையும் மனித சமூகத்தின் அழிவையும் அடிமைத்தனத்தையும் உண்டாக்கும்.

ஆதலால்,

'அடித்துப் பிடித்து என்னை துடித்துத் துடிதுடிக் கடித்துக் கடித்து இரத்தம் குடித்திடினும்,' [கக் உங்களைச் சாரேன் உங்கள் திருட்டுத் தொழிலைக் கைக்கொள்ளேன்." என்றான்.

அதைக் கேட்ட வன்னெஞ்ச மூடனான குடிவெறியிலிருந்த கள்வன், ஏதேதோ உளறுதே! நீ தைரியசாலி என்று இதுவரை நினைத்தேன். ஆனால் வீண்வாய் டாம்பீகப் பறை

யடிக்கும் பட்டணை முட்டாள் என்று கண்டேன். நீ குதிரை மேய்ப்பதற்கும் அடிமை வேலை செய்வதற்கும் தான் லாயக்கு. அப்படிப்பட்ட வேலை ஒன்றை உனக்குச் சீக்கிரத்தில் செய்து வைக்கிறோம்' என்றான். நம் வீரன், அவனை உருக்கிவிழித்து, "என்கை கட்டியிருப்பதால் பிழைத்தாய்" என்று கட்டியிருந்த தன்கையைத் தூக்கிக் காண்பித்துவிட்டு, "பயங்காளிகள் ஆபத்தில்லாமலிருக்கும் சமயத்தில் மிகவும் தைரியசாலிகள்தான். காயப்படுத்திக் கட்டப்பட்டிருப்பவனை அவமதிப்பது உன் ஆண்பிள்ளைத்தனத்திற்கு அழகா?" என அதட்டிக் கேட்டான்.

இவ்வாக்கியம் கள்வனின் ஆணவத்தைக் கிளப்பியது. ஆயினும் அவன் நற்குணம் மேம்பட்டு, "எங்களுடைய கௌரவத்தைப் பற்றிய எண்ணத்தைப் போல் தான் எங்களுடைய தைரியத்தைப் பற்றிய அபிப்ராயமும் இருக்கும். அதைப்பற்றி நமக்குள் பேதமே இருக்கட்டும். நீ எங்களோடு சேரப் போவதில்லை ஆதலால் உன் போஷணைக்கான செலவை உன்னைக் கொண்டே வசூலிக்க நாங்கள் ஏற்பாடு செய்யவேண்டும்" என்று கூறி நகர்ந்தான்.

பின்னர்ச் சிறிது நேரம் வழி நடந்த பிறகு காட்டின் இறுதியை ஒட்டினாற் போலிருந்த கிராமம் ஒன்றிற்கு வந்து சேர்ந்தனர். அக்கிராமத்தில் மிக எளிய குடிசைகள் சிலவே இருந்தன. அவைகளில் வசித்திருந்தவர் தாழ்ந்த வகுப்பினர் என்று கூறப்படுவோரே. சிறிது நேரம் கழித்து அடிமை வியாபாரி ஒருவன் அங்கு வந்து அவ்வழிப் போக்கனை அக் கள்வரிடமிருந்து அழுத்தமான பேரம் செய்து விலைக்கு வாங்கிக்கொண்டான்.

பிரயாணியின் மனம் என்ன ஏமாற்றமும் வருத்தமும் உற்றிருக்கும் என்று வாசக நேயர்களே யோசித்துப் பார்க்கும்படி விட்டுவிடுகிறேன். நம் பிரயாணி கண்ட கனவிற்கு நேரெதிராக, பெரிய அரசனாவதற்குப் பதிலாக, மாறாக, எவரும் விரும்ப முடியாத ஒரு உயிரற்ற பொருள் போல் மிருகம் போல் விலைக்கு வாங்கப்பட்ட அடிமையாய் அவ்வர்த்தகனுடன் விடைபெற்றான். ஆனால் அம்மாதிரியான அசம்பாவிதமான கனவு, மூளை அதிர்ச்சி அல்லது உள்ள நெகிழ்ச்சியால் ஏற்படும் ஒரு மனோ கற்பிதம் என்றும், அத்தகைய கனவு நனவில் நடைபெறும் என்று ஒரு வினாடி எண்ணுதலும் அறிவின்மை என்றும், தான் சில நிமிஷ காலம் கொண்டிருந்த மூடத்தனமான நம்பிக்கை அவமானத்தைத் தரக்கூடியதேயாம் என்றும் உணர்ந்தான்.

பின்னர் விசனத்துடன் இருப்பதால் ஒரு பிரயோஜனமும் இல்லை; தனக்கு நேரிட்டுள்ள சந்தர்ப்பங்களின் விதிப்பயனுக்குத் தான் உட்பட்டாக வேண்டும்; இயற்கை நியதியாம் தெய்வத்தை நம்பி, தன் உறுதியான மனசாட்சியின் போக்கில் நியாயமான வழியில் நடந்துகொள்ள வேண்டும். என்று தீர்மானித்தான்.

அவ் வீரன் தன்னுடைய அடிமையாக ஆனவுடனே அவன் காயத்தைப் பரிசோதித்து அதை நன்றாய்க் கட்டிவிட்டு, அவனுடைய கைகள் மார்பு முதலியவற்றைத் தடவிப் பார்த்து அவனுக்குத் தான் கள்வரிடம் கொடுத்த விலை வீண் போகவில்லை என்று திருப்தி யடைந்தான். அவ் வியாபாரி ஒரு மெலிந்த மனிதன். அவன் அவயவங்களும் தோலும் சுருங்கித் தொங்கின; பசுமை கலந்த ஒரு நிறமாயிருந்தான். அவனது சுண்டின முகம் தலையிலேயே பித்தநீர்ப் பை உள்ளவன் போல அவனைத் தோன்றச் செய்தது. அவன் வயது முதிர்ந்த ஒரு கிழவனைப் போல் தோன்றினானே ஒழிய ஒரு செல்வந்தனை அடிமை வியாபாரியாகத் தோன்றவில்லை. ஆனால் அவனுடன் அவன் பலஹீனத்திற்கு ஈடு கட்டுவது போலப் பலசாலிகளான அநேக வேலையாட்களிருந்தார்கள்.

நமது பிரயாணியின் பழக்க வழக்கங்களையும் பழைய தொழிலையும்பற்றிக் கேட்டு, அவை அவன் நல்ல உரம் பெற்ற தேகக் கட்டுள்ளவனென்று காட்டினதால் அவனை விற்று நல்ல லாபம் அடையலாமென்று கண்ட வியாபாரி அவனை ஜாக்கிரதையாகக் கவனித்துப் போஷிக்கும்படி ஏற்பாடு செய்தான்.

அக் கிராமத்தில் ஒரு நாள் தங்கி இளைப்பாறிவிட்டுப் பிறகு நீண்டதொரு கஷ்டமான பிரயாணம் செய்தார்கள். அதன் முடிவில் கொராஸன் நாட்டிற்கு வந்து சேர்ந்தனர். வீரன் அடிமை வியாபாரியின் வீட்டிலேயே நன்கு பாதுகாத்து வரப்பட்டான். பூரண ஆரோக்யமா யிருந்தால் ஏறின விலைக்கு விற்கலாமென்று அன்பாயும் கவனமாயும் போஷிக்கப்பட்டு வந்தான்.



அவ் வியாபாரி, பெர்ஷிய தேசத்திலேயே ஒப்பில்லாத பலசாலியான ஒரு அடிமை விலைக்கு விற்பதற்குத் தன்னிடம் இருக்கின்றான் என்று ஓர் வதந்தி கிளப்பிவிட்டு ஊர் கடோறும் விளம்பரம் செய்தான். இதனால் பலபேர் வந்து அவ் வீரனைப் பார்வை யிட்டார்கள். ஆனால் விளம்பரத்தின்படி அவன் அதி பலசாலி அல்ல என்று கண்டோ, அல்லது வியாபாரி கேட்கும் தொகை அதிகம் என்றோ, தங்களுக்கு அவ்வளவு விலை பெற்ற ஆள் தேவையில்லை என்றோ வாங்காமல் போய்விட்டார்கள்.

அவ்வடிமை வியாபாரி அவ்வீரன் போஷணைக்கு நாளுக்கு நாள் வீணாகும் செலவைக் கண்டு ஆத்திரமடைந்தான். 'சிறிது விலை குறைத்தாவது விற்றுப் பணம் கைக்கு வரும் வழியைப் பார்க்கலாம், ஏராளமாய்க் கிடைக்கும் என்று நம்பி வீண் செலவிட்டு ஏமாந்து போகக்கூடாது' என்று யோசிக்கலானான்.

அப்போது அவனுக்கு ஒரு யோசனை மனதிற் பட்டது. 'எந்த மனிதனும் அடிமையாய் இருக்க விரும்பமாட்டான், சுயமரியாதை உள்ள எவனும் அடிமை நிலைமையை அடியோடு அகற்றப் பெரிதும் ஆசை கொள்வான். ஆதலால் இவனால் நல்ல லாபத்தை எதிர்பார்த்து இதுவரை ஏமாந்து போன நமக்கு இவனாலேயே நல்ல தொகை கிடைக்கலாம்' என்னும் எண்ணம் தோன்றியதும், இது மிகவும் நல்ல புதுமையான யோசனை என்று மகிழ்ந்தான். ஒரு மனிதனுக்கு அவனுடைய சுதந்திரம் அதிக மதிப்புள்ளது; விலையிட முடியாதது. அவனுடைய அடிமைத்தனம் மற்றவருக்கு அவ்வளவு விலை யுயர்ந்தது அல்ல. ஆதலால் ஒரு அடிமை, மற்றையோர் அவன் அடிமைத் தனத்திற்குக் கொடுக்க முற்படுவதைவிட அதிகப் பணம் தானே தன் சுதந்திரத்திற்குக் கொடுப்பான் என எண்ணினான். தான் அதுவரை சொல்லி வந்த தொகையை மனத்தில் குறித்துக்கொண்டு நம் பிரயாணியிடம் வந்து அதைத் தெரிவிக்கலானான்.

"உனக்குச் சுயேச்சையாயிருக்க மிகவும் பிரியமாயிருக்கு மல்லவா?"

"பலநாள் ஆகாரமின்றிப் பசித்திருப்பவன் ஒருவனைப் பார்த்து 'உணவு வேண்டுமா? என்று கேட்பது போல் இருக்கிறது, உனது கேள்வி."

'அப்பேர்ப்பட்ட அரிய சுதந்திரத்தை அடைய நீ என்ன கட்டுகிறாய்?'

'என்ன கட்டுகிறது?'

'பணம் தான்; நான் குறிக்கும் தொகை தான்.'

"முடியவே முடியாது. இயற்கையினது—கடவுளினது—பேரருட்பிரசாதம், மனிதனது பிறப்புரிமை, அவனுடைய சுயேச்சையே. அப்பேர்ப்பட்ட சுதந்திரத்தை என்னிடமிருந்து அபகரிக்க, எனக்கு உன் கழுத்தை வெட்ட எவ்வளவு உரிமையுண்டோ, அவ்வளவு உரிமை தான் உனக்கும் உண்டு. ஆனால் அயோக்யருக்கும் திருடர்களுக்கும் உதவியாயுள்ள கொடியோனாகிய உன்னைச் சிரச்சேதம் செய்தல் முழுதும் பொருந்தின செய்கையாகும்".

இதைக் கேட்ட அக்கிழவனுடைய முகம் பிணம் போல் வெளுத்தது. அவனுடைய பேராசைக் கிடமில்லை எனக் கண்டதும் கோபங் கொண்டுள்ள அவ்வீரனுக் கெதிரில் நிற்கப் பயந்து தேள் கொட்டினவன் போல் சுண்டி வதங்கின முகத்தோடு அப்பால் சென்றான்.

இச்சம்பவத்திற்குப் பிறகு அவ்வியாபாரி வீரனைக் கடுமையாக நடத்தலானான். நாளுக்கு நாள் கழுத்தில் அடிமைப் பட்டையும் போட்டு மிகவும் கடுமையான வேலைகளைச் செய்யும்படி செய்தான். வீரன் தனது கனவிற்கு நேர் மாறாக அடிமையிலும் அடிமை யானான். ஆனால் நல்லோருக்கு இயற்கை நியதியில் நலமே விளையும்.

'வினை விதைத்தவன் வினை அறுப்பான்;
தினை விதைத்தவன் தினை அறுப்பான்'.

என்றபடி கொராஸன் நாட்டு அதிபதியாயிருந்த அலப்டுன் இந்த அடிமையின் விசேஷத்தைக் கேள்விப்பட்ட சில நாளில் அவனைத் தன் அரண்மனையில் வேலைக்கமர்த்திக்கொள்ள விரும்பினான். அவனைத் தன்னிடம் நேரில் கொண்டு வரும்படி வியாபாரிக்கும் உத்தரவிட்டான். அடிமையை நேரில் அங்ஙனமே பார்த்ததும் திருப்தி யடைந்து, அவ்வியாபாரிக்குப் பூரண திருப்தி யளிக்கக் கூடிய தொகையைக் கொடுத்து நம் வீரனை விலைக்கு வாங்கிக்கொண்டான்.

(தொடரும்)

# புகழேந்தி-ஒட்டக்கூத்தர்

(265-ம் பக்கத் தொடர்ச்சி)

["தமிழ்ப் பொழில்"]

## காட்சி உ.

இடம்:—சோழன் அரண்மனை.

உரியோர்:—குலோத்துங்கன், கூத்தர், போலிப் புலவர்கள், ஏவலன்.

ஒட்:—அரசே! வாழ்க! வாழ்க! இந்தக் கலைமகள் திருநாளில் புலவர்கட்குப் பரிசில் தந்துவரும் இத்திருவிழா, உங்கள் மரபில் நெடுங்காலமாக நடந்து வருவதாற்ருன், நமது தாய்மொழிப் பயிற்சி இவ்வளவு மேன்மையுற்றிருக்கின்றது. எத்தனையோ புலவர்கள் இத்திருவிழாவிற்கு வந்து தங்கள் புலமைத் திறங்களைக் காட்டிப் பெரும் பெரும் பரிசில்களும் பட்டங்களும் பெற்றுச் சென்றுள்ளார்கள். அரசே! இத்திருவிழா உண்மைப் புலவர்களை ஊக்கப்படுத்துவதற்கென்றே தோன்றியதாயினும் அதனை உணராமல், பாவம், போலிப்புலவர்கள் சிலரும் வந்து, தங்கள் பொழுதையும் நமது பொழுதையும் வீணுக்கி விடுகின்ருர்கள். ஐயோ! பாவம்.

குலோ:—ஆம் ஆம் புலவரேறே! அங்ஙனம் உலகினை ஏமாற்றிவரும் போலிப் புலவர்களைச் சிறைப்படுத்தி, வேண்டும் பயிற்சிகள் செய்வித்து அடுத்த கலைமகள் விழாவிற்குள் ஏதாவது கற்றுவரச் செய்திருக்கும் உங்கள் ஏற்பாடு மிகச் சிறந்ததாகவிட்டது; போலிப்புலவர்கள் வருவது வரவரக் குறைந்துபோயிற்று. சிறைப்பட்ட புலவர்களும் ஏதோ ஒருவாறு கற்றுக்கொண்டு போகின்றனர்.

ஏவ:—மகாராசா! ஒரு புலவர் கூட்டம் வருகின்றது.

குலோ:—வரச்சொல். (வருதல்)

ஒட்:—புலவர்களே! வருக! வருக! அமர்க! அமர்க! ஐயன்மீர்! நீங்கள் கலைமகள்விழாப் பரிசுபெற வந்திருக்கும் புலவர்கள் போலும்.

குயவர்:—ஆம், ஆம். நாங்கள் வெகு தூரங்களிலிருந்து வந்துளோம். தக்க பரிசுகள் தந்து அனுப்புவீர்களாக.

ஒட்:—ஐயீர்! நீங்கள் யார்! உங்கள் ஆராய்ச்சிகளைத் தெரிவியுங்கள்.

குய:—ஐயீர்! நான் கோட்டையூர் குண்டுசட்டிப் புலவர் மகன் கன்று குட்டிப் புலவர். எனக்கு இலக்கணக் கவிராயர் என்றும் பெயருண்டு.

ஒட்:—அப்படியா! தொல்காப்பியத்தில் ஒரு சூத்திரம் கூறுங்கள்.

குய:—பாடுபட்டுத் தேடிப் பணத்தை அறஞ்செய்யும் கேடுகெட்ட மானிடரே கேளுங்கள்—

ஒட்:—ஓ! ஓ! இதுதான் தொல்காப்பியச் சூத்திரமோ!

குய:—இன்னம் இருப்பதையும் கேட்டுப் போங்கள்.

—கூடுவட்டிச்
செட்டிக்கடையிலோ சேர்மான பண்டிலோ
விட்டுச்செல் லுங்களந்த வின்.

ஒட்:—ஐயீர்! போதும் போதும் இருங்கள்.

குய:—ஐயா! நானும் போதும் போதும் என்னும்படி எனக்குப் பரிசு தருதல் வேண்டும்.

ஒட:—இருக்கட்டும் ஐயீர்! தாங்கள் யார்?

தச்சர்:—பந்தநல்லூர் சந்தக்கவிச் சுந்தராசாரியார்.

ஒட்:—தங்கட்கு எத்துறையில் சிறந்த புலமையுண்டு?

தச்:—'சந்த.........ஆசாரி' எனும் இந்தப் பேரே அந்தக் கேள்விக்குத் தந்திடாதோ விடை.

ஒட்:—நல்லது. ஒரு சந்தக்கவி பாடுங்கள்.

தச்:—கொக்குக் கொக்குக் கொக்குக்
கொக்கென் றிருமாமுன்
திக்கித் திக்கித் திக்கிப் பேசித் திகையாமுன்
தக்குத் திக்கென் ருடுந் தாசியர் தமதில்லம்
புக்குப் புக்குப் புக்கே யமனடி புகுவீரே.

ஒட்:—ஓ, நல்ல பொருளமைதி! அமருங்கள். தாங்கள் யாவர்? தங்கள் புலமையினைச் சிறிது காட்டுங்கள்.



கொல்லர்:—ஐயா. யான் வல்லம் செல்லப்ப ஆசாரி மகன் திருவேங்கடப் புலவர். விசுவப் பிராமணுள். சகத்குரு—

ஒட்:—அவையெல்லாம் இருக்கட்டும். தங்கட்கு எத்துறையில் சிறந்த பயிற்சியுண்டு?

கொல்:—தல புராணங்கள் பாடுவதில் எங்கள் வமிசத்தினர் பேர் பெற்றவர். எலுமிச்சம்பழக் கவிஞர், நார்த்தம்பழக் கவிஞர் என்று கேள்விப்பட்டிருக்கலாம். எலுமிச்சம்பழக் கவிஞர் பேரன் இஞ்சிக் கவிராயர் என்றும் என்னைச் சொல்வதுண்டு. ஐம்பது தல புராணங்கள் பாடியிருக்கிறேன்.

ஒட்:—இருக்கட்டும். தல புராணங்கள் பாடுவதற்குரிய இலக்கணங்கள் யாவையோ?

கொல்:—அந்த இலக்கணங்களை யெல்லாம் சுருக்கி எங்கள் பாட்டனர் ஒரு பாட்டிலடக்கி வைத்திருக்கிருர். அதனைக் கூறுகிறேன் கேளுங்கள்.

கேளப்பா தலபுராணம் என்றொருத்தன்
கிட்டினல் அவனூரும் அதனைச் சுற்றிக்
கிடக்கின்ற பலவூரும் கேட்டுக் கொள்ளு
கிட்டியதோர் நதிகேளு கோயில் கேளு
பாழப்பா அவ்வூரொன் றுளு மஃதைப்
பகருதிருத் தலமாக்கிப் பாடு சுற்றிப்
படுமூர்கள் எவற்றினையும் பதிகளாக்கு
பாடிடுவாய் நாடுநகர்ப் படலமெல்லாம்
ஆளப்பா பாழான ஆறென் றுலும்
ஆகாச கங்கையென அதனை ஆக்கி—

ஒட்:—ஐயீர்! போதும். தாங்கள் யார்? தங்கள் புலமை யாது?

வேளாளர்:—மருதூர்கிழார் பேரர் மாணிக்கப் புலவர். எங்கள் பாட்டனர் வைத்திருந்த இலக்கணம் இன்னும் இருக்கின்றது. அவர் திதியன்று, ஐயர் அதனை எடுத்து அதன் மேலே எழுதியிருக்கும் பேரைச்சொல்லி அர்ப்பணம் செய்திடுவார்.

ஒட்:—அப்படியா? என்ன பேர் சொல்லுவார்?

வேளா:—ஏதோ தொல்காப்பியம் நாமலட்சணசாஸ்திரே அர்ப்பியாமே அர்ப்பியாமே என்பர்.

ஒட்:—(தனக்குள்) ஓ! ஓ! தொல்காப்பியம் புள்ளியில்லா தெழுதப்பட் டிருக்கின்றதைப் படிக்கும் முறை! ஐயீர்! தங்கள் புலமை யாதோ?

வேளா:—ஐயா! நாம் வரகவிதான்; படிப்புச் சுருக்கந்தான். ஆயினும் பாட்டு நன்றாகப் பாடுவேன்.

ஒட்:—அப்படியா! எப்படியாவது ஒரு பாட்டுக் கூறுவீராக.

வேளா:—

சொல்லாரும் அவ்வொட்டக் கூத்தப் புலவர்
துணையிருந்தால்
நெல்லார எய்தும் பணம்தனம் எல்லாம்
நிரம்பவரும்;
அல்லாது போனல் அடிமே லடியாய்
அடித்துத்தள்ளிப்
பொல்லாத அந்தச் சிறைச்சாலையிற்கொண்டு
போடுவரே.

ஒட்:—மிக அரிய பாடல்! ஐயீர் தாங்கள் யாவரோ? பிறவிக் குருடரோ. தங்கள் புலமை யாதோ?

குருடர்:—ஐயா! யாம்,

மன்னவர்தம் சிண்டினையும் மடக்கிப்பற்றி
மடித்தலத்தில் வைத்திடுமோர் சாதியாவேம்—

ஒட்:—நல்லது. தங்கள் புலமைத் திறத்தினைத் தெரிவியுங்கள்.

குரு:—நாம் நமது அரசன்மீது ஒரு பாட்டுப் பாடி வந்திருக்கிறோம்.

ஒட்:—மிக்க மகிழ்ச்சி. இப்புலவர்கள் ஒருவரும் எமது மன்னனைப் பாடினரல்லர். எங்கே அதனைக் கூறுங்கள் பார்ப்போம்.

குரு:—செக்கச் சிவந்த செந்தாமரைமலர்த்
திருவினெடும்
ஒக்கப் பிறந்த ஒருபெரு மாதினை
உற்றவனே!

ஒட்:—ஓய்! போதும் நிறுத்தும்! ஓ சேவகா! இவர்கள் எல்லோரையும் நமது சிறைச்சாலையிற் கொண்டுபோய்ச் சேர்த்துவிடு. ஓ போலிப் புலவர்களே! நீங்கள் ஓராண்டினில் அங்கு நம்மால் ஏற்படுத்தப் பெற்றுள்ள ஆசிரியரிடம் நன்கு கற்று வந்து தேற வேண்டும். தேறினல் உங்களுக்குப் பரிசில் தந்து விட்டுவிடுவோம். இன்றேல் மீண்டும் சிறைப்படுத்தி வைப்போம். போமின்.

ஏவலாள! விரைவிற் கொண்டு போ.

காட்சி ௫.

**இடம்:**—சோழன் அரண்மனை.

**உரியோர்:**—சிறையிலிருந்து வெளிவரும் புலவர்கள், குலோத்துங்கன், ஒட்டக்கூத்தர், புகழேந்தி, ஏவலர்.

குய:—புலவர்களே! செந்தமிழ்த்தாயின் திருமகனாகிய புகழேந்திப் புலவர் நமது தவப் பயனாலேயே சிறைச்சாலைக்கு வந்திருந்தார் எனல் வேண்டும். பாண்டிய நாட்டிலிருந்து சோழ நாட்டிற்கு வந்துகொண்டிருந்த புகழேந்தியாரைப் பாவி கூத்தன் வழி மறித்துச் சிறைக்கு அனுப்பினனாமே!

தச்:—ஆம், ஐயா, அவர் எவ்வளவு அன்புடன் நமக்கு நாடோறும் கல்விபயிற்றி வந்தனர். நீடுவாழ்வாராக என அவரை வாழ்த்துவதன்றி நாம் அவருக்குச் செய்யக் கிடக்கும் கைம்மாறு யாது?

கோல்:—ஐயா! அவர்தம் புலமைதான் என்ன புலமை! ஒட்டக்கூத்தர் ஒட்டக் கூத்தரென உலகம் புகழ்வதெல்லாம் புகழேந்தியின் புகழை அறியாததாலேயாகும். அரசர் பவனிவந்த போது இருவர் தகுதியும் வெளிப்பட்டு விட்டதன்றோ!

குரு:—ஐயா! நான்தான் புலவர் பெருமானுக்கு மிகவும் கடமைப்பட்டுள்ளேன். புறக்கண் இலனேனும், அகக்கண்ணை எனக்குத் திறந்துவிட்ட தெய்வம் புகழேந்தியன்றோ! ஐயா! பவனியன்று நடந்த செயல்களை எனக்கு விளக்கமாகச் சொல்லுவீர்களா?

**வேளா:**—அரசர் பவனி சிறைச்சாலை வாயிலில் வந்து நின்றது. புகழேந்திப் புலவர், சன்னலின் பக்கத்தில் நின்றுகொண்டிருந்தார். அரசர் பார்த்தார். 'அதோ அங்கு நிற்பார் 'பாண்டியநாட்டுப் புலவர் தலைவரன்றோ?' என்று கேட்டார். அதற்குப் புலவர்...........நினைவில்லையே, ஒரு பாட்டுக் கூறினர்.

குய:—நான் சொல்லுகிறேன்.

மானிற்கு மோஅந்த வாளரி வேங்கைமுன்
வற்றிச்செத்த
கானிற்கு மோஅவ் வெரியுந் தழல்முன்
கனைகடலின்
மீனிற்கு மோஅந்த வெங்கட் சுறாமுனம்
வீசுபனி
தானிற்கு மோஅக் கதிரோ னுதயத்திற்
றார்மன்னனே

என்பதாகும்.

**வேளா:**—ஆம் ஆம். நினைவு வந்துவிட்டது. அதுகேட்ட அரசர், புகழேந்தியாரை நோக்கினர். அக்குறிப்பறிந்த புகழேந்தியார் அரசனை நோக்கி, 'அதனை வெட்டிப் பாடலாமா? அன்றி ஒட்டிப்பாடலாமா?' எனக் கேட்டனர். அரசர் 'ஒட்டிப்பாடுக' வென, புகழேந்தியார்,

மானவன் நானந்த வாளரி வேங்கையாம்
வற்றிச்செத்த
கானவன் நானந்த எரியும் தழலாம்
கனைகடலின்
மீனவன் நானந்த வெங்கட் சுறாவதாம்
வீசுபனி
தானவன் நானந்தக் கதிரோ னுதயம்
தார்மன்னனே.

என்று பாடினர்.

தச்:—அதுகேட்ட அரசன், உடனே கதவைத் திறக்கச்செய்து, புகழேந்தியாரை வரவேற்று, ஒட்டக்கூத்தரோடு அருகே உட்காரவைத்துக்கொண்டு, அரண்மனை ஏகினன். அவ்வளவுதான் அங்கு நடந்தது.

**கோல்:**—அப்புறம் அரண்மனையில் நடந்த செய்திகள் தெரியுமோ?

குரு:—அவை என்ன கூறுங்கள்.

**கோல்:**—அரண்மனை செல்வதற்குள் பாண்டிய நாட்டிலிருந்து வந்த பணிப்பெண் ஒருத்தி, அரசிக்கு நடந்தவெல்லாம் கூறிவிட்டாளாம். அரசிக்குக் கோபமுண்டாக, தன் அரண்மனை வாயிலை அடைத்துவிடச் செய்தனளாம். அதனை அறிந்த அரசன், கூத்தர் புகழேந்தி ஆகிய இருவரொடும் சென்றானாம். முதலில் அரசியின் கோபத்தைத் தணிக்குமாறு அரசன் வேண்டியவாறு ஒட்டக்கூத்தர் பாடினாராம். அரசி, மிக்க சினங்கொண்டு, 'ஒட்டக்கூத்தர் பாட்டிற்கு இரட்டைத்தாள்' என்று கூறி, இன்னொரு தாழ் இட்டனளாம். அதன்மேல், அரசன் புகழேந்தியாரை வேண்டிக்கொள்ள, அவர் ஒரு பாட்டுக் கூறினராம். அதுகேட்டு மகிழ்ந்த அரசி, கதவைத் திறக்கச் செய்து, எல்லோரையும் வரவேற்றுக் கொண்டனளாம். ஒட்டக்கூத்தர் அரசியிடம் பொறுத்திட வேண்டிக் கொண்டனராம். புகழேந்தியார் அன்று தொட்டு அரசவையில், குலோத்துங்கன் வலது பக்கத்தில் அமர்ந்து விளங்குகின்றனராம்.



ஏவ:—ஐயன்மீர்! அரசரும் அரசியும் புலவர்களும் அவைக்கு வருகின்றனர். (வந்தமர்தல்)

அரச:—புலவர்களே! நீங்கள் கடந்த ஓராண்டில் எக்குறைவுமின்றி இனிது பயின்று வந்தீர்களா?

புல:—ஆம், ஆம், உமாமகேசன் அருளால் எங்கட்கு எத்தகைய குறையுமில்லை. நன்கு பயின்று வந்தோம்.

குய:—அரசே! யாம் இப்போது ஒட்டக்கூத்தரை எதிர்த்து முன் நிற்கச் சித்தமாயுள்ளோம்.

ஒட:—அப்படியா?

மோனை முத்தமிழ் மும்மத மும்பொழி
யானை முன்வந் தெதிர்த்தவ னாடா?

குய:—

கூனையுங் குடமுங் குண்டு சட்டியும்
பானை யும்வனை யங்குசப் பையல் யான்.

அரச:—என்ன மிடுக்கான விடை! செல்வி! அங்குசப் பையல் என்ற நுண்ணுரையினை நோக்கினையா?

அரசி:—ஆம். அம்; குசப்பையல்; யானை என்றதற்கேற்ப அங்குசப் பையல். மிக அழகிது.

ஒட்:—ஐயீர்! மாணிக்கப் புலவரே! நீரும் எதிர்த்து முன் நிற்க வந்தவர்தாமோ! அன்றி முன்போற் பாடி ஓடி ஒளிய வந்தவரோ?

வேளா:—

நோக்கண்டு மன்னர் குரைகடற் புக்கிலர்
கோக நகப்
பூக்கண்டு கொட்டியும் பூவா தொழிந்தில
பூமுழுதும்
காக்கின்ற மன்னன் கவியொட்டக் கூத்தனின்
கட்டுரையாம்
பாக்கண் டொளிப்பர்க ளோதமிழ் பாடிய
பாவலரே.

அரச:—'மன்னன் கவியொட்டக் கூத்த' என்கின்றார் இப்புலவர்; 'மன்னனது புலவன்' என்று பொருள் கூறுவதினும் மன்னனாகிய புலவன் என்று பொருள் கூறிற் சிறந்ததாகும்.

புக:—அரசே! புலவரைப் போற்றும் உமது மாண்பு வியக்கத் தக்கது.



ஒட்:—ஓ பொட்டையரோ! உமது செய்தி என்ன?

விண்பட்ட கொக்குவல் லூறுகண் டென்ன
விலுவிலுத்துப்
புண்பட்ட நெஞ்சோடு மிங்குநின் றாய்
பொட்டை
யாய்புகலாய்!

குரு:—

கண்பொட்டை யாயினு மம்பட்ட னுன்கவி
வாணர்முன்னே
புண்பட்ட செந்தமிழ் நீயுந் திடுக்கிடப்
பாடுவனே.

அரச:—ஓஹோ! இவர் விடை கூத்தரையன்றி யாவரையும் திடுக்கிடச் செய்திடுகின்றதே!

அரசி:—ஆம். அதனை அவர், நீயும் திடுக்கிட என்றதில் உள்ள உம்மையாற் சொல்லுகின்றாரோ.

அரச:—ஓஹோ! நீயும் திடுக்கிட என்று கூறுகின்றாரோ!

ஒட்:—ஐயீர்! திருவேங்கடப் புலவரே உமது செய்தி என்னையோ?

**கோல்:**—

செல்லன் புதல்வன் திருவேங் கடவன்
செகத்குருவாம்
கொல்லன் கவியைக் குறைசொல்லு
வோரை
குறடுகொண்டு
பல்லைப் பிடுங்கிப் பருந்தாட்ட மாட்டிப்
பகைவர் முன்னே
அல்லும் பகலும் அடிப்பேன் கவியிருப்
பாணிகொண்டே

ஒட்:—ஐயீர்! போதும், போதும். உமது கவியைக் குறைகூறுவார் இங்கு யாருமிரா. ஐயீர்! சந்தக் கவிராயரே! உமது செய்தி என்னவோ?

தச்:—

சொன்னசந் தக்கவி யாவரும் சொல்லுஞ்
சொற்சுவையோர்
இன்னசந் தக்கவி யேதென்ற போதி
லெதிர்த்தவரை
வன்னசந் தங்கெட வாயைக் கிழித்திந்த
வாய்ச்சியினால்
கன்னசந் தங்களி னிற்கவி யாப்பைக்
கடாவுவனே.

அரசி:—'கவியாப்பு' என்ற சொல் நயம் வியக்கத்தக்கது.

அரச:—ஆம். ஆம். இப்புலவர்கள் எல்லோரும் நன்றாகச் செய்யுட்கள் பாடுவதினால் இவர்கள் நன்கு பயின்றுளார்களென்பது தெரிகின்றது.

குய:—எல்லாம் இந்தப் புகழேந்தியார் திருவருளே. அவர் நீடு வாழ்வாராக!

அரச:—அப்படியா? புலவரேறே! எமது சிறைச்சாலை உமது திருவடியைத் தீண்ட என்ன தவஞ் செய்ததோ! அன்றி இப்புலவர்கள் தாம் என்ன தவஞ் செய்தனரோ?

அரசி:—அவரைச் சிறைப்படுத்தி இப்புலவர்கள் பாட்டுக்களைப் பெற உங்கள் புலவர், என்? நமது புலவர் ஒட்டக்கூத்தர் என்ன தவஞ் செய்தனரோ?

ஒட்:—அரசி! செல்வியாரே! யான் முன்னமே பிழைபொறுத்திட வேண்டினேனே? அன்றியும், அதன் பயனையும், நீங்கள் கூறியதுபோல் இன்று பெற்றுவிட்டேனே! இனி என்னை நாணிடச் செய்தல் வேண்டாமன்றோ?

அரச:—(கூத்தரைப் பார்த்து) நல்லது. புலவரேறே! இப்புலவர்கட்கெல்லாம் தக்க பரிசுகள் தந்தனுப்புங்கள்.

## காட்சி ச.

இடம்:—ஒட்டக்கூத்தப்புலவர் இல்லம்.

உரியோர்:—கூத்தர், வேற்றுருக்கொண்ட புகழேந்தி, கூத்தரின் புதல்வி, ஏவலன், முற்காட்சிகட்குரிய பிறர்.

கூத்தர் மகள்:—அப்பா! இதோ வைத்தியர் வந்திருக்கின்றனர். எழுந்து கை காட்டுங்கள். (காட்டல்)

புக:—ஐயீர், காலையில் மருந்துண்டீர்களா? நேற்றைக்கு இன்று, சற்று வெப்பின் வேகம் தணிந்திருப்பதாகத் தெரிகின்றதே.

ஒட்:—ஆம், கொஞ்சம் தணிவு தான், தலைவலி மிகக் குறைவு. ஐயீர்! யார் யாரோ வந்து ஏதேதோ தந்து, வாய் வயிறெல்லாம் வேகும்படி செய்துவிட்டார்கள். தாங்கள் கொடுத்து வரும் மருந்தினாற்றான் வெப்பும், இருமலும் குறைந்து வருகின்றன. உங்கட்கு மிக்க வந்தனம். நீங்கள் செய்யாமற் செய்த இப்பேருதவிக்கு வையகமும் வானகமும் ஆற்றல் அறிது.

புக:—ஐயீர்! நான் ஒன்றும் செய்துவிடவில்லை. ஏதோ என் கையிலிருக்கும் ஒரு சிறுமருந்தினைத் தங்கட்குத் தந்து வந்தேன். தமிழ் தாய்க்குப் பெருமையளித்துவரும் தங்கட்கு, இத்தமிழுலகினரெல்லாம் கடமைப்பட்டிருக்கின்றனர். அத்தமிழுலகத்திலுள்ளவர்களில் யானும் ஒருவனே. எனக்கும் அக்கடமை யுண்டல்லவா?

ஒட்:—ஐயீர்! தாங்கள் கூறியபடி நான் தமிழ்த்தாய்க்குப் பெருமை யொன்றும் செய்துவிடவில்லையே. தமிழ்ப் புலவர் என்றவரும் பலரைச் சிறையிலிட்ட கொடும் பாவியாகிய யான் எங்ஙனம் தமிழ்த்தாய்க்குப் பெருமை செய்தவன் ஆவேன்? சிறுமை செய்தவனே யாவன்.

புக:—தங்கள் செய்கை ஒரு விதத்தில் நல்லதுதானே. போலிப் புலவர்களாக வருபவர்களை ஓராண்டு சிறை புகுத்திக் கல்வி கற்றுத் தேறியவர்கட்குப் பரிசளித்து வெளி விட்டீர்கள். இச்செய்கையிற் குறைகள் இல்லையே. உங்கள் செய்கையால் உண்மைப் புலவர்களாகியோர் எத்துணையோ பேர்.

ஒட்:—ஆம்; என்றாலும் உலகம் போற்றாத செய்கையன்றோ இது? உலகத்தோடு ஒட்ட நடக்கக் கல்லாது போயினேன். என் செய்வேன். பாவம், போலிப் புலவர்கட்கு மட்டும் இடையூறு செய்தேனல்லேன்; உண்மைப் புலவர் ஒருவருக்கும் தீங்கு செய்துவிட்டேன்.

புக:—அவர் யார்? அவருக்கு என்ன தீங்கு செய்தீர்கள்.

ஒட்:—பாண்டிய நாட்டுப் புலவர் தலைவராகிய புகழேந்தியாரையும் சிறையிலிட்டு வைத்தேன். அத்தீச்செய்கை என் நெஞ்சைச் சுட்டு வந்ததாலேயே எனக்கு இவ்வெப்புநோய் உண்டாயிற்றென்றே கூறலாம். பாவம்! எண்ணிய தொன்று, உண்மை யொன்றாக முடிந்தது.

புக:—அவர் எத்தகையர்? எண்ணியதென்ன? முடிந்ததென்ன?

ஒட்:—புகழேந்தி என்பாரைத் தெரிந்து கொள்ளாத தமிழர்களும் உண்டோ? தமிழ்த்தாயின் முதல் மகன் அவரேயன்றோ! கலைமகள் அருளைப் பெற்றாருள் அவரை யொத்தார் ஒருவர் உளரோ! அவரையும் சிறையிலிட்டு வைத்தேன் பாவியேன்.—



புக:—அவர், பாண்டி நாட்டில் பெரும்புலவராக இருக்கலாம். உங்கள் முன்னிலையில் சூரியன் முன் மின்மினிதானே! அவரையும் சிறையிலிட்டுப் பயிலச் செய்வதும் தக்கதுதானே.

ஒட்:—ஐயோ! அறியாது கூறினீர்; அவர் தான் சூரியன், நானே மின்மினி. புலமை குறித்து அவரைச் சிறையிட்டேன் அல்லேன்.

புக:—பின் எதற்காகவோ!

ஒட்:—பாண்டிய மன்னன் அவைக்களத்திலிருந்த அமைச்சன் ஒருவன், புகழேந்தி இங்கு வந்து, எங்கள் அரசன் அருளைப் பெற்று, என்னைச் சிறைப்படுத்த வருகின்றார் என அஞ்சல் அனுப்பினன். அவர் தம் பெரும் புலமையை யான் அறிவேன் ஆதலின், அவர் அங்ஙனஞ்செய்துவிடக் கூடும் என்று எண்ணி, முன் ஏற்பாடாக, அவரைச் சிறையிட்டு வைத்து, உண்மை அறிய முயன்றேன். தெய்வத் திருவருளால் நடந்தன பல. உண்மையை ஆராய்ந்தறிந்த போது, அவர் அங்ஙனம் எண்ணி வந்தவர் அல்லர் என்றும், தமது மாணவியாகிய எங்கள் அரசியைப் பார்த்துப் போகவே வந்தவரென்றும், புகழேந்திப்புலவர் அங்கிருப்பதால் தங்கட்குச் செல்வாக்கில்லை யென்று கண்ட அமைச்சன் அந்த அஞ்சலை அனுப்பினானென்றும் அறிந்துகொண்டேன். அந்தோ! அப்புலவர்பால் மன்னிப்புப் பெற்றுக் கொள்ளாமலும் இறக்க நேரிட்டுளதே! மன்னிப்புப் பெற்றிருப்பேனாயின் ஆறுதலுடன் இறப்பேன்.

புக:—அப்படியா? அந்த அமைச்சன் வேலையா இது?

புதல்வி:—அப்பா! பாற் கஞ்சி கொண்டு வந்திருக்கிறேன். சிறிது பருகுங்கள்.

ஒட்:—ஓ! இப்பாவிக்குக் கஞ்சியும் வேண்டுமா?

புக:—நன்றாயிருக்கிறது! சிறிது பருகுங்கள்.

ஒட்:—இக் கஞ்சியே யன்று, புகழேந்திப் புலவரின் அமிழ்தம் போன்ற வெண்பாக்களில் ஒன்றைப் பிழிந்து கொடுத்தாலும் எனக்கு வேண்டாம்.

புக:—(தன்னுருக்கொண்டு) ஓ, புலவரேறே இவ்வுரையே என்னை உண்மைப்புலவனாக்குகின்றது! இதற்கே தவங்கிடந்தேன். யானே தங்கள் அருளைப் பெற்றுள்ள புகழேந்தி.

ஒட்:—புலவீர்! என்னைப் பொறுத்தருளல் வேண்டும். இன்னா செய்தார்க்கு மினியவே செய்யும் சான்றோராகிய பெருந்தகையீர்! உமக்குப் பற்பல வணக்கம்.

ஏவ:—புலவீர்காள்! நமது அரசரும், அரசியும், பாண்டிய மன்னரும், வேறு சில புலவர்களும் தங்களைப்பார்க்க இதோ வருகின்றார்கள்.

ஒட்:—என் நோய் முழுவதும் நீங்கிற்று. இன்றே நன்னாள்; இன்றே கலைமகள் திருநாள். (யாவரும் வருதல்) வருக! வருக! அமர்க! உங்கள் வருகையால் எனது சிற்றில் தமிழ்த்தாயின் பேரில்லம் ஆகிவிட்டது. எல்லீரும் நெடிது வாழ்வீர்களாக!

---

## நன்கொடை

கா. செங்கோட முதலியார் குமாரர் ஆறுமுகனுக்கும் ப. ரு. ஆறுமுக முதலியார் குமாரத்தி அங்கம்மாளுக்கும் நடந்த திருமணத்தில் ரூ. 1-0-0

செ. பெருமாள் முதலியார் குமாரர் செதம்பர முதலியார்க்கும் கொலந்தவேல் முதலியார் குமாரத்தி பெருமாய்யம்மாளுக்கும் நடந்த திருமணத்தில் நன்கொடை. ரூ. 1-0-0

சின்னப்ப முதலியார் குமாரர் குப்புசாமி முதலியாருக்கும் ப.மா. செல்லப்ப முதலியார் குமாரத்தி மீனாக்ஷி யம்மாளுக்கும் நடந்த திருமணத்தில் நன்கொடை. ரூ. 1-0-0

### செங்குந்தர் தறித் திருநாள்

ஆங்கீரஸஹு வைகாசி 8உ வடிவேற் குகன் மயிலேறும் புண்ணிய நாள் மணலைக் கலியாணம் பூண்டி ஸ்ரீ கற்பகவிநாயகர் சகித திருவல்லி தேவசேனா சமேத சுப்பிரமணிய சுவாமிகட்கு, பகல் விசேஷ அபிஷேக அலங்கார ஆராதனைக்குப் பின் இரவு 7 மணிக்கு மிகும்மையின் விநாயகப் பெருமானும், புள்ளிக்கலாபமயில் வாகனத்தில் ஸ்ரீ வல்லிதேவ சேனா சமேத சுப்பிரமண்ய சுவாமி இரத பீடாரோகண ஊர்வல மகோற்சவமும், உடன் மஹாபக்த சமாச கோஷ்டியார் அவர்களும் சங்கமாணவரும் தேவாராதிய அருட்பாக்களோதிய பஜனையுடனும் மிகச் சிறப்பாக நடைபெற்ற 17-வது வருட தறிமகோற்சவத்தின் ஞாபகார்த்தமாகச் செங்குந்த கனவான்கள் நமது செங்குந்த மகாஜன சங்கத்திற்கு மனமுவந்தளித்த நன்கொடை. ரூ. 0-4-0

# தென்னிந்திய செங்குந்தர் நான்காவது மகாநாடு தலைவர்கள் சரித்திரங்கள்

## கொடியுயர்த்து தலைவர் குடியேற்றம் உயர் திருவாளர் மா. ஆ. வேலாயுத முதலியார் அவர்கள் சரித்திரக் குறிப்பு

நமது நான்காவது மகாநாட்டுக் கொடியுயர்த்தச் செங்குந்த பிரமுகர்களால் ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப் பெற்றுள்ள தலைவர் உயர்திரு மா. ஆ. வேலாயுத முதலியார் அவர்கள் என்பவரைப் பொது ஜனங்கள் முன்னரே அறிந்திருப்பார்கள். இப்பெரியார் இம்மகாநாட்டில் கொடியுயர்த்துதற்கு மிகவும் தகுதியுடையவ ரென்பது சொல்லாமலே விளங்கும். திரு. முதலியார் அவர்கள், சான்றோருடைத் தொண்டை நன்னாட்டுச் சீர் பெற்றோங்கும் குடியேற்ற மாநகரில் தொன்று தொட்டுச் செல்வாக்குற்றோங்கும் ஒரு பெரிய சிறப்புவாய்ந்த செங்குந்த குடும்பத்தில் தோன்றியவர். நூல் வியாபாரத்தில் கைதேர்ந்த இவர் குடியேற்றம் முதலிய பல விடங்களில் அவ்வியாபாரத்தை நடத்தி வருவதோடு, கோயமுத்தூர் ஸ்ரீ ரங்கவிலாஸ் மில்லில் நூல் விற்பனை செய்யும் ஒரு உபதலைவராகவும் இருந்துவருகிறார். தமிழிலும் பிறவற்றிலும் போதிய ஞான முடையவர்.

ஆழ்ந்த அறிவும், மிகுந்த ஆற்றலும் அமைந்துள்ள திரு. மா. ஆ. வேலாயுத முதலியார் அவர்கள் சென்ற 20 வருஷங்களாகப் பொதுஜன நன்மைக்காகப் பாடுபட வேண்டுமென்ற பரந்த நோக்க முடையவராய்க் குடியேற்றம் நகர பரிபாலன சபையின் அங்கத்தினராயிருந்து இன்றளவும் அரும்பாடு பட்டுவருகின்றனர். 1928-வது ஆண்டு, டிசம்பர் மீ 4உ யன்று குடியேற்றம் நகர பரிபாலன சபைத் தலைவராகத் தேர்தெடுக்கப் பெற்று அப்பதவியை 1931ளு அக்டோபர் மீ 31உ வரை மிகத்திறமையோடு வகித்துவந்தவர். பல்லாண்டுகளாகத் தாலுக்கா போர்டு அங்கத்தினராகவும், ஜில்லா போர்டு அங்கத்தினராகவும் இருந்து வருவதன்றித் தற்போது தாலுக்கா போர்டு தலைவராகவும் இருந்து வருகிறார். தற்போது இவருக்கு வயது 53 ஆகிறது.

பொதுஜன சம்பந்தமான நகரபரிபாலன சபை, தாலுக்காபோர்டு முதலியவற்றிலும், ஏனையவற்றிலும் நண்பர் பகைவர் என்ற வித்தியாச மின்றி நடுநிலைமை தவறாது, பிறர் சொற்கேட்டு மயங்காது எக்காரியத்தையும் தாமே ஆழ்ந்து யோசித்துத் தகுந்தவாறு செய்பவர். உண்மைக்குக் கட்டுப்படுதல், பொது நன்மைக் குழைத்தல், தளராத ஊக்க முடைமை, எடுத்த காரியத்தைச் சாதித்தல் முதலிய பல அரிய குணங்களும் செயல்களும் படைத்தவர். பகைவரிடத்தும் அன்பு காட்டும் மற்றொரு உயரிய குணமும் இவரிடமுண்டு. 'கல்வியின் ஊங்கில்லை சிற்றுயிர்க் குற்றதுணை' என்னும் உண்மையினை நன்குணர்ந்தவராகையால், உயர்தர கல்வி கற்கும் ஏழை மாணவர்கள் அபிவிருத்தி சங்கத்திற்குப் பெருந்தொகையும் இவர் வழங்கியுள்ளார். நம்மவர்களிடையே ஆங்காங்கு அடிக்கடி தோன்றும் கக்ஷி வேறுபாடுகளைப் போக்கி ஒற்றுமைப்படுத்துவதில் மிக்க ஊக்கமுடையவர். நங்குல முன்னேற்றத்திற்காக உழைத்து வரும் தலைச் சங்கத்தாரை ஆரம்பகாலத்தில் வெளி ஜில்லாக்களுக்குச் சென்று பிரசார மூலமாக நமது இயக்கத்தைப் பரவச் செய்மாறு ஊக்கிய குலாபிமானிகளுள் இவரும் ஒருவர் என்பது ஈண்டு குறிப்பிடத் தக்கது. இதனால் திரு. முதலியார் அவர்கள் குல முன்னேற்றத்தில் கொண்டுள்ள ஆர்வம் நன்கு விளங்குகிறது.

நமது குல தெய்வமாகிய ஸ்ரீ குகப் பெருமானிடத்து அளவுகடந்த பேரன்புடையவர்.

## வாலிபர் மகாநாட்டுத் தலைவர் திரு. சி. பன்னிருகைப்பெருமாள் முதலியார், பி. ஏ., பி. எல். அவர்கள் சரித்திரக் குறிப்பு

திரு. சி. பன்னிருகைப்பெருமாள் முதலியாரவர்கள் தென் திருவிதாங்கூரில் கோட்டாறு என்னும் பழம்பதியில் சாதாரண ஜவுளி வியாபாரியொருவரது புத்திரராகப் பிறந்தார். துரதிர்ஷ்டவசமாகப் பன்னிரண்டாவது வயதிலேயே பெற்றோரை இழந்தமையால் இவர் முதல் பாரத்தோடே தமது படிப்பை நிறுத்தி, தமது தந்தையார் கூட்டாளியாக இருந்து நடத்திவந்த ஜவுளிக் கடையிலேயே சொற்ப சம்பளத்துக்குக் குமாஸ்தாவாக அமர்ந்து நான்கு வருடங்கள் வரை வேலை பார்த்துக்கொண்டு அக்கடையை நடத்தி வந்த மற்றொரு பங்குதாரரான திரு. ஆ. சிற்றம்பல முதலியாரவர்கள் இல்லத்திலேயே ஆதரவு பெற்று வளர்ந்து வந்தார்.

இங்ஙனமிருந்து வருகையில் நற்காலத்துக் குறியாக ஒரு நாள் தமது தமக்கையின் இல்லம் செல்ல, அங்கே தமது அத்தானோடு அச்சமயம் வார்த்தையாடிக்கொண்டிருந்த திருவாளர் ஷெண்பகக் குட்டி குறுப் (Shenbagakutty krup) என்னும் பெரியார் இவரது விருத்தாந்தங்களை விசாரித்து, பிள்ளைகளுக்குப் போதிய கல்விப் பயிற்சியளிக்காது சிறுவயதிலேயே ஜீவனம் தேட விட்டு அவர்களை வாட்டி வருத்துவதற்காகத் தமது நண்பரைக் கடிந்துகொண்டதால் இவரது அத்தான் இவருக்கு மீண்டும் கல்வி புகட்டத் தீர்மானித்து, சிறிது நாட்களாகப் பள்ளிக்கூடச் சம்பந்த மின்றி விளையாட்டாகக் காலங்கழித்துக் கொண்டிருந்துவிட்டதால் விளையாட்டில் விருப்பங்கொண்டு பள்ளிக்குச் செல்ல மறுத்த நமது முதலியாரவர்களைக் கட்டாயப்படுத்தி மீண்டும் பள்ளிக்கு அனுப்பினார்.



இங்ஙனம் திரு முதலியார் தமது 15 ஆவது வயதில் மீண்டும் கலைமகளது கருணைக்குப் பாத்திரரானார். ஆனால் தாம் கல்வியை நெடு நாள் கற்றுப் பெரும் பட்டங்களும் பெறுவரென்னும் எண்ணம் அப்பொழுது எள்ளளவேனும் இவருக்கில்லை. ஆயினும் தாம் எதிர்பார்த்ததற்கு மாறாகப் பள்ளியில் சேர்ந்தவுடனே கல்வியில் ஊக்கம் மேலிட, இவர் படிப்படியாகத் தேறி 1912-இல் ஸ்கூல் பைனல் பரீக்ஷையில் தேறினார். பின்னர் திருவனந்தபுரம் கலாசாலையில் இண்டர்மீடியேட் வகுப்பில் சேர்ந்தார். வசதிக் குறைவாலும் வேறு பல தொல்லைகளாலும் பரீக்ஷையில் தவறிப் பின்னர் நாகர் கோயில் கலாசாலையிற் சேர்ந்து மீண்டும் தவறியதால் கல்வியின்மீது வெறுப்புக் கொண்டு உத்தியோகத்தை நாடினாராயினும் இவரது கல்வியில் ஊக்கங் கொண்டிருந்த உறவினரது வற்புறுத்தலால் மீண்டும் முயன்று தேறினார். பின்னர் திருச்சி செண்ட் ஜோசப் கலாசாலையில் சேர்ந்து 1921-இல் பீ. ஏ. பரீக்ஷையில் தேறினார். இதற்கிடையில் தமது தமக்கை மகளை மணந்து இல்லறத்தையும் மேற்கொண்டார்.

கலாசாலையில் சேர்ந்தது முதற்கொண்டே, தாம் வழயக்கறிஞர் வேலையை மேற்கொள்வதோடு தமது ஊரில் ஓர் அச்சுக்கூடம் ஸ்தாபித்து, ஒரு பத்திரிகையும் நடத்தி அதன் வாயிலாகத் தம்மோரிடையும் சிறப்பாகத் தமது குலத்தினரிடையும் தம்மாலியன்றவளவு சீர்திருத்தங்களைப் புகுத்த வேண்டுமென்னும் அவா நமது முதலியார் மனத்தில் ஆழப் பதிந்திருந்தது. இடுக்கண்கள் பல நேரிட்டும், இவர் எல்லா முட்டுக்கட்டைகளையுங் கடந்துகொண்டு 1925-இல் பீ. எல். பட்டம் பெற்றார். பீ. எல். வகுப்பில் வாசித்துக்கொண்டிருக்கையில் தமக்குக் கிடைத்து வந்த பொருளாதாரவுக்கு ஏதோ வினைப்பயனால் இடையொன்று ஊறு நேரவே, இவரது அவா முற்றும் பூர்த்தியாக ஏதுவில்லாமற் போயிற்று. பணக் கஷ்டத்தால் இவர் சர்க்கார் உத்தியோகத்தை நாடி, அப்பொழுது போலீஸ் சூபரின்டெண்டெண்டாக இருந்த சந்தா மியா சாகிப் என்னும் பெரியாரது உதவியால் திருவிதாங்கூர் அக்கௌண்டண்ட் ஜெனரல் காரியாலயத்தில் (The Accountant General's Office of Travancore) ஒரு குமாஸ்தா வேலை பெற்றார். இந்த உத்தியோகத்தை வகித்து வருகையில் திருவிதாங்கூர் சயன்ஸ் காலேஜில் தமிழாசிரியர் உத்தியோகத்திற்காக முயன்று எளிதிலேயே அதனைப் பெற்றுச் சுமார் 9 வருட காலமாக அப்பதவியினையே வகித்து வருகிறார். இவரது போதனா சக்தியினைக் கண்டு சென்னை சர்வகலாசாலையார் இவரை இண்டர்மீடியேட் பீ. ஏ. வகுப்புப் பரீக்ஷைகளுக்குப் பரீக்ஷகராக நியமித்துள்ளார்கள்.

பத்திரிகை மூலமாய்ச் சீர்திருத்தத்தைப் பரப்பவேண்டு மென்னும் நமது முதலியாரது பேரவாவுக்கு விதி விசத்தால் தடையேற்பட்டதாயினும், சீர்திருத்தத்திலும் பொது நலச் சேவையிலும், சிறப்பாகக் குலப்பணியிலும் இவர் கொண்டுள்ள ஊக்கமும் முயற்சியும் நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டே வருகின்றன. சிறுவயதிலே தம்மை அன்புடன் ஆதரித்த அறிஞர்களிடத்தும் அப்போதைக் கப்போது தமக்கு வேண்டிய உதவிகளைப் புரிந்துவந்த பெரியோர்களிடத்தும் நமது முதலியார் தளரா நன்றி கொண்டுள்ளார். சமயம் வாய்த்தழி எல்லாம் இவர் குலப்பணியி லீடுபட்டு ஊக்கத்தோடு உழைத்து வருவதிலிருந்தும் தம்மூர்ச் செங்குந்தரது முன்னேற்றத்துக்காக இவரெடுத்துக்கொள்ளும் முயற்சியிலிருந்தும் இவரது குலப்பற்றினை உணரலாம். தாம் கோருவது போல் ஊரார் இவருக்குடந்தையாக நின்று உழைக்க முன்வருவரேல் பொதுவில் திருவிதாங்கூர்க் குடிகளும், சிறப்பாக அங்குள்ள ஏழைச் செங்குந்தர்களும் சொற்ப நாட்களிலேயே சுக வாழ்வுறும் பாக்கியசாலிகளாவர் என்பது திண்ணம்.

சுருங்கக் கூறின், இளமையிலேயே வறுமைக் கடலிற் சிக்கிப் பலவித இடுக்கண் அலைகளால் மோதப்பட்டும், ஊக்கமெனும் தோணி பற்றி உணர்வெனுங் கோலையூன்றி நல்வாழ்வெனுங் கரையேறி விளங்குமிப் பெரியார் இளமைக்கடலிலே நீந்திக்கொண்டிருக்கும் காளையர்களுக்குக் கலங்கரை விளக்கம் போன்று மதி யொளி வீசிச் சுகவழி காட்டுதற் கேற்றவரெனலாம்.

## வர்த்தகர் மகாநாட்டுத் திறப்புவிழா வாற்றும் திருப்பத்தூர் திரு. கா. அ. சண்முக முதலியாரவர்கள் சரித்திரம்

திரு. கா. அ. சண்முக முதலியார் அவர்கள், வடஆற்காடு ஜில்லா திருப்பத்தூர் காளியப்ப முதலியார் குமாரர் அருணாசல முதலியாரவர்கள் நெடுநாள் ஆண்மகப் பேறின்றி முதுமையிற் பெற்றெடுத்த தவப் புதல்வர். தக்க செல்வாக்குள்ள குடும்பத்திற் பிறந்தும் அறிவு, அடக்கம், பொறுமை முதலிய நற்குண நற்செயல்களோடு வளர்ந்து சிறிது கல்வி பயின்று தமது தந்தையின் தொழிலுதவிக்காகப் பதினொரு வயதிலேயே பாடசாலையை விடுத்துத் தந்தைக்குத் தொழிலுதவி புரிந்துவருங் காலத்திலேயே ஓய்வு நேரங்களில் நல்லாசிரியர் பால் இலக்கிய இலக்கணங்களைக் கற்றுக் கல்விச் செல்வமும் எய்தி,

'கற்கக் கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக.'

என்ற மறைமொழிக்குச் சான்றாக நல்லொழுக்கங்களை அணிகலனாகப் புனைந்து ஈன்ற தந்தை உள்ளம் மகிழ இவன் தந்தை என்னோற்றான் என்று கூறப் பொதுவாக எல்லா மரபினருக்கும், சிறப்பாக நம்மரபினருக்கும் நெடுநாட்களாகப் பாடுபட்டுக் கள், கஷி, பலி, புலை இவைகள் ஒழியும்படிப் பல கிராமங்களைச் சீர்திருத்தம் செய்து எவரும் ஒப்ப எந்த அவையிலும் நடுவு நிலைமை வகித்து நியாயம் வழங்குவதால் யாவருங் கொண்டாடுமாறு சிறந்து விளங்குகிறார். அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம் என்னும் நன்மொழியைக் கடைப்பிடித் தொழுகுபவர்.

இவர் 1915 முதல் 5 வருஷம் பெஞ்சு மாஜிஸ்ட்ரேட்டாகவும் 4 வருஷம் முதல் வகுப்பு பெஞ்சு மாஜிஸ்ட்ரேட்டாகவும், 4 வருஷம் ஜில்லா போர்டு மெம்பராகவும், 3 வருஷம் முனிசிபல் சேர்மெனாகவும், அது முதல் இதுகாறும் முனிசிபல் கௌன்சிலராகவும் 1925 முதல் தாலூகா போர்டு வைஸ் பிரசிடெண்டாகவும் இருந்து இப்போது தாலூகா போர்டு பிரசிடெண்டாகவும் இருந்து வருகிறார்.

மேலும் நம்மவர் தொழில் முன்னேற்றத்திற்காக மிகவும் உழைத்து வருகிறார். நம்மரபினருக்கும் பிற மரபினருக்கும் இவர் செய்து வரும் சேவையினால் நமது கொரட்டி நாட்டில் நம்மவரின் சிறப்பு மலை விளக்காக விளங்குகின்றது.

சைவப் பற்றுடைய மரபில் தாம் பிறந்தவராயினும், தந்தை சொன் மிக்க மந்திரமில்லை, தாய் சொற் றுறந்தால் வாசகமில்லை என்னும் மூதுரையின் மேன்மையை உலகிற்கு ஒழுகிக் காட்டிய ஸ்ரீ தசரத ராமபிரானிடத்துத் தம் அன்பைச் செலுத்தி வைணவ சின்னத்தைத் தாங்கியிருப்பினும் சைவம் வைணவம் என்னும் இரண்டும் வேறுபாடு அற்றதென்னும் உண்மையை உணர்ந்தவராய் இளமை முதல் விநாயக பூசை செய்து வருவதோடு குலதெய்வமாகிய முருகப் பெருமானையும் மறவாதவர்.

ஸ்ரீராம நிலயமென்னும் ஆலய மொன்றைக் கட்டி ஸ்ரீ ராமபிரானை எழுந்தருளப் பண்ணி நித்திய நைமித்திய பூசை நடந்துவரத் தக்கவாறு அமைத்திருக்கின்றார்.

பிரபல நூல் வியாபாரியாகிய முதலியார் அவர்கள் ஆடம்பரம் ஒரு சிறிதும் இல்லாதவர். தாராளமான பரந்த பொது நோக்கங் கொண்டவர். கற்றவர்களை ஆதரிக்கும் கண்ணிய குணமுடையவர். 'மனத்துக் கண் மாசிலனாதல் அனைத்தறன் ஆகுல நீரபிற' என்ற உயர் கொள்கை உடையவர்.

தமது நற்குடிப் பிறப்புக் கேற்றவாறு ஒழுக்கங் குன்றாத உயர் குணம் படைத்த இவர் அறநெறியைக் கடைப்பிடித் தொழுகுமாறு உலக மாந்தர்க் கறிவுறுத்தும் கதையாகிய நளாயினி கதையை புகழேந்திப் புலவரைப் போல நளாயினி வெண்பா வென்னும் ஓர் அரிய செந்தமிழ் நூலாக இயற்றித் தம் பூத உடம்போடு புகழுடம்பையும் பெற்றுப் பொலிவுற்றிருக்கின்றார்.

மற்ற தலைவர்களது சரித்திரங்களை மித்திரன் பழைய பிரதிகளிற் காண்க.

---

# மகாநாடு நடக்கும் இடத்தின் மாண்பு

## சோழநாட்டுப் பாடல் பெற்ற சிவஸ்தலங்கள்

சைவ சமயாசாரியர்களால் பாடப்பெற்ற சிவஸ்தலங்கள் 274. அவற்றுள் சோழ நாட்டின் கண்ணுள்ளவை 190. இத்துணை ஸ்தலங்களையும் குறித்து ஈண்டு எழுதுவதென்றால் தற்சமயம் மித்திரன் இடந்தரா தாகையால் நமது மகாநாடு கூடும் திருவாரூரைப் பற்றியும், அதைச் சூழ்ந்துள்ள சில ஸ்தலங்களைப் பற்றியும், மகாமகம் நடைபெறும் கும்பகோணத்தைப் பற்றியும் மாத்திரம் மிகச் சுருக்கமாக இரண்டொரு குறிப்புக்கள் பொது ஜனங்களின் விவரத்திற்காகக் கீழ் வருமாறு தெரிவிக்கிறோம்.

### திருவாரூரும் அதைச் சூழ்ந்துள்ள ஸ்தலங்களும்

**1.** திருவாரூர்: காவிரி சூழ்ந்த சோழ வளநாட்டின் கண்ணுள்ள பிரபல சிவஸ்தலங்களுள் ஒன்றாகிய திருவாரூரைப் பற்றி அறியாதார் மிகச் சிலரே. இப்புண்ணிய ஸ்தலமானது இலக்குமி பூசித்துப் பேறு பெற்றது. இங்குள்ள 'திருமூலட்டானம்' என்னும் கோயில் 25 காணி (5 வேலி) விஸ்தீரணமும், 'கமலாலயம்' என்னும் திருக்குளம் 25 காணி விஸ்தீரணமும் உடையன. பிறக்க முத்தி தரும் இப் பெரும்பதியானது சோழ அரசர்கள் முடி தரித்தற்குரிய இராஜதானிகள் ஐந்தனுள் ஒன்று. சைவ சமயிகளால் மிகவும் கொண்டாடப் பெற்று வரும் பஞ்ச ஸ்தலங்களுள் இது பிருதிவி ஸ்தலமாகவும் கருதப் பெற்று வருகிறது. (காஞ்சீபுரத்தையும் பிருதிவி ஸ்தலம் என்பாருமுளர்).

ஆறறிவு பெற்றுள்ள மக்களுக்கேயன்றித் தாழ்ந்த மிருகாதிகளுக்கும் நடுநிலைமை தவறாது நீதி செலுத்தி உலகப்பிரசித்தி பெற்ற மனுநீதி கண்ட சோழனும், சிதம்பரத்தி லிருந்த தேவாரப் பதிகங்களைக் கண்டெடுத்து அவற்றை எழு திருமுறைகளாகவும், மணிவாசகப் பெருந்தகையார், திருமூலர், காரைக்காலம்மையார் பட்டினத்துப் பிள்ளையார், நக்கீரர் முதலிய பல சிவானுபூதி மான்கள் அருளிச்செய்த அருட்பாடல்களை ஒன்பத்து, பதினோராந் திருமுறைகளாகவும் வகுத்துச் செப்பேடு செய்து தியாகேசர் சந்நிதியில் ஏற்றுவித்த அபயகுலசேகர சோழனும், அதற்குப்பின் சேக்கிழார் நாயனார் அருளிச் செய்த பெரிய புராணத்தைப் பன்னிரண்டாந் திருமுறையாக வகுத்து அதனையும் செப்பேடு செய்து தியாகேசர் சந்நிதியில் ஏற்றுவித்த அநபாய சோழனும் அரசாட்சி புரிந்த அரும்பதியும் இதுவேயாகும்.

சுந்தரமூர்த்தி நாயனார் திருத்தொண்டத்தொகை அருளிச் செய்த 'தேவாசிரியன்' என்னும் ஆயிரக்கால் மண்டபத்தையும், அந்நாயனார் விருத்தாசலத்தில் மணிமுத்தா நதியில் இட்ட பொன்னைப் பரவையாருக்கு எடுத்துக் கொடுத்த 'கமலாலயம்' என்னும் திருக்குளத்தையும் உடையது இத்தலம். இக்குளத்திலிருந்தெடுத்த பொன்னை மாற்றுரைத்துக் காட்டிய விநாயகப் பெருமான் குளக்கரையில் எழுந்தருளி யிருக்கிறார். சுந்தரமூர்த்தி நாயனார் பொருட்டுத் தியாகேசர் நள்ளிருளில் பரவையாரிடம் தூது சென்ற பழம்பதியும் இதுவே.

காஞ்சீபுரத்தில் ஒருகண் பெற்ற சுந்தரமூர்த்திகள் 'மீளா அடிமை' என்ற பதிகம்பாடி மற்றொரு கண்ணையும் பெற்றதும், விறன்மிண்டர், நமிநந்தியடிகள், செறுத்துணையாள், தண்டியடிகள் முதலிய பல சிவனடியார்கள் முத்தி பெற்றதும் இத்திருப்பதியே யாகும்.

உலகத்திலுள்ள மிகப் புராதனமான நகரங்களுள் திருவாரூர் ஒன்று என்பது 'திசை எட்டும் தெரிப்பதற்கு முன்னோ பின்னோ திருவாரூர் கோயிலாக் கொண்ட நாளே' என்ற ஆச்சார்ய சுவாமிகளின் அமுத வாக்காலும், 'சொன்ன நாட்டிடைத் தொன்மையின் மிக்கது' என்ற சேக்கிழார் சுவாமிகளின் செந்திருவாக்காலும் உணரலாம்.

**2.** திருவாரூர் அறநெறி: இச்சந்நிதி திருவாரூர் 'திருமூலட்டானம்' என்னும் கோயிலின் இரண்டாவது பிராகாரத்தில் மேற்கு முகமாயுள்ளது.

நமிநந்தி யடிகள் தண்ணீரால் விளக்கேற்றி வந்த தலம். இதனைத் திருநாவுக்கரசு சுவாமிகள் திருத்தாண்டகத்தில் 'நந்திபணி கொண்டருள் நம்பன்' என்றும், திருவாரூர் திருவிருத்தத்தில் 'நம்பி நந்தி நீரால் திருவிளக்கிட்டமை நீள்நாடறியு மன்றே' என்றும் சிறப்பித்துக் கூறி யுள்ளார்கள்.

**3.** திருவாரூர் பரவையுண்மண்டளி: இக்கோயில் திருவாரூப் பெரிய கோயில் ரதநிலைக்குச் சமீபத்திலுள்ளது. இதற்குத் தூவா நாயனார் கோயில் என்று பெயர். வருணன் முன்னொரு காலத்தில் அனுப்பிய கடலை உண்டதனால் 'பரவையுண் மண்டளி' என்னும் பெயர் வழங்கலாயிற்று.

துருவாச முனிவர் பூசித்ததலம்.

**4.** அம்பர்: பூந்தோட்டம் ஸ்டேஷனுக்குச் சமீபத்திலுள்ளது. இங்குள்ள ஆலயத்திற்குப் 'பெருந்திருக்கோயில்' என்று பெயர். இது அம்பர் மாகாளத்திற்குக் கிழக்கே $\frac{3}{4}$ மைல் தூரத்திலுள்ளது. சோமாசிமாற நாயனார் முத்தி யடைந்த திருப்பதி. இவ்வாலயம் கோச்செங்கட் சோழனால் கட்டப்பட்டது. இவர் திருவானைக்கா முதல் அம்பர் திருப்பெருங்கோயில் ஈறாகவுள்ள 64 மாடக்கோயில்களைக் கட்டுவித்தார். மாடக் கோயில் என்பது கட்டுமலையையும், யானைகள் செல்லக்கூடாத சந்நிதியையும் உடைய தலம்.

**5.** அம்பர் மாகாளம்: கோயில் திருமாகாளம் என்று வழங்குகிறது. அம்பர் என்னும் தலத்திற்கு மேற்கே $\frac{3}{4}$ மைல் தூரத்திலுள்ளது. பூந்தோட்டம் ஸ்டேஷனுக்குக் கிழக்கே $1\frac{1}{2}$ மைல் தூரத்திலிருக்கிறது,

அம்பன், அம்பாசுரன் என்னும் இராக்ஷதர்களைக் கொன்ற பாவந் தீர, காளி பூசித்த தலம். காளி கோயில் வெளிப்பிராகாரத்தில் தென் பக்கம் இருக்கிறது. மகாகாள ரிஷியும் பூசித்த தலம்.

**6.** சாவீரம்: திருவாரூர்க்கு மேற்கே 7 மைல் தூரம். இதன் வடமேற்கில் $1\frac{1}{2}$ மைலில் பெருவேளூரும் அதற்கு மேற்கே 2 மைல் தூரத்தில் திருத்தலையாலங்காடும் இருக்கின்றன. கௌதம ரிஷி பூசித்தது.

**7.** கன்றாப்பூர்: திருவாரூரிலிருந்து தெற்கே $5\frac{1}{2}$ மைல் தூரத்திலுள்ள நாட்டியத்தான்குடி ஸ்டேஷனிலிறங்கிக் கிழக்கே 5 மைல் சென்று அங்கிருந்து வடக்கே 1 மைல் சென்றால் இவ்வூரையடையலாம். சுவாமி கன்றுக்குட்டி கட்டும் ஆப்பு அல்லது குச்சியிலிருந்து உற்பத்தியானவர். இடும்பன் என்னும் அசுரன் பூசித்த தலம்.

**8.** திருக்காறயில்: என்பது திருக்காறைவாசல். திருவாரூருக்குத் தெற்கே $8\frac{1}{2}$ மைல். இது சப்த விடங்களில் ஒன்று. தேவேந்திரன், முசுகுந்தச் சக்கரவர்த்தி முதலியோர் பூசித்த தலம்.

**9.** கீழ்வேளூர்: சிக்கிலுக்கு அடுத்த மேலண்டை ஸ்டேஷன். திருவாரூர் ஸ்டேஷனுக்குக் கிழக்கே 7 மைல் தூரம். ஸ்டேஷனுக்கு வடக்கே 1 மைலில் கீழ்வேளூர் இருக்கிறது. சந்நிதி கட்டுமலைமேலிருக்கிறது. சுப்பிரமணிய சுவாமி பூசித்த ஸ்தலம். இவ்விடத்திய நடராஜமூர்த்தி அகஸ்தியருக்கு வலது பாததரிசனம் கொடுத்தவர்.

**10.** கைச்சினம்: திருவாரூருக்குத் தெற்கேயுள்ள திருநெல்லிக்கா என்னும் ரெயில்வே ஸ்டேஷனிலிருந்து 2 மைல் தூரம். இத்தலத்திற்கு வடக்கே 3 மைல் தூரத்தில் திருக்காறாயில் இருக்கிறது. இது திரணபிந்து முனிவரும் தேவேந்திரனும் பூசித்தது. மணலினால் லிங்கம் செய்து பூசை செய்த பின் அதைக் கையினால் எடுத்து அப்புறம் வைக்கும்போது கைச்சின்னம் அல்லது கைக்குறி அதில் பொருந்தியது. இக்காரணத்தால் சுவாமிக்குக் கைச்சின்னநாதர் என்றும் ஸ்தலத்திற்குக் கைச்சின்னம் என்றும் பெயர் வந்தது. விரல் பட்ட குறி சுவாமிமேல் இருக்கிறது.

**11.** திருக்கொள்ளிக்காடு: திருவாரூருக்குத் தெற்கே 12 மைல் தூரத்திலுள்ள பொன்னிறை

ஸ்டேஷனில் இறங்கி மேற்கே $3\frac{1}{2}$ மைல் சென்றால் இத்தலத்தை யடையலாம். அக்கினி பூசித்த தலம். இதற்கு வடகிழக்கே $1\frac{1}{2}$ மைலில் திருத்தென்கூர் இருக்கிறது.

**12.** சிக்கல்: ரெயில் ஸ்டேஷன். நாகப்பட்டணத்திற்கு மேற்கே 3 மைல். சுவாமி சந்நிதி கட்டுமலைமேலிருக்கிறது. தீர்த்தம் 'க்ஷீரபுஷ்கரணி'. மல்லிகைச்செடி விசேஷம். வசிஷ்டர், காமதேனுவை அடையும் பொருட்டுப் பூசித்த தலம். இங்கே சிங்காரவேலர் திவ்ய சுந்தரமூர்த்தியாய் விளங்குகிறார். அவர் சந்நிதியும் கட்டு மலைமேல் தான் இருக்கிறது.

காமதேனு இங்கிருந்தபடியால் அதன் பால் பெருகி எங்கும் வெண்ணெயாய் உறைந்திருந்தது. வசிஷ்டர் அவ்வெண்ணெயை எடுத்துச் சிவலிங்கமாக்கிப் பூசித்தார். அதனால் சுவாமிக்கு 'வெண்ணெய் லிங்கேசுரர்' என்று பெயருண்டாயிற்று. அந்த லிங்கத்தை வேறிடத்தில் வைக்க எடுத்தபோது அது வாராமல் சிக்கிக் கொண்டபடியால் ஊருக்குச் சிக்கில் என்னும் பெயருண்டாயிற்று. இங்குச் சூரசம்மார உற்சவம் மிகவும் விசேஷம்.

**13.** திருத்தெளிச்சேரி: என்பது கோயிற்பத்து. காரைக்கால் ரெயில் ஸ்டேஷனிலிருந்து வடமேற்கே $\frac{3}{4}$ மைல். திருஞானசம்பந்த சுவாமிகள் அடியார் கூட்டத்துடன் செல்லுகையில் 'பரசமய கோளரி வந்தார்' என்று முத்துச்சின்னங்கள் ஊத, அதனைப் பொறாத பௌத்தர்கள் வந்து தடுக்க, தேவாரத் திருமுறை எழுதும் அடியவர் 'புத்தர் சமண் கழுக்கையர்' என்னும் திருப்பாட்டை ஓதி அப்பௌத்தர்களின் தலைவனை புத்த நந்தியின் தலைமேல் இடிவிழும்படிச் செய்த தலம். பௌத்தர்கள் மீண்டும் வந்து அடியவருடன் தருக்கஞ் செய்து தோல்வியுற்றுப் பிள்ளையாரின் அனுக்கிரகத்தால் சைவர்களாகி உயர்ந்த தலம். பங்குனி௴ 3உ முதல் 10 நாளைக்குச் சூரியனுடைய கிரணங்கள் சுவாமிமேல் விழுகின்றன.

**14.** திருநாட்டியத்தான்குடி: ரெயில் ஸ்டேஷன். திருவாரூருக்குத் தெற்கே 6 மைல் தூரம். ஷ்டேஷனிலிருந்து 3 மைல் தூரத்தில் பேரெயில் என்னும் ஸ்தலமிருக்கிறது. கோட்புலி நாயனாருடைய ஊர்.

**15.** திருநெல்லிக்கா: திருவாரூருக்குத் தெற்கே 8 மைல். சூரியனும், பிரமனும் பூசித்தது. பிரதி வருஷமும் ஐப்பசி கிருஷ்ண பக்ஷ சதுர்த்தசி முதல் 7 நாளும், மாசி 18உ முதல் 7 நாளும், அஸ்தமன சமயத்தில் சூரிய கிரணங்கள் சுவாமிமேல் விழுகின்றன.

**16.** திருப்பயற்றங்குடி அல்லது திருப்பயற்றூர் திருவாரூருக்கு வடக்கே [illegible] மைலிலுள்ள வெட்டாறு ஸ்டேஷனிலிறங்கி வடக்கே $3\frac{1}{2}$ மைலில் திருவிற்குடி தலமிருக்கிறது. அதற்குக் கிழக்கே 3 மைலில் இத்தலமுளது. வைரவருஷி பூசித்தது.

**17.** பள்ளியின்முக்கூடல்: திருவாரூருக்கு வடகிழக்கே 1 மைல். திருவாரூருக்குக் கிழக்கே $1\frac{1}{2}$ மைலிலுள்ள [illegible] தலத்தை யடைந்து, அங்கிருந்து வடக்கே $1\frac{1}{2}$ மைல் சென்றால் இத்தலத்தை யடையலாம். வெட்டாறு ஸ்டேஷனிலிருந்து தென்கிழக்கே 1 மைலிலிருக்கிறது. இராமர் பூசித்தது. இராமர் கோயிலும் அருகேயுளது.

**18.** விளமர்: திருவாரூருக்குத் தென்மேற்கே 2 மைல். பதஞ்சலிமாமுனிவர் பூசித்தது.

## கும்பகோணமும் கும்பகோணத்தைச் சூழ்ந்த தலங்களும்

**1.** கும்பகோணம் அல்லது திருக்குடமூக்கு: ஏமரிஷி முதலிய பெரியோர்கள் பூசித்த தலம், பன்னிரண்டு வருஷங்கட் கொருமுறை மாசி மகத்தின் போது காசிகங்கை வருகிறது என்ற ஐதிகத்தால் அதிக சிறப்படைந்துள்ள மகாமக தீர்த்தத்தை யுடைய தலம்.

**2.** திருக்குடந்தைக் காரோணம்: கும்பகோணத்திலுள்ள காசி விஸ்வநாதர் கோயில்.

**3.** திருக்குடந்தைக் கீழ்க்கோட்டம் என்பது கும்பகோணத்திலுள்ள நாகேசுர சுவாமி கோயில். சூரியன் பூசித்த தலம். இங்கு ஒவ்வொரு வருஷமும் சித்திரை௴ 11, 12, 13 தேதிகளில் காலையில் சூரியகிரணம் சுவாமிமேல் படுகிறது.

**4.** அரிசிற்கரைப் புத்தூர்: இதற்கு அழகாபுத்தூர் என்ற பெயர் வழங்கி வருகிறது. கும்பகோணத்திற்குக் கிழக்கே $4\frac{1}{2}$ மைல் தூரம்.

இதே வழியில் இன்னும் 1 மைல் சென்றால் 'திருநறையூர்ச்சித்தீச்சுரம்' என்னும் தலமிருக்கிறது.

உண்மையானந்த முனிவர் பூசித்தது. புகழ்த்துணை நாயனார் சிவபெருமானைப் பூசித்து முத்தியடைந்த க்ஷேத்திரம்.

**5.** திருஆப்பாடி: கும்கோணம் ரெயில்வே ஸ்டேஷனிலிருந்து வடக்கே 10 மைல் சென்று திருப்பனந்தாளை யடைந்து அங்கிருந்து தென்மேற்கில் 1 மைல் தூரத்திலுள்ளது.

இங்கிருந்த ஒரு இடையன் பாலைக்கறந்து வீட்டிற்குக் கொண்டு போகும்போது தினந்தோறும் வழியில் கால் தடுக்கிப் பால் கவிழ்ந்து போதலை யுணர்ந்து, ஒருநாள் கையிலிருந்த வாளால் அவ்விடத்திலோச்ச, அங்கிருந்து இரத்தம் தோன்றியதைக் கண்டு மனமிரங்கிப் 'பாலுகந்த நாதரோ' என்று தொழச் சுவாமி அவனுக்கு அநுக்கிரகம் செய்த தலம்.

**6.** ஆவூர்: கும்கோணத்திற்குத் தென்மேற்கே 4-வது மைலிலுள்ள பட்டீச்சுரத்திலிருந்து தென்மேற்கே $\frac{1}{2}$ மைல் தூரத்திலுள்ளது. இது பசுக்கள் பூசித்த தலமாகையால் இதற்குப் 'பசுபதீச்சுரம்' என்று பெயர்.

**7.** திருவிடை மருதூர்: கும்பகோணத்திற்கு வடகிழக்கே 5 மைல் தூரத்திலுள்ளது. இதற்கு மத்தியார்ச்சுனம் என்று பெயர். இத்தலத்துக்



காவிரியில் தைப்பூசத்தில் ஸ்நானம் செய்வது மிக விசேஷமாகக் கருதப்படுகிறது.

இதனைத் திருஞானசம்பந்தர் 'ஓடேகலன்' என்னும் தேவாரத்திலும், 'பொங்கு நூன்மார்பினீர்' என்னும் தேவாரத்திலும், அப்பர் 'பாசமொன்றிலராய்' என்னும் திருக்குறுந் தொகையிலும் தைப்பூச ஸ்நானத்தைச் சிறப்பித்துப் பாடி யுள்ளார்கள்.

வரகுண பாண்டியருடைய பிரமகத்தியைப் போக்கியதலம். அவர் பல தொண்டுகள் செய்து முத்திபெற்ற அரும்பதி.

உருத்திரர், உமையம்மை, விநாயகர், முருகர், பிரம்மா, விஷ்ணு முதலியோர் பூசித்தது. பட்டினத்தடிகளால் இரட்டை மணிமாலை பாடப்பெற்றது.

**8.** திருபுவனம்: திருவிடை மருதூருக்கு மேற்கே $1\frac{1}{2}$ மைல் தூரத்திலுள்ள ஒரு வைப்பு ஸ்தலம். இரணியனைச் சம்மரித்தருளிய நரசிம்ம மூர்த்தியின் கர்வத்தை யடக்கிய சரபமூர்த்தியின் சந்நிதானம் இக்கோயிலிலிருக்கிறது. வாணாசுரன் பூசித்தது. கோயில் இராஜ ராஜ சோழனால் கட்டப்பட்டது.

**9.** இன்னம்பர்: கும்பகோணத்திற்கு மேற்கே 3 மைலிலுள்ள புளியங்குடியிலிருந்து வடக்கே ஒரு மைல் சென்றால் இத்தலத்தை யடையலாம். அகத்தியர் பூசித்து இலக்கணம் உபதேசிக்கப் பெற்ற தலம்.

**10.** திருக்கருக்குடி என்பது மருதாந்த நல்லூர். கும்பகோணத்திற்குத் தென்கிழக்கே $2\frac{3}{4}$ மைல் தூரத்தில் கலைய நல்லூரிருக்கிறது. அதற்குத் தென்கிழக்கில் $\frac{3}{4}$ மைல் தூரத்தில் இத்தலம் இருக்கிறது. பிரமனும், சற்குணன் என்னும் அரசனும் பூசித்த திருப்பதி.

**11.** திருக்கலய நல்லூர் என்பது சாக்கோட்டை. கும்பகோணத்திற்குத் தென்கிழக்கில் $2\frac{3}{4}$ மைல் தூரம். நீடாமங்கலம் போகும் பாதையிலிருக்கிறது. அரிசொல்லி வந்தபடியால் 'அரிசொல்நதி' எனப் பெயர் பெற்ற நதியின் தென்கரையிலுள்ளது. இதன் தென்கிழக்கில் 1 மைல் தூரத்தில் திருக்கருக்குடி யிருக்கிறது.

**12.** கொட்டையூர்: கும்பகோணத்திற்கு மேற்கே 2 மைல். கும்பகோணத்திலிருந்து சுவாமிமலைக்குப் போகும் வழியிலிருக்கிறது. அங்கிருந்து 2 மைல் தூரம் சுவாமிமலை. சுவாமி ஆமணக்குக் கொட்டைச் செடியின் கீழிருந்து தோன்றியமையால் ஊருக்குக் கொட்டையூரென்றும், சோழனுக்கு ஒருருவில் கோடி லிங்கமாகத் தரிசனம் கொடுத்தமையால் ஆலயத்திற்குக் 'கோடீச்சுர' மென்றும் பெயருண்டாயின.

**13.** திருச்சழுத்திரம்: கும்பகோணத்திற்குத் தென்மேற்கே 4 மைல் தூரம். பட்டீச்சுரமும், இதுவும் ஒரே ஊர் போல் தோன்றுமாறு சேர்ந்திருக்கின்றன.



**14.** சிவபுரம்: கும்பகோணத்திற்குத் தென்கிழக்கில் 3 மைல் தூரத்திலிருக்கிறது.

**15.** திருச்சேய்ஞலூர் கும்பகோணம் ஸ்டேஷனிலிறங்கி வடகிழக்கில் 10 மைல் சென்று திருப்பனந்தாளை யடைந்து, அங்கிருந்து தென்மேற்கில் 1 மைல் சென்று திருவாய்ப்பாடியைச் சேர்ந்து, அப்பால் தெற்கே $\frac{1}{2}$ மைல் சென்றால் இத்தலத்தை யடையலாம். குமாரக் கடவுள் சூர சம்மாரம் செய்தருள வந்தபோது சிவபெருமானைப் பூசித்த தலம். சண்டேசுர நாயனார் திருவவதாரஞ் செய்து முத்தி பெற்ற திருப்பதி.

**16.** திருச்சேறை என்பது உடையார் கோயில். கும்பகோணத்திற்குத் தென்கிழக்கே 9 மைல் தூரம். வழியில் $4\frac{1}{2}$ மைலில் அரிசிறகரைப்புத்தூரும், அங்கிருந்து 1 மைல் தூரத்தில் திருநறையூரும் அங்கிருந்து $3\frac{1}{2}$ மைல் தூரத்தில் திருச்சேறையும் இருக்கின்றன. இது தௌமியரிஷி பூசித்தது.

**17.** திருந்து தேவன்குடி: கும்பகோணத்திற்குக் கிழக்கே 4 மைல் தூரத்திலுள்ள திருவியலூரை யடைந்து, அங்கிருந்து வடக்கே 1 மைல் வயல் வழியாய்ச் சென்றால் இத்தலத்தை யடையலாம். இங்கு இப்போது ஊர் இல்லை. கோயில் நன்செய் நில மத்தியிலிருக்கிறது. கோயிலைச் சுற்றி ஒரு திருக்குளம் மாலை போட்டது போலிருக்கிறது. நண்டு பூசித்து முத்தியடைந்த தலம்.

**18.** திருநறையூர்ச்சித்தீச்சுரம்: கும்பகோணத்திற்குத் தென்கிழக்கே $5\frac{1}{2}$ மைல் தூரம். வழியில் $4\frac{1}{2}$ மைல் தூரத்தில் அரிசிற்களாப்புத்தூர் (அழகார் புத்தூர்.) என்னும் தலமுளது. திருநறையூருக்குக் கிழக்கே 1 மைல் தூரத்தில் பேணுபெருந்துறையும், தெற்கே $\frac{1}{2}$ மைல் தூரத்தில் நாச்சியார்கோவில் என்னும் விஷ்ணுதலமும் இருக்கின்றன. இவ் விஷ்ணுவாலயம் ஆதியில் சிவஸ்தலமாயிருந்தது. இன்னும் சிவஸ்தலம் போலவே இருக்கிறது.

**19.** திருநாகேச்சுரம்: கும்பகோணத்திற்குக் கிழக்கே 4 மைல் தூரம். ரெயில் ஸ்டேஷன். சேக்கிழார் சுவாமிகள் மிகுந்த அன்புவைத்திருந்த தலம். தமதூராகிய குன்றத்தூரில் ஒரு கோயில் கட்டி அதற்குத் திருநாகேச்சுரம் எனப் பெயரிட்டிருக்கிறார்கள். இது சந்திரன், சூரியன், ஐந்தலை நாகம் ஆகியோர் பூசித்தது.

**20.** பட்டீச்சுரம்: கும்பகோணத்திற்குத் தென்மேற்கே 4 மைல் தூரம். காமதேனு புத்திரியாகிய பட்டி என்பவள் பூசித்தபடியால் பட்டீச்சுரம் எனப்படுகிறது. சிவபெருமான் திருஞானசம்பந்தப் பிள்ளையாருக்கு முத்துப் பந்தர் நிழற்றுவித்த ஸ்தலம். வடக்கே வேறொரு வீதியில் திருச்சத்திமுத்தம் இருக்கிறது.

**21.** திருப்பனந்தாள்: கும்பகோணத்திற்கு வடகிழக்கே 10 மைல். ஆலயத்திற்குத் தாடகேச்சுரம் என்று பெயர். தாடகை என்னும் மாதின் அன்பிற்காகச் சாய்ந்திருந்த சிவலிங்கம் யானை சேனைகளாலும் முயன்றும் நிமிராது குங்கிலியக்

கலய நாயனார் தமது கழுத்தில் கயிற்றைக் கட்டி யிழுத்த உடனே அவரது அன்பிற்காக நிமிர்ந்த தலம். குமரகுருபர சுவாமிகள் கிறுவியருளிய காசி மடாலயத்தைச் சார்ந்த மடாலயம் ஒன்று இங்குளது.

**22.** திருப்புறம்பயம்: கும்பகோணத்திற்கு வடமேற்கே 4 மைலிலுள்ளது திரு இன்னம்பர் என்னும் தலம். அதற்கு வடக்கே சுமார் 2 மைலில் இத்தலமுளது. பிரளயத்திற்குப் புறம்பாயுள்ளது புறம்பயம் (புறம்பு + அயம் நீர்) பாம்பு கடித்திறந்த ஒரு வணிகனை ஞானசம்பந்த சுவாமிகள் எழுப்பியருளிய தலம்.

**23.** திருவலஞ்சுழி: சுவாமி மலை ரெயில் ஸ்டேஷனுக்கு அருகிலுள்ளது. காவிரி நதி ஆதியில் இந்த இடத்தில் வலமாகச் சுழித்துப் பாதலத்திற் சென்றமையால் இதற்குத் திருவலஞ்சுழி என்ற பெயருண்டாயிற்று. தேவேந்திரன் பூசித்தது.

## தஞ்சாவூரிலிருந்து சீகாழி வரையில் ரெயில் பாதைக்கு அருகாமையிலுள்ள பாடல் பெற்ற தலங்கள்

**1.** திரு ஆவடுதுறை: கும்பகோணத்திற்குக் கிழக்கே யுள்ள நரசிங்கன் பேட்டை ஸ்டேஷனிலிருந்து கிழக்கே 1½ மைல் தூரத்திலுள்ளது.

திருமூலநாயனார் வருஷத்திற்கொரு பாடலாக மூவாயிரம் பாடல்களால் 'திருமந்திரம்' என்னும் அருமையான நூல் இயற்றியருளியதலம். திருஞான சம்பந்த சுவாமிகள் தமது தந்தையார் யாகஞ் செய்யும் பொருட்டுப் பதிகம் பாடிப் பொற்கிழி பெற்ற க்ஷேத்திரம். இதனை அப்பர் சுவாமிகள் இத்தல திருநேரிசைப் பதிகத்தில் 'காயிரும் பொழில்கள் சூழ்ந்த கழுமலவூராக்கம்பொன் ஆயிரங் கொடுப்பர் போலும் ஆவடுதுறையனாரே' எனப் பாராட்டியுள்ளார்.

உலகப் பிரசித்தி பெற்றதும், செல்வம் நிறைந்ததுமாகிய மெய்கண்ட தேவர் சந்நிதானம் நமச்சிவாய சுவாமிகளால் ஸ்தாபிக்கப் பெற்ற திருவாவடுதுறை ஆதீனம் கோயிலை அடுத்தாற் போலிருக்கிறது. இம்மடாலயத்தில் திருமளிகைத்தேவர் சந்நிதானமும், நமச்சிவாய சுவாமிகள் சந்நிதானமும் இருக்கின்றன.

திருமூவர் ஆலயம் திருவாவடுதுறை கோயில் பிரகாரத்திலிருக்கிறது.

**2.** திருவையாறு: தஞ்சாவூருக்கு வடக்கே 7 மைல் தூரத்திலுள்ளது. சுவாமி அப்பர் சுவாமிகளுக்குக் கைலாய தரிசனம் கொடுத்தருளிய புண்ணியதலம். இந்த உற்சவம் ஆடி அமாவாசையில் நடக்கிறது. சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்காகவும், சேரமான்பெருமா ளையனாருக்காகவும், சுவாமி காவிரியின் பெருக்கைத் தவிர்க்க நாயன்மார்களிருவரும் அடியார் கூட்டத்தோடு ஆற்றைக் கடந்து சென்று தரிசனஞ் செய்த க்ஷேத்திரம். சப்தஸ்தானம் என்று வழங்கும் 7 தலங்களில் முதன்மைபெற்றது. இங்குப் பேர்போன சமஸ்கிருத கல்லூரி ஒன்று தஞ்சை ஜில்லா போர்டு ஆதரவில் நடைபெற்று வருகிறது.

**3.** திருக்கண்டியூர்: தஞ்சாவூருக்கு வடக்கே திருவையாற்றுக்குப் போகும் வழியில் 6-வது மைலிலுள்ளது. இது அஷ்ட வீரட்டங்களில் ஒன்று. பிரமாவின் சிரசைக் கொய்த ஸ்தலம். சப்தஸ்தான க்ஷேத்திரங்களில் ஐந்தாவது.

**4.** சீகாழி: திருஞானசம்பந்த மூர்த்திகள் திருவவதாரஞ் செய்தருளிய தலம். நாத நாயனார் வசித்திருந்த ஊர். தோணியப்பர் சந்நிதானம் விசேஷமானது. கோயிலுக்குள் திருஞான சம்பந்தமூர்த்திகளின் சந்நிதானமு மிருக்கிறது.

இது தோணிபுரம், பிரமபுரம் முதலிய 12 திருநாமங்களை யுடையது. இத்தலத்தையும் இத்தலப் பெருமையையும் பற்றி அறியாத சைவர்களில்லை. இதை நமது கவிச்சக்கரவர்த்தியாகிய ஒட்டக்கூத்தர் திருவவதாரம் செய்த ஊரென்றும் ஒருசாரார் கூறுவர். கூத்தர் பெருமானது மாளிகையின் அஸ்திவாரங்கள் இன்னும் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. 'கம்பனென்றும்......காழி யொட்டக் கூத்தனென்றும்' என்னும் பாடல் ஈண்டுக் குறிப்பிடத்தக்கது.

**5.** திருக்கோடிகா: திருவிடை மருதூருக்குக் கிழக்கே 1½ மைல் தூரம். இடையில் காவிரி யாற்றைக் கடக்க வேண்டும். மூன்று கோடி ருஷிகள் பூசித்த தலம்.

**6.** திருக்கோலக்கா என்பது திருத்தாளமுடையார் கோயில். சீகாழி ரெயில் ஸ்டேஷனிலிருந்து ½ மைல் தூரமும், சீகாழி கோயிலுக்கு மேற்கே ¼ மைல் தூரத்திலும் உள்ளது. சீகாழிக்கும் திருக்கோலக்காவுக்கும் இடையே 'கழுமல வாய்க்கால்' ஓடுகிறது. இது திருஞான சம்பந்த மூர்த்திகள் பொற்றாளம் பெற்றதலம்.

**7.** திருச்சக்கரப்பள்ளி: தஞ்சாவூருக்கு வடகிழக்கே 11 மைல் தூரத்திலுள்ள ஐயம்பேட்டை ஸ்டேஷனில் இறங்கி ½ மைல் தூரம் சென்றால் இவ்வூரை அடையலாம். இந்திரன் புதல்வனான சயந்தனும், தேவர்களும் பூச்சித்தது.

**8.** திருச்சோற்றுத்துறை: தஞ்சாவூரிலிருந்து திருவையாற்றுக்குப் போகும் வழியில் 6-வது மைலில் திருக்கண்டியூ ரிருக்கிறது. அங்கிருந்து தென்கிழக்காய் 1½ மைல் சென்றால் இத்தலத்தை யடையலாம். இதற்கு வடக்கு 2 மைலில் திருப்பழன மிருக்கிறது.

திருச்சோற்றுத்துறை ஸப்த ஸ்தானங்களில் 3-வது ஸ்தலம். சுவாமி சிவபத்தனாகிய அருளாளன் என்பார் பசியால் வருந்தியபோது எடுக்க எடுக்கக் குறையாதிருக்கும்படியான சோறு அளித்தருளிய தலம். இந்திரன் முதலியோர் பூசித்தது.

**9.** திருத்துருத்தி என்பது குற்றாலம் ரெயில் ஸ்டேஷன். மாயூரத்திற்குத் தென்மேற்கே 5½ மைல். சுந்தரமூர்த்தி சுவாமிகள் சங்கிலி நாச்சியார்



பொருட்டுச் செய்த சத்தியம் தவறித் திருவாரூருக்குச் செல்ல எத்தனித்த போது இரண்டு கண்களுக்கும் அபாவம் நேரிட்டதன்றித் தேகத்தில் கொடிய பிணியும் உண்டாயிற்று. அவ்வுடற்பிணி இத்தலத்தில் நீங்கப்பெற்றார்.

**10.** திருநல்லூர்: கும்பகோணத்திற்கு அடுத்த சுந்தரபெருமாள் கோவில் ரெயில் ஸ்டேஷனிலிருந்து தெற்கே 2 மைல் தூரத்திலிருக்கிறது. சிவபெருமான் அப்பர் சுவாமிகளுக்குத் திருவடி சூட்டியருளிய தலம். சிவனடியார்களுக்குக் 'கந்தை கீளுடைகோவணம்' கொடுத்துவந்த அமர்நீதி நாயனார், மனைவி மக்களோடு முக்திபெற்ற திருப்பதி. இதை அப்பர் சுவாமிகள் 'நாட்கொண்ட தாமரை' என்ற தேவாரத்தில் சிறப்பித்துப் பாடியுள்ளார்கள்.

**11.** திருநன்றியூர்: மாயூரத்திற்கு வடக்கே 4 மைலிலுள்ள அநந்த தாண்டவபுரம் ஸ்டேஷனிலிருந்து வடகிழக்கே 2 மைல் தூரத்திலுள்ளது. இலக்குமி பூசித்தது.

**12.** திருநீடூர்: ஷை அநந்ததாண்டவ புரத்திலிருந்து தென்மேற்கில் 1 மைல் தூரத்திலிருக்கிறது. இந்திரன் பூசித்தது. முனையடுவார் நாயனார் அடியார்களுக்கு அமுது செய்வித்திருந்து முத்தி பெற்ற தலம்.

**13.** திருப்பழனம்: திருவையாற்றுக்குக் கிழக்கே 2 மைல் தூரம். ஸப்த ஸ்தான க்ஷேத்திரங்களில் இது இரண்டாவது. அப்பூதி யடிகள் அடிமைத் திறத்தினை அப்பர் சுவாமிகள் வியந்தோதிய தேவாரப் பதிகத்தையுடையது. அப்பூதி யடிகளின் பதியாகிய திங்களூர் இதனருகே யுள்ளது.

**14.** திருப்பாலைத்துறை. கும்பகோணத்திற்குத் தெற்கேயுள்ள பாபநாசம் ஸ்டேஷனிலிருந்து வடகிழக்கே 1 மைல். தாருகாவன ருஷிகள் அனுப்பிய புலியை யுரித்துச் சிவபெருமான் தரித்தருளிய தலம்.

**15.** புள்ளிருக்கு வேளூர் என்பது வைத்தீச்சுரன் கோயில். ரெயில் ஸ்டேஷன். சம்பாதி, ஜடாயு, இருக்குவேதம், முருகவேள், சூரியன் ஆகியோர் பூசித்தது. இவ்வாலயத்திலுள்ள முத்துக்குமார சுவாமி சந்நிதி மிகப் பிரபலமானது. கிருத்திகை தோறும் அடியார்கள் திரள் திரளாகச் செல்லுகிறார்கள்.

**16.** திருப்புன்கூர்: நந்தனார் சுவாமி தரிசனஞ் செய்ய நந்தி விலகிய தலம். கலிக்காம நாயனார் பல திருப்பணிகள் செய்த திருப்பதி. ஷை நாயனார் பொருட்டு இறைவன் மழை பெய்வித்த தலம். இது இத்தலத் தேவாரத்தில் ஓதப் பெற்றுள்ளது.

**17.** திருமயிலாடுதுறை என்பது மாயூரம். ரெயில்வே ஜங்க்ஷன். பார்வதி தேவியார் மயிலாகவிருந்து சிவபெருமானைப் பூசித்த தலம். இங்குக் காவிரியில் ஐப்பசி மாதத்தில் செய்யும் துலாஸ்நானம் மிகவும் விசேஷம்.

**18.** திருவியலூர்: கும்பகோணத்திற்குக் கிழக்கே 4 மைலும், திருவிடைமருதூருக்கு வடமேற்கே 3½ மைலு மிருக்கிறது. இதற்கு ஒரு மைலில் திருந்துதேவன் குடி இருக்கிறது. திருமங்கலக்குடியில் திருப்பணி செய்து இறந்துபோன ஒரு அடியவரை இத்தலத்திற்குக் கொண்டு வரும்போது அவர் மங்கலக்குடி தேவியார் திருவருளால் உயிர்த்தெழுந்த தலம் இத்திருவியலூர்.

---

## நன்கொடை

விழுப்புரம் தாலுகா சின்னதச்சூர் சு. ந. சபாபதி முதலியார் பாரியாள் ஸ்ரீமதி "அங்கம்மாள்" ஆங்கீரஸ௵ மார்கழி௴ 5௳ சஷ்டிமகம் சிவலோக பதவியடைந்ததை முன்னிட்டு 1-1-33-ல் நடந்த உத்தர கிரியையில் ஷை முனிசாமி முதலியார் அவர்கள் நமது தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்திற்கு மனமுவந்து அளித்த நன்கொடை. ரூ. 0-8-0

15-1-33 கலியாணம் பூண்டி, ம-ா-ா-ஸ்ரீ. நாட்டாண்மை. பால. சு. முத்து சதாசிவ முதலியார் தாலுக் போர்டு மெம்பர் அவர்கள், நமது சங்கப் பிரசாரகர் சைவசித்தாந்த தமிழ்ப் புலவர் அவர்கள் வரவேற்பு மூலம் மித்திரன் ஆதரவை ஞாபகார்த்தமாகத் தலைச் சங்கத்திற்கு மனமுவந்து அளித்தது. ரூ. 0-4-0

சிதம்பரம் தாலுக்கா லால் பேட்டை திரு. சின்ன தம்பி முதலியார் அவர்கள் தேகவியோக உத்தர கிரியா ஞாபகார்த்தமாக நமது தலைச் சங்கத்திற்கு நன்கொடையாக மனமுவந்தளித்தது. ரூ. 2-0-0

லால் பேட்டை ம-ா-ா-ஸ்ரீ கோவிந்தசாமி முதலியார் அவர்கள் தலைச்சங்கத்திற்கு, தமது புது இல்லம் முகூர்த்தம் கொண்ட கிரகப் பிரவேசத்தின் ஞாபகார்த்தமாக நன்கொடையளித்தது. ரூ. 0-4-0

5-1-32 நாட்டார் மங்கலம் க. அ. பிச்சாண்டி முதலியார் சங்கப் பிரசாரகர் வரவேற்பு நன்கொடையாக மனமுவந்தளித்தது. ரூ. 0-4-0

சிதம்பரம் தாலுகா மேல் புவனகிரி. பொ. ந. பொன்னம்பல முதலியார் அவர்கள் ஆங்கீரஸ௵ மார்கழி௴ 12௳ இரவு 8 மணிக்குச் சிவலோக பதவியடைந்ததை முன்னிட்டு 10-1-33-ல் நடந்த உத்தர கிரியை காலத்து, அவ்வூர் நாட்டாண்மைக்காரர் பெரியதன முதலிய செங்குந்த கனவான்கள் இனி நடக்கும் சுபாசுபங்களில் தலைச் சங்கத்திற்கு 4 அணா நன்கொடை தருவதாகத் தீர்மானஞ் செய்து முதல் நன்கொடையாகத் தந்தது. ரூ. 0-4-0

# மகாநாட்டு ஆலோசனைக் கூட்டம்

தினசரிப் பத்திரிகைகள் மூலம் முன்பே அறிவித்திருந்தபடி திருவாரூர் மடப்புரம் சித்திவிநாயகர் ஆலயத்தில் தென்னிந்திய செங்குந்தர் நான்காவது மகாநாடு. தஞ்சை ஜில்லாவில் இவ்வாண்டு கூட்டுவதைப்பற்றி ஆலோசித்து முடிவு செய்வதற்காக 6-2-33 திங்கட் கிழமை மாலை 2-மணிக்குச் செங்குந்தர்களுடைய பொதுக் கூட்டம் ஒன்று திருவாரூர் முனிசிபல் வைஸ் சேர்மென் திரு. தி. நா. சபாபதி முதலியார் அவர்கள் அழைப்பிற்கிணங்கக் கூடியது. உள்ளூர்ப் பிரமுகர்களுடன் சிக்கல், பொருள் வைத்த சேரி, மஞ்சட் கொல்லை, நாகப்பட்டணம், வாழுமங்கலம், மாப்பிள்ளைக் குப்பம், திருமருகல், வலங்கைமான், கொடவாசல், காட்டூர் முதலிய பல கிராமங்களிலிருந்து, அனேக செங்குந்த பிரதிநிதிகள் வந்திருந்தனர். கூட்டத்திற்குத் திரு. T. K. S. கலியாணசுந்தர முதலியார் அவர்கள் தலைமை வகிக்க, காஞ்சிபுரம் திரு. பி. செ. மாணிக்கவாசக முதலியார் அவர்கள் செங்குந்தர் நான்காவது மகாநாடும், தஞ்சை ஜில்லா செங்குந்தர்களும் என்ற விஷயமாக ஓர் சொற்பொழிவு ஆற்றினார்கள். அவ்வுபன்யாசத்தில் செங்குந்தர் கிளர்ச்சிக்கும் இயக்கத்திற்கும் தாயகமாயுள்ள தஞ்சை ஜில்லாவில் இம்மகாநாடு கூட்டப்போவது கேட்டு எல்லா ஜில்லாக்களிலும் உள்ள செங்குந்தர்களனைவர்களும் அளவிறந்த மகிழ்ச்சி கொண்டு பல நற்செய்திகளை அறிவித்துள்ளனரென்றும், அதற்கேற்ப மகாநாடு மிக்க சிறப்புடன் நடப்பதற்கான முயற்சிகளில் தீவிரமாக வேலை செய்து வெற்றியுற நடத்தவேண்டியது தஞ்சை ஜில்லாவின் கடமை யென்றும், மிக்க தெளிவாக எடுத்துக் கூறினார். பின்பு கீழ்க் கண்ட விஷயங்கள் அனைவராலும் ஏகமனதாகத் தீர்மானிக்கப் பெற்றன.

(1) தென்னிந்திய செங்குந்தர் நான்காவது மகாநாட்டை வரும் மார்ச்சு௴ 12—13 தேதிகளில் (ஆங்கீரஸ வருடம் மாசி௴ 29—30 தேதிகளில்) ஞாயிறு திங்கட் கிழமைகளில் தஞ்சை ஜில்லா சார்பாகத் திருவாரூரில் கூட்டவேண்டும்.

(2) சமூக மகாநாடு, வாலிபர் மகாநாடு, வர்த்தகர் மகாநாடு ஆக மூன்று மகாநாடுகள் அச்சமயம் நடத்தப்பட வேண்டும்.

(3) இங்கு விஜயஞ் செய்துள்ள கனவான்களனைவரும் மகாநாட்டு வரவேற்பு அங்கத்தினராகக் கருதப்பட வேண்டியதோடு இன்னும் பலரையும் சேர்த்துக்கொள்ள இவர்களுக்கு அதிகாரம் உண்டு.

(4) வரவேற்புச் சபை நிருவாகிகளாகக் கீழ்க் கண்டவர்கள் நியமிக்கப் பெற்றனர்.

திருவாரூர் முனிசிபல் சேர்மெனும், சென்னைத் தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்க ஸ்தாபகரும் செங்குந்தர் பிரபந்தத்திரட்டின் பதிப்பாளரும் பிரபல வியாபாரியும், மிராஸ்தாருமான திரு. தி. நா. சபாபதி முதலியார் அவர்கள் சமூக மகாநாட்டு வரவேற்புத் தலைவராகவும், மஞ்சட் கொல்லை மிராஸ்தார் திரு. R. விநாயக மூர்த்தி முதலியார் அவர்கள் வாலிபர் மகாநாட்டு வரவேற்புத் தலைவராகவும், திருநாகேஸ்வரம் மிராஸ்தாரும், பிரபல வியாபாரியுமான திரு வ. மு. ந. பொன்னம்பல முதலியார் அவர்கள் வர்த்தக மகாநாட்டு வரவேற்புத் தலைவராகவும், திருவாரூர் மிராஸ்தார் திரு. T. K. S. கலியாணசுந்தர முதலியார் அவர்கள் பொருள் காப்பாளராகவும், ஷை-யூர் மிராஸ்தார் திரு. S. K. M. முருகைய முதலியார் அவர்கள் பொதுக் காரியதரிசியாகவும், மாயவரம், கொரநாடு மிராஸ்தார் திரு. சி. த. அ. வீரப்ப முதலியார் அவர்கள் சமூக மகாநாட்டுக் காரியதரிசியாகவும், வலங்கைமான் தாலுக் போர்டு மெம்பர் திரு. A. A. S. குப்புசாமி முதலியார் அவர்கள் வாலிப மகாநாட்டிற்கும், நாகப்பட்டணம் முனிசிபல் கவுன்சிலர் திரு. K. K. நல்லமுத்து முதலியார் வர்த்தக மகாநாட்டிற்கும், காரியதரிசிகளாகவும் தேர்ந்தெடுக்கப் பெற்றனர்.

(5) சில வரவேற்பு அங்கத்தினர் சேர்ந்த வசூல் கமிட்டி யொன்று அமைக்கப் பெற்றது.

(6) மகாநாடுகளில் தலைமை வகிக்கக் கீழ்க் குறிக்கப் பெற்றவர்களைக் கேட்டுக்கொள்ள வேண்டுமென முடிவு செய்யப்பட்டது.

சமூக மகாநாட்டிற்குச் சென்னை பச்சையப்பன் கல்லூரி ஆங்கில போதகாசிரியரும், தலைச் சங்க அமைச்சரும், செங்குந்த மித்திரன் ஆசிரியருமான திரு. M. சண்முகசுந்தர முதலியார் எம்.ஏ., எல்.டி., அவர்களையும், வாலிப மகாநாட்டிற்குத் திருவனந்தபுரம் சைன்ஸ் காலேஜ் போதகாசிரியரான திரு. C. பன்னிருகைப் பெருமாள் முதலியார் பி.ஏ. பி.எல்., அவர்களையும், வர்த்தகர் மகாநாட்டிற்குக் கோயம்புத்தூர் ஸ்டேன்ஸ் மில் ஏஜெண்டும், பிரபல வியாபாரியுமான திரு. V. S. செங்கோட்டையா முதலியார் அவர்களையும் முறையே மூன்று மகாநாட்டிற்கும் தலைமை வகிக்கவும்,

தலைச்சங்கத்திற்கும் கல்வி நிதிக் காப்பாளர் சபைக்கும் தலைவரும் புதுவை வரவு செலவு இலாகா உபதலைவருமான திரு. ஆ. வே. முத்தையா முதலியார் பி. ஏ. பி. எல்., அவர்களைச் சமூக மகாநாட்டையும், திருவாரூர் முனிசிபல் சேர்மென் திரு. C. கோபால்சாமி முதலியார் அவர்களை வாலிப மகாநாட்டையும், திருப்பத்தூர் தாலுக் போர்டு தலைவரும், முனிசிபல் கவுன்சிலரும், ஜில்லா போர்டு அங்கத்தினருமான திரு. கா. அ. சண்முக முதலியார் அவர்களை வர்த்தக மகாநாட்டையும் திறந்து வைக்கும்படியும், குடியேத்தம் தாலுக்போர்டு தலைவரும் முனிசிபல் கவுன்சிலரும், ஜில்லாபோர்டு அங்கத்தினருமான திரு. M.A. வேலாயுத முதலியார் அவர்களைக் கொடியேற்று விழாவினை யாற்றவும் கேட்டுக்கொள்ள வேண்டுமென முடிவு செய்யப்பெற்றது.



## வசூல் கமிட்டி

**திருவாரூர்**

திரு. கனகசபை முதலியார், நாட்டாண்மை

,, ச. ராமசாமிமுதயார், முனிசிபல் கவுன்சிலர்

,, தி. மு. ந. முருகைய முதலியார்

**கொடவாசல்**

,, நெ. சா. தம்புசாமி முதலியார்

,, ஆ. தி. நடேச முதலியார்

**வலங்கைமான்**

,, சி. முருகைய முதலியார், நாட்டாண்மை

,, ஏ. அ. சுப்பிரமணிய முதலியார்

,, ம. நா. வீரப்ப முதலியார்

**மாரியம்மன் கோவில்**

,, ரெ. சி. காத்தமுத்து முதலியார்

,, கு. ம. ஆறுமுக முதலியார்

**அம்மாபேட்டை**

,, சி. வ. த. சம்பந்த மூர்த்தி முதலியார்

,, வீ. சொ. அண்ணாமலை முதலியார்

**திருநாகேஸ்வரம்**

,, வ. மு. ந. பொன்னம்பல முதலியார், நாட்டாண்மை

,, ராமசாமி முதலியார்

,, S. R. முத்துக்குமர முதலியார்

,, செ. க. மருதமுத்து முதலியார்

,, சோதி முதலியார்

**சுந்தரப் பெருமாள் கோவில்**

,, ச. ஆறுமுக முதலியார், நாட்டாண்மை

,, சொ. கோவிந்தசாமி முதலியார், நாட்டாண்மை

**ஐவர்பாடி**

,, சி. பரிமேலழக முதலியார்

**மாயவரம் கூறைநாடு**

,, சி. த. வீரப்ப முதலியார்

,, ச. கு. பாவாடை முதலியார்

,, தி. வயித்தியலிங்க முதலியார்

**செம்மனூர் கோயில்**

,, பொ. முத்து வேலாயுத முதலியார்

**மன்னார்குடி**

,, வ. சு. சி. த. காளிமுத்து முதலியார்

**சீகாழி**

,, சு. வெ. அப்பாதுரை முதலியார்

,, அ. பூ. ராஜு முதலியார்

,, சு. து. வீ. சிங்கார முதலியார்

**தந்தாலம்**

,, K. L. இராமலிங்க முதலியார்

**மணக்கால்**

,, செ. சாம்பசிவ முதலியார்

**தேவூர்**

,, ஆறு. மருதப்ப முதலியார்

**மேலப் பெரும்பள்ளம்**

,, S. V முத்துசாமி முதலியார்

**நாங்கூர்**

,, நா. சி. நாகலிங்க முதலியார்

,, ஆ. வீரப்ப முதலியார்

**திருவையாறு**

,, சி. நா. பழனியப்ப முதலியார்

**பண்டாரவாடை, நெடுந் தெரு**

,, ரெ. வெங்கடாசல முதலியர், நாட்டாண்மை

**வெங்காரம் பேட்டை**

,, A. ராமசாமி முதலியார்.

**மஞ்சட் கொல்லை**

,, தி. மு. அரு. தியாகராஜ முதலியார்

,, அ. மு. சொ. அம்பலவாண முதலியார்

**நாகப்பட்டணம்**

,, ரா. மு. நாகரத்தின முதலியார்

**பொருள்வைத்த சேரி**

,, பொ. நாராயண முதலியார்

,, பட்டாமணியம், முருகைய முதலியார்

,, நாகப்ப முதலியார்

**சிக்கல்**

,, மா. அ. நடேச முதலியார்

**திருமலைராஜன் பட்டணம்**

,, சா. ம. முருகைய முதலியார்

,, வீ. குரு. முத்தைய முதலியார்

,, ஆ. ரங்கநாத முதலியார்

,, சுப்புராய முதலியார்

**காரைக்கால்**

,, வீ. சு. க. சோமசுந்தர முதலியார்

,, ச. கோவிந்தசாமி முதலியார்

**வாழுமங்கலம்**

,, கா. முத்தைய முதலியார்

## மாதர் மகாநாடு பற்றிய வேண்டுகோட்குப் பதில்

இந்தியா தினசரிப் பத்திரிகையில் இம்மாதம் 14-ந் தேதி வெளியான இதழ்களில் "வரவேற்புக் கழகத்தார்க்கு ஓர் வேண்டுகோள்" என்ற தலைப்பின் கீழ்க் காஞ்சீபுரம் ஸ்ரீமதி அபிராமியம்மாள் அவர்களும் திருச்சி திரு சி. ராமசாமி அவர்களும் எழுதி யிருந்த வியாசங்களைப் பார்த்து மிக்க மகிழ்ச்சி யடைகின்றோம். பெண்கள் மகாநாட்டைக் கூட்டாமலிருப்பது உண்மையில் வருந்தத்தக்கதே யாகும். நமது முன்னேற்ற முயற்சி தீவிரமாய்ப் பலனளிக்காததற்கு இது ஓர் காரண

பெண்கள் மகாநாடு நடத்தாததற்கு வரவேற்புக் கழகத்தினரையோ அன்றி தலைச் சங்கத்தினரையோ குறை சொல்லுதற்கில்லை. இவர்கள் பெண்மணிகளை மறந்து விடவுமில்லை. பெண்களுக்கு அறிவையும் சீர்திருத்தத்தையும் வழங்க இவர்கள் பின்னடையவுமில்லை. இவ்வளவு இருந்தும் பெண்கள் மகாநாடு கூட்டாமைக்குக் காரணம் என்ன? முதலாவதாகப் பெண்களுக்கே அறிவையும், உலகானுபவத்தையும், சீர்திருத்தத்தையும் வழங்க வேண்டுமெனத் தலைச் சங்கத்தார் விரும்புகின்றனர். அதற்காகவே முதல் மகாநாட்டில் பெண்கள் மகாநாட்டையும் கூட்ட வேண்டுமென முயற்சித்தனர். ஆனால் மகாநாட்டில் தலைமை வகிக்கவும், தீர்மானங்களைக் கொணர்ந்து பேசவும் பெண்களில் எவரும் கிடைத்திலர். அறிவு நிறைந்த பல சமூகப் பெண்களைக் கொணர்ந்தாலும் அவர்களோடு கலந்திருந்து விஷயங்களைத் தீர்மானிப்பதற்கும் நமது பெண்களில் எவரும் முன் வந்திலர். நமது சமூகத்தில் படித்த பெண்கள் வெகு சொற்பமாகவே இருக்கின்றனர். அவர்களும் பொதுக்கழகங்களில் பேசுதற்குரிய நிலையில் இல்லை. இவைகளை யெல்லாம் நன்கு யோசித்த பின்பே தனியே பெண்கள் மகாநாட்டைக் கூட்டும் வசதி இல்லையாயினும் பெண்கள் சீர்திருத்தத்திற்கான தீர்மானங்களை அவர்கள் முன்னிலையிலேயே தீர்மானிக்க வேண்டுமென்றும், அவர்களும் இத்தகைய கூட்டங்களில் கலந்துகொள்ள வேண்டுமென்றும் கருதியே நமது மகாநாடுகளில் பெண்களுக்குத் தனியே இடமமைத்தும், பெண்கள் ஏராளமாய் மகாநாட்டுக்கு வருவதற்கான முயற்சியைச் செய்தும், கட்டணமின்றிக் கொட்டகையில் அனுமதித்து நடவடிக்கைகளில் கலந்து கொள்ளும்படிச் செய்தும், விஷயாலோசனைக் கமிட்டியில் அவர்களுக்குத் தனிப் பிரதிநிதித்துவம் வழங்கியும் வந்திருக்கிறோம். இப்படி இரண்டொரு மகாநாடுகளில் அவர்கள் கலந்து விஷயங்களைக் கவனித்து வரின் பின்பு தனியே பெண்கள் மகாநாடு கூட்ட இயலுமென்பது தலைச் சங்கத்தார் நோக்கம். இப்பொழுது காஞ்சீபுரம் அபிராமியம்மாள் எழுதிய விஷயத்தைப் பார்த்த பின்பு இனிப் பெண்கள் மகாநாட்டைத் தனியே கூட்டலாமென்ற தைரியம் எங்களுக்கு ஏற்பட்டுள்ளது. திருவாரூரில் இவ்வாண்டு மகாநாடு நடக்க வெகு சொற்ப நாட்களே இருப்பதால் இவ்வளவு சீக்கிரத்தில் அதற்கான தலைவர் முதலியவர்களைத் தேர்ந்தெடுத்தல் மிகவும் கஷ்டம். அதிலும் தஞ்சை ஜில்லாவில் வரும் பெண்களை வரவேற்றுப் பேசுதற்குரிய ஆற்றலும் அனுபவமும் வாய்ந்த பெண்மணிகள் எங்களுக்குத் தென்படவில்லை. இந்த நிலைமையில் இவ்வாண்டில் கூட்டுவதற்கு முடியுமென எண்ணுதற்கில்லை. அடுத்த ஆண்டில் வடாற்காடு ஜில்லாவில் மகாநாடு நடக்கப் போவதாலும், வடாற்காடு, செங்கற்பட்டு, சென்னை ஜில்லாக்களில் நம்மவர்கள் பெருந்தொகையாக இருப்பதாலும் பெருந்தொகையினராகப் பெண்கள் வருவதற்கு அடுத்த ஆண்டு சௌகரியமாக இருக்கும். சில மாதங்களுக்கு முன்பே பெண்கள் மகாநாட்டு விஷயமான எல்லா ஏற்பாடுகளும் செய்வதற்கு வசதிப்படும். எனவே அடுத்த மகாநாட்டில் பெண்கள் மகாநாட்டையும் கூட்டுவதற்கு முயற்சிக்க நாங்கள் தயாராக இருக்கிறோம். ஆனால் எங்களுக்கு இது விஷயத்தில் மிக்க தைரியத்தையும், உற்சாகத்தையும், ஊக்கத்தையும் உண்டாக்குவதற்கேற்ற முறையில் இம்மகாநாட்டிற்குப் பெண்மணிகளைப் பெருவாரியாக அழைத்து வரும்படி பிரதிநிதிகளை வேண்டுகிறோம்.

இவ்விஷயத்தை ஞாபகமூட்டிய இரு அன்பர்கட்கும், இதுபற்றி இன்னும் எமக்குக் கடித மூலம் அறிவித்துள்ள மற்றைய அன்பர்கட்கும் எமது நன்றியினைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

## தலைவர்கள் இசைந்தனர்

மேற்படி மகாநாட்டில் சென்னைப் பச்சையப்பன் கல்லூரி ஆங்கில போதகாசிரியரும், செங்குந்த மித்திரன் ஆசிரியருமாகிய திரு. ம. சண்முகசுந்தர முதலியார், M. A., L. T. அவர்கள் சமூக மகாநாட்டிற்கும், திருவனந்தபுரம் சையன்ஸ் காலேஜ் போதகாசிரியர் திரு. C. பன்னிருகைப் பெருமாள் முதலியாரவர்கள், B. A., B. L. வாலிபர் மகாநாட்டிற்கும், கோவை மில் ஏஜண்டு திரு. V. S. செங்கோட்டையா முதலியாரவர்கள் வர்த்தகர் மகாநாட்டிற்கும் தலைமை வகிக்க இசைந்து தங்கள் சம்மதத்தை அறிவித்து விட்டனர்.

குடியேற்றம் தாலூக்கா போர்டு தலைவரும், ஜில்லா போர்டு மெம்பரும், முனிசிபல் கவுன்சிலருமாகிய திரு. மா. அ. வேலாயுத முதலியாரவர்கள் கொடியேற்றுவிழாவினை யாற்றவும், சம்மதித்து விட்டனர். தலைச்சங்கத் தலைவரும் கல்விநிதிக் காப்பாளர் சபைத்தலைவரும் புதுவை அரசாங்க வரவு செலவிலாக்கா உபதலைவருமான திரு. ஆ. வே. முத்தையா முதலியாரவர்கள் சமூக மகாநாட்டுத் திறப்பு விழாவாற்றவும், திருப்பத்தூர் முனிசிபல் கௌன்சிலரும் தாலுக்கா போர்டு தலைவருமான திரு. கா. அ. சண்முக முதலியாரவர்கள் வர்த்தகர் மகாநாட்டுத் திறப்பு விழாவாற்றவும், திருவாரூர் முனிசிபல் சேர்மன் திரு. பாவா. கோபால்சாமி முதலியாரவர்கள் வாலிபர் மகாநாட்டுத் திறப்பு விழாவாற்றவும் இசைந்துள்ளனர்.

## செங்குந்தர் கோட்ட அமைப்பு

### கண்காட்சி ஏற்பாடு

வரவேற்புக் கழகத்தார் மகாநாட்டு வேலைகளைத் தீவிரமாய்ச் செய்து வருகின்றனர். மகாநாட்டிற்காகத் தனியே போர்டு ஹைஸ்கூல் மைதானத்தில் 'செங்குந்தர் கோட்டம்' என்ற பெயருடன் நாலாயிரம்பேர் அடங்கக் கூடியதாக ஓர் அழகிய கொட்டகை அமைக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.



செங்குந்தர் கோட்டத்தில் செங்குந்த மித்திரன் காரியாலயம், செங்குந்த மித்திரன் புத்தகசாலை, இந்தியா, தமிழ்நாடு, சுதேச மித்திரன், ஹிந்து இவைகளின் காரியாலயங்களும், புத்தகசாலை, வைத்தியசாலை முதலியனவும் ஏற்படுத்த இடம் அமைக்கப்படுகிறது.

கண்காட்சி ஏற்பாடு செய்யவும் வரவேற்புக் கழகத்தார் முடிவு செய்துள்ளனர். கண்காட்சிக்குச் சில இடங்களே ஒதுக்கப் பட்டிருக்கின்றன. எனவே முன்னதாக மனுச்செய்து கொள்வோருக்குமட்டும் இடம் அளிக்கப்படும். கண்காட்சிக்கு அளிக்கப்படும் இடத்திற்கு வாடகை ஒன்றும் வாங்கப் படமாட்டாது. கண்காட்சிக்குச் சாமான்களைக் கொண்டு வரவோ அனுப்பவோ விரும்புவோர் உடனே வரவேற்புக் கழகத்தார்க்கு மனுச் செய்து கொள்ள வேண்டுகிறோம்.

## தொண்டர்கள் பதிவு

மகாநாட்டிற்குத் தொண்டர்கள் பதிவுசெய்யப் பட்டு வருகின்றனர். எந்த ஜில்லாவிலிருந்தும் தொண்டர்கள் சேரலாம். தொண்டராகச் சேர விரும்புவோர் கூடிய விரைவில் "தொண்டர் படைத் தலைவர், தென்னிந்திய செங்குந்தர் நான்காவது மகாநாடு, விஜயபுரம் P. O. திருவாரூர்" என்ற விலாசத்திற்கு விண்ணப்பம் அனுப்பவேண்டும். சேர்க்கைக் கட்டணம் ஒன்றும் கிடையாது. விண்ணப்பங்களில் தொண்டர் பெயர், விலாசம், தந்தை பெயர், வயது உயரம், புரியும் தொழில், முன் மகாநாட்டு அனுபவ மிருப்பின் அதையும் குறித்தனுப்ப வேண்டும். விண்ணப்பங்களைத் தலைவர் பரிசீலனை செய்து 11-3-33-ல் தேர்ந்தெடுக்கப்பட்ட தொண்டர்களுக்கு அறிவிப்பார். அவர்கள் 5-3-33-ல் திருவாரூர் வந்து சேர்ந்துவிட வேண்டும். அதுமுதல் தினந்தோறும் பயிற்சி அளிக்கப்படும். தொண்டர்களாக வருவோர் 15 வயதிற்கு மேலும் 30 வயதிற்குள்ளு மிருப்பவர்களாயும் மகாநாட்டுப் பிரதிநிதிகட்கு யாதொரு சௌகரியக் குறைவும் ஏற்படாதபடி எல்லா உதவிகளும் செய்வதற்குத் தயாராக இருப்பவராயுமிருக்கவேண்டும். ஐம்பது தொண்டர்களுக்கு மட்டும் தொண்டர் உடுப்பு தரப்படும். தேசசேவையில் ஈடுபடத் தங்களைப் பழக்கிக்கொள்வதற்கு இது தக்க சந்தர்ப்ப மாதலின் அறிவும் பொது நல நோக்கமு முடைய செங்குந்த இளைஞர்கள் தொண்டர் படையில் சேர்ந்து மகாநாட்டை வெற்றியுற நடத்துவதற்குத் துணை புரிய வேண்டுகிறோம்.

## தொண்டர் படையில் சேர விண்ணப்பம்

தொண்டர் படைத் தலைவர் அவர்களுக்கு.

ஐயா,

1933-ம் ௵ மார்ச்சு௴ 12, 13 தேதிகளில் திருவாரூரில் நடைபெறப் போகும் செங்குந்தர் நான்காவது மகாநாட்டுத் தொண்டர் படையில் நான் சேர விரும்புகிறேன். தங்கள் அறிக்கையின்படி 5-3-33௳ முதல் திருவாரூரில் இருக்கும் பிரதிநிதிகட்கு என்னால் இயன்றவரை உதவி புரியவும் சித்தமாயிருக்கிறேன். ஆகவே என்னைத் தொண்டர் படையில் பதிவு செய்து கொண்டு உத்திரவு அனுப்ப வேண்டுகிறேன்.

இப்படிக்கு,<br>
பொதுச் சேவை புரிய விரும்பும்,<br>
(ஒப்பம்)<br>
விலாசம்.

பெயர்<br>
தந்தை பெயர்<br>
தொழில்<br>
வயது<br>
உயரம்

## இதர ஏற்பாடுகள்

பிரதிநிதிகள் தங்குவதற்கு வசதியான வீடுகள் ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்றன. தினந்தோறும் வரவேற்புக் கழகத்தார்க்குக் கிடைக்கும் கடிதங்களிலிருந்து குறைந்தது ஐயாயிரம் பிரதிநிதிகளுக்குமேல் வருவார்களெனத் தெரிகின்றது. வெளியூர்களிலிருந்து பிரதிநிதி டிக்கட்டுகளும், வரவேற்பு டிக்கட்டுகளும் அனுப்பும்படி ஏராளமாய்க் கடிதங்கள் வந்துகொண் டிருக்கின்றன. வசூல் கமிட்டியார் தஞ்சை ஜில்லாவிலுள்ள கிராமங்களில் வசூல் வேலையை மும்முரமாய்ச் செய்து வருகின்றனர். இதுவரை கீழ்க்கண்ட தொகை கையொப்பமாகி இருக்கின்றது.

### திருவாரூர்

| | ரூபா. |
|---|---|
| தி. க. சி. கல்யாண சுந்தர முதலியார் | 151 |
| தி. நா. சபாபதி முதலியார் | 201 |
| சொ. கா. மு. காயாரோகண முதலியார் | 101 |
| ச. ரூமசாமி முதலியார் | 35 |
| தி. கு. ந. நடேச முதலியார் | 25 |
| தி. மு. ரூம. முருகைய முதலியார் | 12 |

### மஞ்சக் கொல்லை

| | |
|---|---|
| அரு. சி. அமிர்தலிங்க முதலியார் | 101 |
| தி. மு. அரு. தியாகராஜ முதலியார் | 80 |
| ரூம. சு. ரூமசாமி முதலியார் | 60 |
| அ. மு. ச. கோ. அம்பலவாண முதலியார் | 50 |
| ரூம. பி. ராஜகோபால் முதலியார் | 60 |
| ச. பா. ரெ. விநாயக மூர்த்தி முதலியார் | 15 |
| இதர வசூல் | 20 |

### நாகப்பட்டணம்

| | |
|---|---|
| ரூம. மு. நாகரத்தின முதலியார் | 30 |
| கா. கா. நல்லமுத்து முதலியார் | 20 |
| இதர வசூல் | 10 |

### சிக்கல் பொரவச்சேரி

| | |
|---|---|
| பெ. நாராயண முதலியார் | 20 |
| இதர வசூல் | 24 |

திருமலைராஜன் பட்டணம்

| | |
|---|---|
| கு. சா. சு. சாமிநாத முதலியார் | 10 |
| க. மு. சு. சுப்பராய முதலியார் | 10 |
| சா. ம. முருகைய முதலியார் | 10 |
| வீ. குரு. சு. நாகப்ப முதலியார் | 10 |
| கு. வ. அ. வைத்தினாத முதலியார் | 10 |
| இதர வசூல் | 49 |

காரைக்கால்

| | |
|---|---|
| மு. ராம. மலைப் பெருமாள் முதலியார் | 15 |
| மா. மு. உ. உத்தண்டி முதலியார் | 10 |
| மு. ரு. சு. ராஜகோபால் முதலியார் | 10 |
| [illegible] | 57 |
| [illegible] வசூல் | 33 |
| [illegible]க மொத்தம் ரூபா. | 1238 |

15 18709
600 008

நன்கொடை

6-2-33 திருவாரூர் மடப்புரம் திருவாளர் ச. ராமசாமி முதலியார் அவர்கள் கிருகப் பிரவேச முகூர்த்தத்தில் தலைச் சங்கத்திற்கு மனமுவந்து வழங்கிய நன்கொடை ரூ. 2—0—0

சிலோன் M. U. P. சின்னசாமி முதலியாரவர்கள் கமுக வ ந்தைத் தோட்டத்தில் 6-2-33-இல் நடந்தேறிய திருமணங்களில் குருதக்ஷிணையாக வசூலித்தனுப்பியது ரூ. 2—8—0

ஷை திருமணத்தார் தனித்தனியே ஒவ்வொரு ரூபாய் நன்கொடை வழங்கியதை வேறொரு பக்கம் வெளியிட்டுள்ளோம்.

ஷை யார் மூலம் மா. மு. பெருமாள் முதலியார் நன்கொடை வசூல் அணா 0—8—0

## கிளர்ச்சி

மண[illegible] செங்குந்த வாலிப சங்கம்

24-[illegible]ல் நடந்தேறிய தேர்தலில் திருக்கோவி[illegible]ர் போர்டுமெம்பராகச் செங்குந்த குல திலகர் வை. ச. இராமலிங்க முதலியாரும், விழுப்புரம் தாலுக்கா போர்டுக்கு மெம்பராகச் சிறப்புற்ற குலாபிமானி கலியாணம்பூண்டி நாட்டாண்மை பால சு. முத்துசதாசிவ முதலியாரும் ஷை தாலுக்கா போர்டு மெம்பராக புதுப்பாளையம் அ. குப்புசாமி முதலியாரும் நியமிக்கப்பெற்றார்கள். இதுபற்றிச் செங்குந்த உலகம் நன்றி பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறது.

செங்குந்தர் சங்கம் கலவை

2-8-32 மாலை 7 மணிக்கு மேற்படி சங்கத்தின் பொதுக் கூட்டம் செங்குந்தர் பொது மடத்தில் தலைவர் திரு. A. S. சின்னசாமி ஐயர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. தலைவர் முன்னுரை முடிந்ததும் திரு. V. சதாசிவ ஐயர் சோமவார விரத மகிமையையும் நாம் எல்லோரும் செல்வ வாழ்வடையவேண்டிய சிறந்த வழி என்பதைப்பற்றியும் ஷை விஷயத்தை யொட்டி M. ஏகாம்பர முதலியாரும் பேசியபின் திரு. எ. முனிசாமி நமது சங்கமும் அதன் அவசியமும் என்பதைக் குறித்து பேசியதும் தலைவர் பின்னுரைகூற வந்தனோபசாரத்துடன் இரவு 9-30 மணிக்குக் கூட்டம் முடிவு பெற்றது.

29-9-32 அன்று மாலை 7 மணிக்கு மேற்படி சங்கத்தின் பொதுக்கூட்டம் மேற்படி இடத்தில் திரு N. குமாரசாமி முதலியார் அவர்கள் தலைமையில் நிகழ்ந்தது. அது போது கடவுள் வணக்கம் முடிந்ததும் A. முனிசாமி கல்வி என்பதைப்பற்றிப் பேசியபின் அதைப் பின்பற்றிச் சங்கத் தலைவர் A. S. சின்னசாமி முதலியார் பேசியதும் மேற்படியார் முடிவுரைக்குப்பின் இரவு 9 மணிக்கு வந்தன உபசாரத்துடன் கூட்டம் முடிவடைந்தது.

சின்னதச்சூர் செங்குந்த மகாஜனக் கூட்டம்

4-12-32 இரவு 7 மணிக்குச் செங்குந்தர் நடுவீதியில் ஸ்ரீமான் கனம் ஆனந்த துரைசாமி முதலியாரவர்கள் தலைமையிலும், எஸ். கந்தசாமி முதலியாரவர்கள் ஆதரவிலும் கூடிய செங்குந்தர் பொதுக் கூட்டத்தில் பின்வரும் தீர்மானங்கள் நிறைவேறின.

1 நமது ஊரில் ஒரு கிளைச்சங்கம் ஏற்படுத்தி அதைத் தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தோடு இணைக்க வேண்டும். 2 நமது செங்குந்த மித்திரனை ஒவ்வொருவரும் ஆதரிப்பதுடன் வாலிபரும் மாணவரும் மாதா மாதம் வரும் "மித்திரனை" கூட்டத்திடையே வாசித்துவரும் பழக்கம் செய்ய வேண்டும். 3. சுபாசுபங்களில் மித்திரனுக்கும் தலைச்சங்கத்திற்கும் நாலணாவுக்குக் குறையாத நன்கொடை யீதல் வேண்டும். 4. சைவ சமய சம்பந்தமான "தேவார திருவாசக திருப்புகழாகிய தமிழ் மறைகளை நமது மாணவர்கள் சோம சுக்கிர வாரங்களில் ஓதிவரக் கற்பிக்க வேண்டும். 5 நமது சிறுவர் சிறுமியர்களை 5 வயது முதல் 12 வயது வரைக் கட்டாயப் படிப்பின் மூலம் அவசியம் கண்காணிக்க வேண்டும்.

மேற்கண்ட தீர்மானங்கட்குப் பின், வண்டிப் பாளையம் இருசப்ப துரைசாமி முதலியார் அவர்கள் இன்னிசைக் கருவிகளுடன் இடையிடையே தேவார திருவாசகாதி அருட்பா வோத அரகர கோஷத்திடையே நமது சங்கப் பிரசாரகர் மிக்க கம்பீரத்துடன் "வீரவாகு தேவர் விஜயம் என்னும் அளக மஹாராஜன் பட்டாபிஷேகம்" என்பது பற்றி, கேட்போர் மனமுருகுமாறு சுமார் 4 மணி நேரம் பேசினார். தீபாராதனைக்குப் பின் பிரசாத விநியோகங்களுக்கு பிறகு அரகர ஆனந்த கோஷத்திடையே இரவு 11 மணிக்குக் கூட்டம் இனிது கலைந்தது.

உ

முருகன் துணை

அருணகிரிநாத முனீந்திரர் பெருமான்

பாடியருளிய

# தெய்வத் திருமறை

இறைவன் திருவருள் நிரம்பப்பெற்றுச் சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளியவை திருப்புகழ் முதலிய செஞ்சொற் பிரபந்தங்கள் என்பது உலகறிந்தபடியாம். அப் பிரபந்தங்களைக் கொண்டு சில ஆண்டுகளுக்கு முன் காஞ்சிபுரத்தில் 'தெய்வத் திருக் கோட்டம்' எனப் பெயரிய சபை யொன்றினை நிறுவி அக்காலத்துப் பெரியார்கள் முருகனை உபாசித்துவந்தனர். அப்பெரியார்களால் கீழ்க்கண்ட முறையில் மேற் கண்ட பிரபந்தங்கள் வரையறை செய்யப்பெற்றன. இந்த முறையில் அவர்கள் பாராயணஞ் செய்து எண்ணிறந்த பலன்களை அடைந்தனர் என்ப. அம்முறைப் பகுதி சண்முகப் பெருமான் திருமுகங்கள் ஆறினையும் சுட்டிக் காட்டுமென்பது வெள்ளிடைமலையாம். இவ்வரிய பெரிய அநுபூதித் திரட்டை அடியார்கள் அனைவரும் பாராயணஞ் செய்து அப்பெரியார்கள் எய்திய பெரும்பேற்றை அடையுமாறு அரும் பதவுரையுடன் சுவாமிகள் சரித்ரக்குறிப்போடு அச்சிற் பதிப்பித்து வருகின்றோம். 1933ஷ மேமீ கடைசிக்குள் வெளிவரும்.

## திருமறை முறை வகுப்பு

| | |
|---|---|
| முதற்றிருமுறை | படைவீட்டுத் திருப்புகழ் |
| இரண்டாந்திருமுறை | தனிவீட்டுத் திருப்புகழ் |
| மூன்றாந்திருமுறை | சிவன்வீட்டுத் திருப்புகழ் |
| நான்காந்திருமுறை | பொதுவீட்டுத் திருப்புகழ் |
| ஐந்தாந்திருமுறை | திருவகுப்பு |
| ஆறாந்திருமுறை | அந்தாதி, அலங்காரம், அநுபூதி |

ஏப்ரல்மீ கடைசிக்குள் முற்பணம் செலுத்துவோர்க்குப் புத்தகம் ரூபாய் 1-க்குக் கொடுக்கக்கூடும். வெளிவந்த பிறகு வாங்குவோர்க்கு விலை ரூபா 2. புத்தகம் டபுல் கிரௌன் அளவில் 16 பக்கங்கொண்ட 32 பாரம் உடையது. (512 பக்கம்) பளபளப்பான உயர்ந்த தாளில் அச்சிடப்பெற்று வருகிறது.

புத்தகம் கிடைக்குமிடம்:—

காஞ்சி நாகலிங்க முனிவர்,
காமாட்சி விலாசம்,
கீழ்ப்பாக்கம், சென்னை.

சென்னை
1—3—'33

குலப்பணிக்காக வருடம் ஒன்றரை ரூபாய்—ஒரு நாளைக்குத் தம்பிடிகூட வழங்காவிடில் குலத்திற் பிறந்ததனாற் பயனென்ன?

Registered No. M. 1514

# தென்னிந்திய செங்குந்தர் நான்காவது மகாநாடுகள்

தஞ்சை ஜில்லா திருவாரூரில் 1933-ஸு மார்ச்சுமீ
12—13உ ஞாயிறு திங்கட்கிழமைகளில் நடைபெறும்.

## தலைவர்கள்

கொடி யேற்றுவோர்: திரு. M. A. வேலாயுத முதலியார், குடியேற்றம்.

## சமூக மகாநாடு

திறப்போர் : திரு. A. V. முத்தைய முதலியார், B.A., B.L., புதுவை.
தலைவர் : திரு. M. சண்முக சுந்தர முதலியார், M.A., L.T., சென்னை.
வரவேற்புத் தலைவர் : திரு. T. N. சபாபதி முதலியார், திருவாரூர்.

## வர்த்தகர் மகாநாடு

திறப்போர் : திரு. K. A. சண்முக முதலியார், திருப்பத்தூர்
தலைவர் : திரு. V. S. செங்கோட்டையா முதலியார், கோவை.
வரவேற்புத் தலைவர் : திரு. V. M. N. பொன்னம்பல முதலியார்,
திருநாகேச்சுரம்.

## வாலிபர் மகாநாடு

திறப்போர் : திரு. பாவா கோபால்சாமி முதலியார், திருவாரூர்.
தலைவர் : திரு. C. பன்னிருகைப் பெருமாள் முதலியார், B. A., B. L,
திருவிதாங்கூர்.
வரவேற்புத் தலைவர்: திரு. R விநாயகமூர்த்தி முதலியார்,
மஞ்சட்கொல்லை.

## காரியதரிசிகள்

பொதுக் காரியதரிசி : திரு. S. K. M முருகைய முதலியார்,
திருவாரூர்
சமூக மகாநாட்டுக்கு : திரு. சி. த. அ. வீரப்ப முதலியார், மாயவர
வர்த்தகர் மகாநாட்டுக்கு : திரு. K. K. நல்லமுத்து முதலியார்,
நாகப்பட்டணம்
வாலிபர் மகாநாட்டுக்கு : திரு. A. A. S குப்புசாமி முதலியார்,
வெலங்கைமான்

## பொருட்காப்பாளர்

திரு. T. K. S. கலியாணசுந்தர முதலியார், திருவாரூர்.

This Journal is published by T. N. Sabapathi Mudaliar for the South Indian Senguntha Mahajana Sangam Madras, at 31, Armenian St., Madras, and is printed by A. Rangaswami at The Progressive Printers, 2-17, Coral Merchant St., Madras.

தமிழ்நாடு ஆவணக்காப்பக நூலகம்,
எழும்பூர், சென்னை-600 008.

தவணைத்தாள்.

செ. எண் : ப. எண் :

| வழங்கிய நாள். (1) | திரும்பிய நாள். (2) | வழங்கிய நாள். (1) | திரும்பிய நாள். (2) |
|---|---|---|---|
| | | | |

S.F. 259A-6—1,00,000—30-1-84.